
கல்கி



KALKI ஜூலை 15, 1951

4 அணா



துணிகளை அடித்துத் துவைக்காமலே வெண்மையாகவும்
பிரகாசமாகவும் சலவை செய்கிறது!


"உடை தயாரிப்பும் பூவேலையும்
ஸிங்கரில் சுலபம்"
"ஸிங்கர்
வாங்குவதற்கு முன்
நான் உடை விஷயத்தில்
என் செல்வத்தையே செலவு
மீந்துக் கொண்டிருந்தேன்.
இப்போது எனது ஸிங்கரால்,
சில மலிவான பொருத்திகளுடன்,
தைக்கவும், பொத்தான் துளைகளிட
வும் பூவேலைசெய்யவும் முடிகிறது"
புகழ் வாய்ந்த "S" குறியிட்ட
உங்கள் பக்கத்து ஸிங்கர்
கடை, எவ்வித பிரதிபலனு
மின்றி புதியபாணிநீ
கலை இயக்கிக்
காட்டும்.
ஸிங்கர் ஸௌயிங் மெஷின் கம்பெனி.
LAS. (B)



அந்த யௌவனமான சரும சுகத்தை நீங்களும் நிரந்தரமாகப் பெறலாம்!


புதிய பரிமளத்துடன் கூடிய காந்தி, ஸ்நானத்தை இன்பமயமாக்கி சருமத்தை குளுமையாக வைத்து புத்துணர்வளிக்கிறது.

காந்தி வெறும் ஒரு ஸ்நான சோப் மட்டுமல்ல. நீங்கள் மிகவும் விரும்பும் மிருதுவான, ஆரோக்கிய மயமான யௌவன எழிலையும் மீண்டும் அளிக்கும் சோப்.

காந்தி

டாய்லட் சோப்

ஸ்வஸ்திக்கின் தொடர்ந்து வேலை செய்யும் சோப் இயந்திரத்தில் தயாரிக்கப்படுகிறது. இவ்வகை இயந்திரம் ஆசியாவிலேயே இது ஒன்றுதான்.





ஸ்வஸ்திக்கின் பலவகை தயாரிப்புகளில் இவைகளும் உள்ளன:

மாயா அழகு சோப்
777 சலவை சோப்
ஸ்வஸ்திக் வாசனை ஆமணக் கெண்ணெய்
கோவலின் பிராண்டு வனஸ்பதி

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்

விற்பனை டெப்போக்கள்:

பெங்களூர் ஸிடி	மதராஸ்	நவ்ஸரி : மந்திப்பேட்டை
ஆர்காடு ஸ்ரீநிவாஸாச்சார் ரோடு	14, லிங்கி தெரு, ப்ராட்வே	ஹைதராபாத் (Dn.)
கொச்சி	விசாகப்பட்டணம்	B-2, பிளாக் 4, ஷா ப்ளே
கல்வத்தி ரோடு	20-125, தாம்ஸன் தெரு	டேம்பாஷ், கந்தான் பஜார்



விநியோகஸ்தர்கள் :


சென்னை : கே. எஸ். பிக்சர்ஸ், சென்னை 1	மதுரை, ராமநாதபுரம் & திருநெல்வேலி : ராமநாதன் பிக்சர்ஸ், காரைக்குடி	சேலம் : ராஜா பிலிம்ஸ் சர்க்யூட் லிமிடெட், பொள்ளாச்சி
வட, தென் ஆற்காடு, செங்கல்பட்டு & சித்தூர் ஜில்லாக்கள் : கீதா பிக்சர்ஸ், குடியாத்தம்	கோயமுத்தூர் & நீலகிரி : ஸ்ரீ ஆறுமுகம் பிக்சர்ஸ், பொள்ளாச்சி	மைசூர் : விஜய் ஸ்ரீநாத் பிக்சர்ஸ், பெங்களூர் சிட்டி
		எம். எம். எஸ் : பஜாஜ் பிரதர்ஸ், பம்பாய்

பொருள் அடக்கம்

கல்கி

மலர் 10 இதழ் 50	1951 ஜூலை 15	கர ஹெ ஆனி 31உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



2

கல்கி

மலர் 10 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 50

உங்கள் வோட்டு யாருக்கு?

முன்னொரு காலத்தில் தமயந்திக்குச் சுயம்வரம் நடந்தபோது இந்திரன், சந்திரன், சூரியன், வருணன் முதலிய தேவர்கள் பூலோகத்துக்கு வந்து தமயந்தியைப் பேட்டி கண்டு, "அரசகுமாரி! உன்னுடைய வோட்டை எங்களில் ஒருவருக்குத் தர வேண்டும்!" என்று கேட்டார்கள். அதற்குத் தமயந்தி, "தேவர்களே! என்னுடைய வோட்டை நள மகாராஜனுக்கே கொடுப்பதாக நான் மனதிற்குள் சங்கல்பம் செய்துகொண்டு விட்டபடியால் உங்களுக்குக் கொடுக்க இயலாது; அதற்காக மிகவும் வருந்துகிறேன்!" என்று சொன்னாள். அத்துடன் தேவர்கள் விட்டு விடவில்லை. அந்த நள மகாராஜனையே தங்களுக்குத் தேர்தல் ஏஜெண்டாகப் பிடித்தார்கள். "தமயந்தியின் வோட்டை எங்களில் ஒருவருக்கு வாங்கிக் கொடு!" என்று சொல்லித் தூது அனுப்பினார்கள். தமயந்தி அப்போதும் அசையவில்லை. "கேளீர், நள மகாராஜனே! ஓரொரு பூவுலக மனிதருக்கு என்னுடைய வோட்டைக் கொடுப்பதாக உறுதி கொண்டு விட்டபடியால் இந்திராதி தேவர்களுக்கு என் வோட்டுக் கிடைக்காது!" என்று தமயந்தியானவள் கண்டிப்பாகச் சொல்லி விட்டாள்.—இந்தப் பழைய புராணக் கதை அனைவரும் அறிந்த கதையே யல்லவா?

நேற்றைய தினம் ஸ்ரீ பொதுஜன ஸ்வாமி அவர்கள் நம்மிடம் வந்து கொரியா யுத்த நிறுத்தம், காஷ்மீர் மத்தியஸ்தம், ஈரான் புகைச்சல் முதலியவைகளைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தபோது இடை நடுவிலே நாம், "உலக விஷயங்கள் இருக்கட்டும்; வரப்போகும் பொதுத் தேர்தலில் உமது வோட்டை யாருக்குக் கொடுப்பதாக உத்தேசம்?" என்று கேட்டோம்.

"சந்தேகம் என்ன? எமது வோட்டு நமது நேரு மகாராஜாவுக்குத்தான்!" என்றார் ஸ்ரீ பொதுஜன ஸ்வாமி.

"நேருஜியின் பெயரோடு மகாராஜா என்ற பட்டத்தைச் சேர்த்துச் சொல்கிறீரே? இது நேருஜியின் காதில் விழுந்தால் உமது சிண்டைப் பிடித்து உலுக்கி விடுவாரே?" என்றோம்.

"சிண்டு இருந்தால்தானே அதைப் பிடித்து உலுக்குவார்? நிதி மந்திரி, ரயில் மந்திரி, தபால் மந்திரி எல்லாருமாகச் சேர்ந்துதான் என் தலையை மழுங்க மொட்டை அடித்து விட்டார்களே?" என்று சொல்லி ஸ்ரீ பொதுஜனம் தமது காந்திக் குல்லாவை எடுத்துவிட்டு மொட்டைத் தலையைச் சுட்டிக் காட்டினார்.

"அப்படி யிருந்துமா நீர் நேருஜிக்கே உமது வோட்டைக் கொடுப்பதாகச் சொல்கிறீர்?" என்றோம்.

"அதனால் என்ன? தமயந்தியின் சேலையில் பாதியைக் கிழித்து எடுத்துக் கொண்டு அவளைக் காட்டிலே பரிதவிக்கவிட்டு விட்டு நள மகாராஜன் ஓடி விட்டான்! அப்படியும் தமயந்தி அவளுடைய வோட்டை நள மகாராஜனுக்கே கொடுக்க வில்லையா?"

"ரொம்ப சரி! அந்த உதாரணத்தை நெடுகிலும் நீட்டிவிட வேண்டாம். நளனைப் போல் நேருஜி ஒரு நாளும் ராஜ்யத்தைச் சூதாட்டத்தில் பணயம் வைத்து இழந்து விட மாட்டார். தெரியு மல்லவா?"

"மாட்டவே மாட்டார்! காஷ்மீரை எப்படிக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார், பாருங்கள்! கொரியா யுத்த சங்கடத்தில் அகப்பட்டுக் கொள்ள முடியாது என்று எவ்வளவு கண்டிப்பாய்ச் சொல்லி விட்டார்? அப்படிப் பட்டவருக்கு என் வோட்டைக் கொடாமல் வேறு யாருக்குக் கொடுப்பது?"

"இந்திரன்—சந்திரன் வந்து கேட்டாலும் கொடுக்க மாட்டீராக்கும்!"

"இந்திரன் - சந்திரன் மட்டும் என்ன! பிரம்மா - விஷ்ணு - சிவன் ஆகிய மும்மூர்த்திகளே வந்து கேட்டாலும் கொடுக்க முடியாது!......" என்று ஸ்ரீ பொதுஜனம் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, வான விமானத்தில் யார் வந்து இறங்கினார்கள் என்று நினைக்கிறீர்கள்! சாக்ஷாத் பிரம்மா - விஷ்ணு - சிவன் ஆகிய மும்மூர்த்திகளும் வந்து இறங்கினார்கள்!

மூன்று பேரும் ஒரே குரலாக "ஐயா, பொதுஜன ஸ்வாமி! உம்முடைய வோட்டை எங்களில் ஒருவருக்குக் கொடுக்க வேண்டும்! யாருக்குக் கொடுத்தாலும் சரி!" என்றார்கள்.

"மும்மூர்த்திகளே! இந்தக் காரியத்தில் உங்களுடைய ஒற்றுமையை ரொம்பவும் மெச்சினேன். ஆனால் என்னுடைய வோட்டை நேருஜிக்கே கொடுப்பதென்று தீர்மானித்திருப்பதால் உங்களில் யாருக்கும் கொடுக்க இயலாது!" என்றார் பொதுஜனம்.

"நேருவுக்கா கொடுக்கப் போகிறீர்! அவருடைய நாலு வருஷ நிர்வாகத்தில் அப்படி என்னத்தைச் சாதித்து விட்டார்! அவரே ஒப்புக் கொண்டிருக்கிறாரே, தமது ஆட்சியில் குற்றங் குறைகள் ரொம்ப உண்டு என்று! சில நாளைக்கு முன்பு வந்த அவருடைய அறிக்கையை நீர் படிக்கவில்லையா!"

"பிரம்மதேவரே! உம்முடைய காரியம் மட்டும் எப்படி! இந்தப் பூலோகத்தை நீர் படைத்தீரே, இதில் குற்றங் குறைகள் இல்லையா!" என்று பொதுஜனம் கேட்டதும் பிரம்மா திணறிப் போய்விட்டார்.

"உம்முடைய தந்தை மகாவிஷ்ணு மட்டும் தமது காத்தல் தொழிலைச் சரியாகச் செய்கிறாரா! செய்கிறதாயிருந்தால் 'மரத்தை நடுங்கள்; வனத்தை வளருங்கள்' என்று கனம் முன்ஷி எங்கள் பிராணனை ஏன் வாங்குகிறார்! இன்னும் பரமசிவன் விஷயந்தான் என்ன! அவர் சம்ஹாரத் தொழிலைச் சரிவரச் செய்கிறாரா! செய்திருந்தால் கொரியாவில் இன்னும் சில கொரியர்கள் உயிரோடு மிச்சம் இருப்பது எப்படி! அணுகுண்டைப் போட்டுக் கொரியர்களைக் கூண்டோடு கைலாசம் கொண்டு போயிருந்தால் அல்லவா பரமசிவனுடைய வேலை சரிவர நடந்தது என்று சொல்லலாம்! மும்மூர்த்திகளாகிய உங்களுடைய நெடுநாளையக் காரியங்களிலேயே இவ்வளவு குறைகள் இருக்கும்போது, நேருஜியின் நாலு வருஷ நிர்வாகத்தில் குறைகள் இருப்பதில் வியப்பு என்ன! ஆனால் உங்களுக்கும் நேருஜிக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. அவர் தம் நிர்வாகத்தில் நன்மை நடந்திருப்பதாகவும் சொல்லுகிறார்; குற்றங் குறைகள் இருப்பதாகவும் ஒப்புக் கொள்கிறார். நீங்களோ குறைகளை ஒப்புக்கொள்ள மாட்டீர்கள். மக்கள் அநுபவிக்கும் துன்பத்துக்கு விதியின் பேரில் பாரத்தைப் போட்டுப் பொறுப்பைக் கழிக்கப் பார்ப்பீர்கள். மேலும் பேசினால், பரமசிவன் நெற்றிக் கண்களைத் திறந்து எரித்து விடுவேன் என்பார். ஆகையால், எது எப்படியிருந்தாலும் நேருஜிக்கே என் வோட்டு! வேறு யாருக்கும் கிடைக்காது!" என்று ஸ்ரீ பொதுஜனம் கண்டிப்பாகச் சொல்லி விடவே, மும்மூர்த்திகள் அவசரமாகத் தங்கள் டிக்கட் இல்லாப் பிரயாணத்தைத் தொடங்கினார்கள்.

அவர்கள் சென்றபிறகு நாம் பொதுஜனத்தைப் பார்த்து, "உம்மிடம் மும்மூர்த்திகளே இந்தப் பாடுபட்டுப் போனார்களே! கிருபளானி—பிரகாசம் முதலியோர் உம்மிடம் வந்து வோட்டுக் கேட்டுப் பிழைப்பது ஏது!" என்று சொன்னோம்.

"அதைப்பற்றிக் கவலை வேண்டாம்! அவர்களுக்கு அபாயம் ஒன்றும் நேராது. பேஷாக வந்து வோட்டுக் கேட்கட்டும். கேட்பதற்குத் தடை ஒன்றுமில்லை. பூரண உரிமை உண்டு. ஆனால் எமது வோட்டு நேருவுக்குத்தான்!" என்றார் பொதுஜனம்.

"ஸ்வாமிகளே! நேருவின் அறிக்கையை நீர் நிஜமாகவே படித்தீரா!"

"படிக்காமல் என்ன! படித்தேன். சுதந்திரம் வந்ததும் வராததுமாய் நேரு சர்க்கார் எவ்வளவு பிரம்மாண்டமான பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டி வந்தது என்பதைப் படித்தபோது எனக்கு மூச்சே நின்று போய் விட்டது. எப்படியோ சமாளித்துக் கரையேறி விட்டார்கள். ஆகையால், அடுத்த ஐந்து வருஷத்தில் தேச க்ஷேமத்துக்குரிய முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தலாம் அல்லவா!"

"செலுத்தலாம். நேருஜி அப்படிக் கவனம் செலுத்துவார் என்றும் எதிர்பார்க்கலாம். ஆனால், நேருஜியின் அறிக்கையில் கடைசிப் பகுதியைப் படித்தீரல்லவா!"

"யோக்கியர்களாகவும் திறமையுள்ளவர்களாகவும் அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறாரே, அதை நன்றாக நாலு தடவை படித்தேன்."

"அந்த மாதிரி நடந்தால் விசேஷந்தான். நடக்கும் என்று தோன்றுகிறதா!"

"அது விஷயத்திலேதான் மும்மூர்த்திகளைப் போல நாமும் தலைவிதியின் பேரில் பாரத்தைப் போட வேண்டியதாயிருக்கிறது. எந்தத் தொகுதிக்கு எந்த அபேட்சகர் வந்து லபிக்கிறாரோ, நமக்கு என்ன தெரியும்!"


"அதுதான் நாமும் யோசித்தோம். 'நேருஜிக்கே நமது வோட்டு' என்று சொல்லிக் கொண்டிருக்கிறீரே! நேருஜி ஒரு தொகுதியில் தானே அபேட்சகராக நிற்க முடியும்! பாக்கி மூவாயிரத்துச் சொச்சம் தொகுதிகளிலும் மற்றவர்கள்தானே நின்றாக வேண்டும்!"

"நேருஜி ஒப்புக்கொண்ட காங்கிரஸ் அபேட்சகர் யாராயிருந்தாலும் அந்த அபேட்சகருக்குக் கொடுக்கும் வோட்டு நேருஜிக்குக் கொடுக்கும் வோட்டுத்தான். அந்த அபேட்சகரிடம் நேருஜி குறிப்பிடும் குணாதிசயங்களும் தகுதியும் இருந்து விட்டால் நம்முடைய அதிர்ஷ்டம். இல்லாவிட்டால் நம் தலைவிதி...!"

"பொதுஜனஸ்வாமி! அப்படித் தலைவிதியின் பேரில் அடியோடு பாரத்தைப் போட்டு விட வேண்டாம். அது ஜனநாயகக் கொள்கைக்கே விரோதம்."

"இங்கிலாந்து முதலிய தேசங்களிலும் ஜனங்கள் கட்சி அபேட்சகர்களுக்கே வோட்டுக் கொடுக்கிறார்கள். ஆனால் கட்சி அபேட்சகர்கள் நியமனம் ஆவதற்கு முன்பே அந்தக்

வேண்டாம், அபாயம்!



"பிரதம மந்திரி வாய்ப் பேச்சினால் எவ்வளவு வேண்டிக் கொண்டாலும் வேலை நிறுத்தத்தை நாங்கள் நிறுத்த முடியாது." —ஜெயப்பிரகாஷ்

தொகுதி வோட்டர்கள் தங்களுக்குப் பிடித்த கட்சி அபேட்சகர்கள் யார் என்பதை மேலே யுள்ள தலைவர்களுக்குத் தெளிவாகத் தெரிவித்து விடுவது வழக்கம். ஒரு தொகுதியில் முன் தடவை பிரதிநிதியாயிருந்தவர் தம் கடமையைச் சரிவர செய்திராவிட்டால், அவர் பேரில் ஏதேனும் புகார் இருந்தால், மறு தடவை அவரைக் கட்சித் தலைவர்கள் அபேட்சகராக நியமிக்க முடியாது. நமது நாட்டிலும் இத்தகைய ஜனநாயக முறை அமுலுக்கு வர வேண்டும். அந்தந்தத் தொகுதியில் காங்கிரஸ் அபிமானமுள்ள வோட்டர்கள் அபேட்சகர்களைப் பற்றித் தங்கள் அபிப்பிராயத்தை வற்புறுத்தித் தெரிவிக்க வேண்டும். சோம்பேறி ராமர்களையும், ஊழல் நாதர்களையும், லஞ்ச கேசரிகளையும் காங்கிரஸின் பெயரால் அபேட்சகர்களாக நியமிக்க அநுமதிக்கக் கூடாது. இதற்குரிய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.''

''நாம் என்ன முயற்சி செய்து என்ன பிரயோஜனம்! நேருஜியின் காதில் போய் எட்ட வேண்டாமா!''

''அவர் காதில் எட்டும் அளவுக்குப் பலமாகச் சத்தம் போட வேண்டியதுதான்.''

''அப்படி மூவாயிரத்துச் சொச்சம் தொகுதிகளிலும் சேர்ந்து சத்தம் போட்டால் நேருஜியின் காது செவிடுபட்டுப் போய்விடும். வேண்டாம், வேண்டாம். அதைக் காட்டிலும் தலை விதியின் பேரிலும் மாகாணத் தேர்தல் கமிட்டியின் பேரிலும் பாரத்தைப் போட்டு விடுவதே நல்லது. எது எப்படியானாலும், நேருஜிக்கே நமது வோட்டு! நம்பினோர் கெடுவதில்லை, நாலு மறை தீர்ப்பு!'' என்று சொல்லி விட்டுப் பொதுஜனம் போய்ச் சேர்ந்தார்.

அவருடைய கொள்கை சரியில்லை யென்று யார் சொல்ல முடியும்!

அருமையான ஆரம்பம்

' வாய்ச் சொல்லில் வீரரடி!'' என்று பாரதியார் மிகப் பொருத்தமாகப் பாடிவிட்டுப் போனார். எந்த நல்ல காரியத்தையும் ஆதரித்து வீராவேசமாக மேடைப் பிரசங்கம் செய்து விட்டுப் போவோரும் உண்டு. எந்த நல்ல காரியமானாலும் அதை எதிர்த்துக் குட்டிச் சுவராக்குவதற்கு வாய்ச் சொல் வீரத்தைப் பயன்படுத்துவோரும் உண்டு.

வாயினால் பேசியதைக் காரியத்தில் நிறைவேற்றுதல் மிக அருமை. வாய்ப்பேச்சு இல்லாமல் நல்ல காரியத்தைச் செய்து முடிப்பது அருமையிலும் அருமை.

ஹாஸ்ய நடிகர் ஸ்ரீ கே. சாரங்கபாணி, நாடக ஆசிரியர் ஸ்ரீ எஸ். டி. சுந்தரம் முதலிய கலை அன்பர்கள் ''புதுமைப் பித்தன்'' குடும்ப சகாய நிதிக்காக நாளது ஜூலை 4-ஆ ''மனிதனும் மிருகமும்'' என்னும் நாடகத்தைச் சிறப்பாக நடித்தார்கள். வசூலான தொகை ரூ. 835 அன்று நாடகத்துக்குத் தலைமை வகித்த ''கல்கி'' ஆசிரியரிடம் அளிக்கப்பட்டது. கனசாலை ஆசிரியராக நடித்த ஸ்ரீ கே. சாரங்கபாணியையும், வைத்தியக்கார ஆஸ்பத்திரி டாக்டராக நடித்த ஆசிரியர் எஸ். டி. சுந்தரத்தையும் வேஷத்துடன் படத்தில் காணலாம்.



''புதுமைப் பித்தன்'' தினம் ஜூலை மீ 2 ஆ சென்னையிலும் தமிழ்நாட்டில் பல இடங்களிலும் கொண்டாடப்பட்டது. சென்னையில் கனம் பக்தவத்ஸலம் அவர்களின் தலைமையில் கூட்டம் சிறப்பாக நடந்தது. பேராசிரியர் வ. ரா. முதலிய பிரபல எழுத்தாளர்களும், ஸ்ரீ அனகேசன் எம். பி. போன்ற நல்ல ரஸிகர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். புதுமைப்பித்தனின் கற்பனைத் திறனையும் இலக்கிய ரஸனையையும் பற்றிப் பேசினார்கள். ஆதரவற்ற நிலையிலுள்ள புதுமைப்பித்தன் குடும்பத்துக்கு உதவி நிதி வசூலிக்கக் கமிட்டியும் நியமிக்கப்பட்டது.

வெறும் வார்த்தையா யிருந்ததைக் காரியத்தில் தொடங்கி நடத்த வழி காட்டியவர்கள் ஸினிமா நடிகர் ஸ்ரீ சாரங்கபாணியும், நாடகாசிரியர் ஸ்ரீ எஸ். டி. சுந்தரமும். ஜூலை மீ 4 ஆ இவர்கள் ''மனிதனும் மிருகமும்'' என்னும் நாடகத்தை நடத்தி அதன் வசூல் தொகை ரூ. 835 'புதுமைப்பித்தன்' குடும்ப சகாய நிதிக்கு அளித்தார்கள்.

மனிதன் பணத்தாசையினாலும் அதிகார மோகத்தினாலும் எப்படிப் படிப்படியாக மிருகப் பிராயம் அடைந்து கொடிய செயல்கள் புரிகிறான் என்பதையும், அதே சமயத்தில் ஆத்ம சக்தியுள்ள இன்னொரு மனிதன் அக்கொடுமைகளை யெல்லாம் எப்படித் தாங்கி நின்று வெற்றி பெற முடியும் என்பதையும் விளக்கும் நாடகம் ''மனிதனும் மிருகமும்'' என்பது. சக்தி வாய்ந்த சம்பாஷணைகளும், நெருக்கடியான நாடக கட்டங்களும், சோகமும் ஹாஸ்யமும் ததும்பும் காட்சிகளும் நிறைந்த இந்தச் சிறந்த நாடகத்தை ஸ்ரீ கே. சாரங்கபாணி முதலிய நடிகர்கள் அருமையாக நடித்தார்கள். ''புதுமைப் பித்தன்'' போக்கில் பெரிதும் அமைந்திருக்கும் இந்த நாடகம் அவருடைய ஆவியைப் பூரிக்கச் செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை. நாடகாசிரியருக்கும் நடிகர்களுக்கும் நம் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வாருங்கள், டாக்டர்வாள்!

சுதந்திர இந்தியாவில் நாம் அன்னிய நாடுகளுக்கு அனுப்பிய தூதர்களுக்குள்ளே ஸ்ரீ பெனகல் நரசிங்கராவ் முதன்மை ஸ்தானம் வகிக்கிறார். அடுத்தபடியாக நம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் இந்தோனேஷியா நாட்டில் செய்த சேவையைக் குறிப்பிட வேண்டும். அவருடைய தூது முதல்தர வெற்றியடைந்தது என்பதை நாம் அறிவோம்.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் இந்திய அரசியலில் ஈடுபடும் நோக்கத்துடன் இந்தோனேஷியா தூதர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டுத் திரும்பி வந்திருக்கிறார். தூதர் வேலையை ராஜிநாமா செய்வதற்குப் பண்டித நேருவிடம் அநுமதி பெறுவதே மிகக் கஷ்டமாய்ப் போய்விட்டது. டாக்டர் சுப்பராயன் அவர்களுடைய வேலை அவ்வளவாக நேருஜிக்குத் திருப்தி அளித்திருந்தது.

திரும்பி வந்திருப்பவரை "வாருங்கள், டாக்டர்வாள்! வாருங்கள்!" என்று நாம் மனப் பூர்வமாக வரவேற்கிறோம். இந்திய அரசியலில் டாக்டர் சுப்பராயன் அவர்களுக்குச் சிறந்த இடம் இருக்கிறது. அவருடைய சேவைக்கு அவசியமும் நிரம்ப இருக்கிறது. சென்னை மாகாண அரசியலில் டாக்டர் சுப்பராயன் மறுபடியும் ஈடுபட்டால் அது இம் மாகாணத்தின் அதிர்ஷ்டம் என்று சொல்லலாம். ஏனெனில் அறிவாற்றலும், நிர்வாகத் திறமையும், அரசியல் அநுபவமும் வாய்ந்த தேச பக்தர்களின் சேவை சென்னை மாகாணத்துக்கு இப்போது அவசியம் தேவை.

அவ்வாறின்றி டாக்டர் சுப்பராயன் அகில இந்திய அரசியலில் ஈடுபட்டு மத்திய பார்லிமெண்டுக்குப் போவதாயிருந்தால், அதுவும் ஒருவிதத்தில் நல்லதுதான். நமது முதிய பெரிய தலைவர்களான கனம் ராஜாஜி அவர்களும், கனம் எஸ். கோபாலசாமி ஐயங்கார் அவர்களும் இந்த வருஷத்தோடு தங்கள் தேசத் திருப்பணியைப் பூர்த்திசெய்து ஓய்வு எடுத்துக் கொள்ளப் போவதாகச் சொல்லி வருகிறார்கள். அவர்கள் புதுடில்லியில் பெரிய பதவிகளில் இருப்பது நாட்டுக்கு நல்லது, நமக்கும் பெருமைதான். ஆயினும் தள்ளாத முதுமைப் பிராயம் அடைந்தவர்களை எத்தனை நாள்தான் நாம் வேலை வாங்குவது! அது அநீதி, கொடுமை என்றுகூடச் சொல்லலாம்.

அப்பெரியார்கள் திரும்பி வந்துவிடக் கூடிய நிலையில் டாக்டர் சுப்பராயன் போன்ற திறர் ஒருவர் இந்திய சர்க்காரில் பணி செய்து நம் மாகாணத்தின் கௌரவத்தை உயர்த்தமுடியும்.

எனவே, அயல் நாட்டில் பணி செய்து புகழுடன் திரும்பி வந்திருக்கும் டாக்டர் சுப்பராயன் அவர்களை மனமார்ந்த மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

தமிழ் எழுத்துக்கு விமோசனம்!

தமிழ் எழுத்துக்கு ஒரு மாதிரி விமோசனம் பிறந்து விட்டது. சென்னை சர்க்கார் விமோசன உத்தரவு போட்டு விட்டார்கள்.

பிரஜா உற்பத்தியின் பெருக்கத்துக்கு அடுத்தபடியாக, சீர்திருத்தக்காரர்களுக்குக் கவலையை அளித்து வந்தது தமிழ் எழுத்துக்களின் பெருக்கம். "இத்தனை எழுவு எழுத்துக்களைக் கட்டிக் கொண்டு யார் மாரடிப்பது!" என்று அறிஞர் பலர் வேதனைப்பட்டார்கள். தமிழ் எழுத்துக்களை ஒரு வழியாகத் தொலைத்துத் தலை முழுகிவிட்டு இங்கிலீஷ் எழுத்துக்களையே தமிழ் மொழி எழுதுவதற்கும் வைத்துக்கொள்ளலாம் என்றுகூடச் சிலர் சொன்னார்கள். ஆனால் இந்தப் படுகொலை யோசனையைப் பலர் ஒப்புக் கொள்ளவில்லை. "பாவம்! தமிழ் எழுத்தும் இந்தப் பரந்த உலகில் இருந்து பிழைத்துப் போகட்டுமே! எதற்காக அடியோடு ஒழிக்க வேண்டும்!" என்று இரக்கப் பட்டார்கள்.

"சரி; அடியோடு ஒழிக்காவிட்டால் சில எழுத்துக்களைக் குறைக்கவாவது செய்யலாம். இத்தனை எழுத்துக்களை வைத்துக் கொண்டு நம்மால் சோறு போட்டுக் கட்டாது. இந்தக் 'கம்பாஸிடர்'களின் தொல்லை பெரிய தொல்லையாயிருக்கிறது!" என்று சொன்னார்கள். இப்படி வற்புறுத்திச் சொன்னவர்கள், முக்கியமாகத் தமிழ்த் தினப் பத்திரிகைகளின் அதிபர்கள். அநேக எழுத்துக்கள் தமிழில் இருப்பது 'லினோடைப்' முதலிய இயந்திர அச்சு வசதிகளை உபயோகிப்பதற்குத் தடை செய்கிறது என்பது இவர்களுடைய புகார். அந்தப் புகாரை ஓரளவு குறைக்கும் வகையில் இப்போது தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் சென்னை சர்க்காரால் ஒப்புக் கொள்ளப்பட்டு வெளியாகியிருக்கிறது.

அதன்படி இனி ணா 'ணா' ஆகும்; னை 'னை' ஆகும்; லை 'லை' ஆகும்.

இ, ஈ குறிகள் உயிர் மெய்யெழுத்தோடு சேர்ந்து நம் பிராணனை வாங்காமல் தனிப்பட்ட பாகிஸ்தான்களாக நின்று நிலவும்.

இந்தச் சீர்திருத்தங்கள் அவ்வளவு புதுமையான, புரட்சிகரமான சீர்திருத்தங்கள் அல்ல.

இவற்றில் சில, பெரியார் இராமசாமியார் தமது வெளியீடுகளில் நெடுங் காலமாகக் கையாண்டு வரும் சீர்திருத்தங்கள்.

நமது "சுதேச மித்திரன்" பத்திரிகை சென்ற ஓராண்டுக்கு மேலாக மேற்படி எழுத்துச் சீர்திருத்தங்களை விடாப்பிடியாகக் கையாண்டு அவற்றின் சாதக பாதகங்களைப் பொது மக்கள் உணரும்படி செய்து வந்திருக்கிறது.

சீர்திருத்தத்தின் பயன் என்ன வென்று கேட்டால், இது வரையில் தமிழ் எழுத்துக்களின் தொகை 133-ஆக இருந்தது, இனி 91 ஆகக் குறைந்து விடும். நாற்பத்திரண்டு தமிழ் எழுத்துக்களை ஒருமட்டுக்குத் தொலைத்துத் தலைமுழுகியாகி விட்டது!

உயிர் மெய்யெழுத்துக்களில் உ, ஊ வுக்கும் தனிப்பட்ட குறியீடுகளை ஏற்படுத்தியிருந்தால் இன்னும் முப்பத்திரண்டு எழுத்துக்களை ஒழித்துக் கட்டியிருக்கலாம்.

அந்தச் சீர்திருத்தத்தைப் பிற்காலத்துக்குத் தள்ளி வைத்திருக்கிறார்கள். பின்னால் வருகிறவர்களுக்கும் தமிழில் சீர்திருத்தம் செய்ய ஏதேனும் இடம் இருக்க வேண்டும் அல்லவா!

தமிழ் மொழி 'சீர்திருத்த மாட்டேன்' என்று பிடிவாதம் பிடிக்கும் பழைய மடிசஞ்சி பாஷை என்று இனி மேல் யாரும் பழி சொல்ல முடியாது. மகிழ்ச்சி! மகிழ்ச்சி!! மகிழ்ச்சி!!!

திருச்சியில் ஒரு விசித்திரம்!

திருச்சி மலைக் கோட்டை திடீரென்று அதிர்ந்து நடுங்கியது. காவேரிப் பாலம் கிடுகிடுத்தது. மாதா கோவிலின் கோபுரம் அசைந்து ஆடியது. ஸ்ரீ ரங்கநாதர் கண் விழித்துப் பார்த்து "என்ன! என்ன! திரு ஆபரணங்கள் பத்திரமா!" என்றார். ஜம்புகேசுவரர் தண்ணீருக்குள்ளிருந்து தலையை நீட்டி "இராவணன் மறுபடியும் கைலையைத் தூக்குகிறானா!" என்றார். தாயுமானவர் அண்ணாந்து உச்சிப் பிள்ளையாரைப் பார்த்து, "என்ன சமாசாரம்! உனக்கு ஏதாவது தெரியுமோ!" என்று கேட்டார். "எல்லாம் தெரியும்; நல்ல சமாசாரந்தான்!" என்று உச்சிப் பிள்ளையார் சொல்லி விட்டுக் கலகல வென்று சிரித்தார். மாதா கோவில் மணி 'ஆமென்' என்று ஆமோதித்தது.

ஸ்ரீ ரங்கநாதர் கண்ணை மூடினார்; ஜம்புகேசுவரர் நீரில் மூழ்கினார்; தாயுமானவர் மோனத்தில் அமர்ந்தார்; உச்சிப் பிள்ளையார் 'கப் சிப்' ஆனார்.

இவ்வளவு தடபுடலுக்கும் காரணம் என்ன வென்று ஆராய்ந்தபோது, திருச்சிராப்பள்ளி மாவட்ட காங்கிரஸ் கமிட்டியார் தங்கள் அலுவல்களை நிறுத்திக் கடையைக் கட்டி வைக்கத் தீர்மானித்ததுதான் என்று தெரியலாயிற்று.

"அது என்ன அப்படிப்பட்ட ஒரு தீர்மானம்! தொழிற் சாலைக்கு உள்ளிருந்தே வேலை நிறுத்தம் செய்யும் விசித்திர முறையைத் திருச்சி மாவட்டக் காங்கிரஸ் கைக் கொண்டதேன்!" என்ற கேள்வி எழுந்தது.

"ஸ்ரீ டி. எஸ். அருணாசலம் காங்கிரஸில் தாம் வகித்திருந்த சகல பதவிகளையும் ராஜினாமா செய்துவிட்டதுதான் காரணம்!" என்ற பதிலும் பிறந்தது.

"ஏன் அவர் அப்படிப்பட்ட மகா தியாகத்தைச் செய்ய முன் வந்தார்!" என்ற கேள்விக்குப் பதில் மட்டும் இன்னும் மூடு மந்திரமாகவே இருந்து வருகிறது.

முன்னம் ஒரு தடவை, திருச்சி ஜில்லா போர்டு தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்கள் பெருவாரியாகத் தோல்வியடைந்ததும் இம்மாதிரியே ஸ்ரீ டி. எஸ். அருணாசலம் காங்கிரஸில் தாம் வகித்த சகல பதவிகளையும் விட்டு விடப் போவதாகப் பயமுறுத்தினார். அது வெறும் பயமுறுத்தலாகவே போய்விட்டது.

இம்முறை என்ன ஆகப்போகிறதோ, தெரியவில்லை. ஸ்ரீ டி. எஸ். அருணாசலம் நல்ல தேசத் தொண்டராக ஒரு காலத்தில் இருந்தவர். பின்னர் சர்வாதிகார மனப்பான்மை அவரிடம் குடி கொண்டது. அதன் காரணமாகத் திருச்சி காங்கிரஸில் அடிக்கடி வெளியேற்று விழாக்களும் வெளியேறும் விழாக்களும் நடந்து வந்தன. நல்ல மனிதர்களும் பழைய தேச பக்தர்களும் அறிவாளிகளும் ஒவ்வொருவராக வெளியேறிச் சென்று விட்டார்கள். ஆகையால் அடுத்து வரும் பொதுத் தேர்தலில் காங்கிரஸுக்கு ஸ்தானமே கிடைக்காத பெருமையைத் திருச்சி ஜில்லா அடையுமோ என்று கருதவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது.

இந்த நிலைமையிலேதான் ஸ்ரீ டி. எஸ். அருணாசலம் மறுபடியும் 'சகல பதவிகளையும்' விட்டு விடப் போவதாகச் சொல்லுகிறார். இது உண்மையாகுமானால் அவருடைய தியாகத்தை நாம் பெரிதும் பாராட்டுவோம்.

அவருடைய இத் தியாகத்தின் பலனாக, திருச்சி ஜில்லாவில் காங்கிரஸிலிருந்து வெளியேறியவர்கள் திரும்ப வரக் கூடும். தகுதி வாய்ந்த நல்ல மனிதர்கள் பலர் அந்த ஜில்லா அரசியலில் கலந்து கொள்வார்கள். பொதுத் தேர்தலில் காங்கிரஸின் சார்பாக நல்ல அபேட்சகர்களைப் போட்டு வெற்றியும் அடையலாம்.

அதன் பிறகு இருக்கவே இருக்கிறது. ஸ்ரீ டி. எஸ். அருணாசலத்தைப் போன்ற சிறந்த தொண்டரின் ஊழியத்தைத் திருச்சி மாவட்டம் வெகுகாலம் இழந்திருக்க முடியுமா!

<u>அட்டைப்பட விளக்கம்</u>

உலகக் கதைகளில் உன்னத ஸ்தானம் வகிக்கும் அராபிக் கதைகளில் ஒன்றான கிணற்றுத் தேவதை நமது பாப்பா மலரில் தொடர்ந்து வெளியாகி வருகிறது. அந்தக் கதையில் வரும் ரஸமான கட்டங்களில் ஒன்றை நமது சித்திரக்காரர் இந்த இதழ் அட்டையில் சித்திரித்திருக்கிறார்.



அத்தியாயம் 17

மாண்டவர் மீள்வதுண்டோ?

இதுவரைக்கும் சுந்தர சோழர் வேறு யாரோ ஒரு மூன்றாம் மனிதனைப் பற்றிச் சொல்வது போலச் சொல்லிக் கொண்டு வந்தார். இப்போது தம்முடைய வாழ்க்கையில் நடந்த வரலாறாகவே சொல்லத் தொடங்கினார்:—

"என் அருமை மகளே! சாதாரணமாக ஒரு தகப்பன் தன் மகளிடம் சொல்லக்கூடாத விஷயத்தை இன்று நான் உனக்குச் சொல்கிறேன். இதுவரை யாரிடமும் என் மனதைத் திறந்து சொல்லாத செய்தியை உன்னிடம் சொல்கிறேன். இந்த உலகத்திலேயே என் நண்பன் அநிருத்தன் ஒருவனுக்குத்தான் இது தெரியும்; அவனுக்கும் முழுதும் தெரியாது. இப்போது என் மனதில் நடக்கும் போராட்டம் அவனுக்குத் தெரியாது. ஆனால் உன்னிடம் எல்லாவற்றையும் சொல்லப் போகிறேன். நம்முடைய குடும்பத்தில் யாராவது ஒருவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். உன் தாயாரிடம் சொல்ல எனக்கு நா எழாது. உன் தமையனிடமும் தம்பியிடமும் சொல்ல முடியாது. உன்னிடந்தான் சொல்ல வேண்டுமென்று சில காலமாகவே எண்ணியிருந்தேன். அதற்குச் சந்தர்ப்பம் இன்றைக்கு வாய்த்தது. அதற்கு வேண்டிய தைரியமும் இன்றைக்குத்தான் வந்தது. நீ என் நிலையைக் கண்டு சிரிக்க மாட்டாய்; என் மனதிலுள்ள புண்ணை ஆற்றுவதற்கு முயல்வாய்; என்னுடைய விருப்பம் நிறைவேறவும் உதவி செய்வாய்!—இந்த நம்பிக்கையுடன் உன்னிடம் சொல்கிறேன்......

கல்கி

"அந்தத் தீவிலிருந்து மரக்கலத்தில் ஏறிப் புறப்பட்டேன். கோடிக்கரை சேர்ந்தேன். என் பாட்டனார் பராந்தக சக்கரவர்த்தி இந்தத் தஞ்சை அரண்மனையில் அப்போது தங்கி இருக்கிறார் என்று அறிந்து நேராக இங்கே வந்தேன்.

"நான் தஞ்சை வந்து சேர்ந்தபோது பராந்தக சக்கரவர்த்தி மரணத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தார். அவர் உள்ளம் நொந்து போயிருந்தது. நாற்பது ஆண்டு காலத்தில் அவர் நிர்மாணித்த மகாராஜ்யம் சின்னாபின்னம் அடைந்து கொண்டிருந்தது. அவருக்குப் பிறகு பட்டத்தை அடைய வேண்டியவரான இராஜாதித்தர் தக்கோலப் போரில் மாண்டார். அதே போர்க்களத்தில் படுகாயம் அடைந்த என் தந்தை அரிஞ்சயர் பிழைப்பாரோ, மாட்டாரோ என்ற நிலையில் இருந்தார். கன்னர தேவ

னுடைய படைகள் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றி முன்னேறிக் கொண்டு வந்தன. தெற்கே பாண்டியர்கள் தலையெடுத்து வந்தார்கள். இலங்கையில் சோழ சைன்யம் தோல்வியுற்றுத் திரும்பிவிட்டது. பல போர்க்களங்களிலும் சோழநாட்டு வீராதி வீரர்கள் பலர் உயிர் துறந்து விட்டார்கள். இந்தச் செய்திகள் எல்லாம் ஒரு மிக்க வந்து முதிய பிராயத்துப் பராந்தக சக்கரவர்த்தியின் உள்ளத்தைப் புண்படுத்தித் துயரக் கடலில் ஆழ்த்தியிருந்தன. இந்த நிலையில் என்னைக் கண்டதும் அவருடைய முகம் மலர்ச்சி அடைந்தது. என் பாட்டனுருக்கு நான் குழந்தையாயிருந்த நாளிலிருந்து என்பேரில் மிக்க பிரியம். என்னை எங்கேயும் அனுப்பாமல் அரண்மனையில் தம்முடனேயே வெகுகாலம் வைத்திருந்தார். பிடிவாதம் பிடித்து அவரிடம் விடை பெற்றுக்கொண்டு நான் ஈழ நாட்டுக்குப் போனேன். அங்கிருந்து திரும்பி வந்தவர்களிலே நான் இல்லை என்று அறிந்ததும் என் பாட்டனுரின் மனம் உடைந்து போயிருந்தது. நான் இறந்து விட்டதாகவும் தெரியவில்லையாதலால் என்னைத் தேடி வரக் கூட்டங் கூட்டமாக ஆட்களை அனுப்பிக் கொண்டிருந்தார்.

"கடைசியில் ஒரு கூட்டம் என்னைக் கண்டு பிடித்தது. நான் தஞ்சை வந்து சேர்ந்ததும், புண்பட்ட அவர் மனதுக்குச் சிறிது சாந்தி ஏற்பட்டது. அவருடைய அந்தியகாலத்தில் வீழ்ச்சியடைந்து வந்த சோழ சாம்ராஜ்யம் மறுபடியும் என்னால் மேன்மை யடையும் என்பதாக எப்படியோ அவர் மனதில் ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. அந்த நம்பிக்கையைச் சோதிடர்கள் வளரச் செய்திருந்தார்கள். அதற்குத் தகுந்தாற் போல், அவருக்குப் புதல்வர்கள் நாலுபேர் இருந்தும், அவருடைய அந்திய காலத்தில் பேரன் நான் ஒருவனே இருந்தேன். சக்கரவர்த்தி இறக்கும் தறுவாயில் என்னை அருகில் அழைத்து உச்சி முகந்து கண்ணீர் பெருக்கினர். 'அப்பனே! எனக்குப் பிறகு உன் பெரியப்பன் கண்டராதித்தன் சிம்மாசனம் ஏறுவான். அவனுக்குப் பிறகு இந்தச் சோழ ராஜ்யம் உன்னை அடையும். உன்னுடைய காலத்திலேதான் மறுபடி இந்தச் சோழ குலம் மேன்மையடையப் போகிறது!' என்று பல முறை அவர் கூறினர். சோழநாட்டின் மேன்மையை நிலை நாட்டுவதே என் வாழ்க்கையின் இலட்சியமாயிருக்க வேண்டுமென்று சொல்லி, அவ்வாறு என்னிடம் வாக்குறுதியும் பெற்றுக் கொண்டார்..........

"என் பாட்டனுர் என்னிடம் எவ்வளவு பிரியம் வைத்திருந்தாரோ, அவ்வளவு நான் அவரிடம் பக்தி வைத்திருந்தேன். ஆதலின் அவருடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு நடப்பதென்று உறுதி கொண்டேன். ஆனாலும் என் உள்ளத்திலே அமைதி இல்லை. கடல் சூழ்ந்த தீவில் கரடிக்கு இரையாகாமல் என்னைக் காப்பாற்றிய கரையர் குலமகளின் கதி என்ன? சோழ நாட்டுச் சிம்மாசனத்தில் கீழ்க் குலத்தில் பிறந்த ஊமைப் பெண் ஒருத்தி ராணியாக வீற்றிருக்க முடியுமா? அரண்மனை வாழ்வு அவளுக்குத்தான் சரிப்பட்டு வருமா? நாட்டார் நகரத்தார் என்னைப் பார்த்துச் சிரிக்க மாட்டார்களா?...... இந்த எண்ணங்கள் அடிக்கடி தோன்றி என் மனதைச் சஞ்சலப் படுத்தின. இது மட்டுமன்று. என் பெரிய தகப்பனுர் கண்டராதித்தர் சில காலத்திற்கு முன்புதான் இரண்டாவது கலியாணம் செய்து கொண்டிருந்தார். அவரை மணந்த பாக்கியசாலி மழவரையர் குலமகள் என்பதை நீ அறிவாய். முதல் மனைவிக்குக் குழந்தை இல்லையென்றால், இரண்டாவது மனைவிக்கும் குழந்தை பிறவாது என்பது என்ன நிச்சயம்? பெரியப்பாவுக்கு ஆண் குழந்தை பிறந்தால், இராஜ்யம் எனக்கு எப்படி வரும்? — இதைப் பற்றி ராஜ்யத்தில் சிலர் அப்போதே பேசிக் கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. ஆனால் அத்தகைய சந்தேகம் யாருக்கும் உண்டாகக் கூடாது என்று மகாத்மாவாகிய என் பெரிய தகப்பனுர் விரும்பினர் போலும். பராந்தக சக்கரவர்த்தி காலமான பிறகு கண்டராதித்தருக்கு இராஜ்ய பட்டாபிஷேகம் நடந்தது. அதே சமயத்தில் எனக்கும் யுவராஜ்ய பட்டாபிஷேகம் நடக்க வேண்டும் என்று என் பெரியப்பா—புதிய சக்கரவர்த்தி—ஏற்பாடு செய்து விட்டார்...

"என் பிரிய மகனே! இன்றைக்கு உன் தம்பி அருள்மொழியின் பேரில் இந்த நாட்டு மக்கள் எப்படிப் பிரியமாயிருக்கிறார்களோ, அப்படி அந்த நாளில் என்பேரில் அபிமானமாயிருந்தார்கள். அரண்மனைக்குள்ளே பட்டாபிஷேகம் நடந்து கொண்டிருந்த போது வெளியிலே ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஆவலுடன் காத்திருந்தார்கள். புதிதாக முடிசூடிய சக்கரவர்த்தியும் யுவராஜாவும் சேர்ந்தாற்போல் ஜனங்களுக்குக் காட்சி தர வேண்டும் என்று அனைவரும் விரும்பினார்கள். அவ்விதமே பெரியப்பாவும் நானும் இந்த அரண்மனை மேன்மாடத்தின் முன்றிலுக்கு வந்து நின்றோம். கீழே ஒரே ஜன சமுத்திரமாக இருந்தது. அவ்வளவு பேருடைய முகங்களும் மலர்ந்து விளங்கின. எங்களைக் கண்டதும் அவ்வளவு பேரும் குதூகலமடைந்து ஆரவாரித்தார்கள். நாம் இளவரசப் பட்டம் சூட்டிக்கொண்டது பற்றி இவ்வளவு ஆயிரமாயிரம் மக்கள் குதூகலம் அடைந்திருக்கிறார்களே. அப்படியிருக்க, எங்கேயோ ஒரு கண்ணற்ற தீவில் காட்டின் மத்தியில் வாழும் ஊமைப் பெண்ணைப் பற்றி நாம் கவலைப் படுவது என்ன நியாயம்? இவ்வளவு பேருடைய மகிழ்ச்சி முக்கியமானதா? ஒரே ஒரு ஊமைப் பெண்ணின் வாழ்க்கை முக்கியமானதா?......

"இவ்வாறு எண்ணிக் கொண்டே எங்களை அண்ணாந்து பார்த்தபடி நின்ற மலர்ந்த முகங்களை ஒவ்வொன்றாகக் கவனித்துக் கொண்டு வந்தேன். அந்த ஜனங்களிலே ஆண்களும் பெண்களும் முதியவர்களும் இளைஞர்களும் சிறுவர் சிறுமிகளும் நின்றார்கள். எல்லோரும் ஒரே களிப்புடன் காணப்பட்டார்கள். ஆனால் திடீரென்று ஒரு முகம், ஒரு பெண்ணின் முகம், சோகம் ததும்பிய முகம், கண்ணீர் நிறைந்த கண்களினால் என்னைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்த முகம், — தெரிந்தது. அத்தனை கூட்டத்துக்கு நடுவில் எப்படி அந்த ஒரு முகம் என் கண்ணையும் கவனத்தையும் கவர்ந்ததென்பதை நான் அறியேன். பிறகு, அங்கிருந்து என் கண்களும் நகரவில்லை; கவனமும் பெயரவில்லை. அந்த முகம் வரவரப் பெரிதாகி வந்தது; என் அருகே அருகே வருவது போலிருந்தது. கடைசியில், அந்தப் பெரிய ஜனத்திரள் முழுதும் மறைந்து, என் அருகில் நின்றவர்கள் எல்லாரும் மறைந்து, அரண்மனை மறைந்து, ஆசாரவாசல் மறைந்து, தஞ்சை நகரின் கோட்டை கொத்தளம் மறைந்து, வானும் மண்ணும் மறைந்து, அந்த ஒரு முகம் மட்டும் தேவி பரமேசுவரியின் விசுவரூபத்தைப் போல் என் கண் முன்னால் தோன்றியது. என் தலை சுழன்றது; கால்கள் பலமிழந்தன; நினைவு தவறியது......

"அப்படியே நான் மயங்கி விழுந்து விட்டதாகவும் பக்கத்திலிருந்தவர்கள் தாங்கிப் பிடித்துக் கொண்டதாகவும் பிற்பாடு அறிந்தேன். பட்டாபிஷேக வைபவச் சடங்குகளில் நான் அதிகம் களைத்துப் போய் விட்டதாக மற்றவர்கள் நினைத்தார்கள். ஜனங்களுக்குக் காட்சி அளித்தது போதும் என்று என்னை அரண்மனைக்குள்ளே அழைத்துச் சென்றார்கள். பிறகு எனக்கு நல்ல நினைவு வந்ததும் என் நண்பன் அநிருத்தனைத் தனியாக அழைத்து நான் கண்ட காட்சியைக் கூறினேன். அந்த ஊமைப் பெண்ணின் அடையாளம் கூறி எப்படியாவது அவளைக் கண்டுபிடித்து அழைத்து வர வேண்டும் என்று கட்டளையிட்டேன். தஞ்சை நகரின் மூலை முடுக்கெல்லாம் தேடியும் அத்தகைய ஊமைப் பெண் யாரும் இல்லையென்று அநிருத்தன் வந்து சொன்னான். என்னுடைய உள்ளத்தின் பிரமையாக இருக்குமென்றும் கூறினான். நான் அவனைக் கோபித்துக் கொண்டு 'இந்த உதவி கூடச் செய்யாவிட்டால் அப்புறம் நீ என்ன சிநேகிதன்?' என்றேன். தஞ்சைக் கோட்டைக்கு வெளியே கடற்கரையை நோக்கிச் செல்லும் பாதைகளில் ஆள் அனுப்பித் தேடும்படி சொன்னேன். அப்படியே பல வழிகளிலும் ஆள்கள் சென்றார்கள். கடற்கரை வரையில் போய்த் தேடினார்கள். கோடிக் கரைக்குப் போனவர்கள் அங்கேயுள்ள கலங்கரை விளக்கக் காவலன் வீட்டில் ஓர் ஊமைப் பெண் இருப்பதாகக் கண்டு பிடித்தார்கள். அவள் பித்துப் பிடித்தவள் போலத் தோன்றினாளாம். எவ்வளவோ ஜாடை மாடைகளினால் அவ

ளுக்கு விஷயத்தைத் தெரிவிக்க முயன்றது பயன்படவில்லையாம். அவர்களுடன் தஞ்சைக்கு வருவதற்கு அடியோடு மறுத்து விட்டாளாம். இந்தச் செய்தியை அவர்கள் கொண்டு வந்தவுடனே, இன்னது செய்வதென்று தெரியாமல் மனங் கலங்கினேன். இரண்டு நாள் அந்தக் கலக்கத்திலேயே இருந்தேன். ஆனமட்டும் அவளை மறந்து விடப் பார்த்தும் இயலவில்லை. இரவும் பகலும் அதே நினைவாயிருந்தது. இரவில் ஒரு கணங்கூடத் தூங்கவும் முடியவில்லை. பிறகு அநிருத்தனையும் அழைத்துக் கொண்டு கோடிக் கரைக்குப் புறப்பட்டேன். குதிரைகளை எவ்வளவு வேகமாகச் செலுத்தலாமோ அவ்வளவு வேகமாகச் செலுத்திக் கொண்டு போனேன். போகும்போது என் மனக் கலக்கம் இன்னும் அதிகமாயிற்று. அந்த ஊமைப் பெண்ணை அங்கே கண்டு பிடித்தால், அப்புறம் அவளை என்ன செய்வது என்று எண்ணிய போது மனம் குழம்பியது. தஞ்சைக்கோ பழையாறைக்கோ அழைத்துப் போய் 'இவள் என் ராணி!' என்று சொல்லுவதா? அவ்வாறு நினைத்த போது என் உள்ளமும் உடலும் குன்றிப் போய் விட்டன.

"என் செல்வக் குமாரி! அந்த நாளில் நான் மேனி அழகில் நிகரற்றவன் என்று வேண்டாத பிரபலம் ஒன்று எனக்கு ஏற்பட்டிருந்தது. அதை ஒரு புகழாகவே நான் நினைக்கவில்லை. ஆயினும் மற்றவர்கள் அதைப் பற்றி ஓயாது பேசினார்கள். என் பாட்டனாரின் பெயராகிய 'பராந்தகன்' என்னும் பெயரை எனக்கு வைத்திருந்தார், அது அடியோடு மறையும்படி செய்து 'சுந்தர சோழன்' என்ற பெயரைப் பிரபலப்படுத்தி விட்டார்கள். அப்படி அனைவராலும் புகழப்பட்ட நான், நாகரிகம் இன்னதென்று தெரியாத ஓர் ஊமைப் பெண்ணை எப்படி அரண்மனைக்கு அழைத்துப் போவேன்? இல்லையென்றால், அவளை என்ன செய்வது?—இப்படிப் பலவாறு எண்ணிக் குழம்பிய மனத்துடன் கோடிக்கரை சேர்ந்தேன். அந்த மகராஜி எனக்குக் கஷ்டம் எதுவும் இல்லாமல் செய்து விட்டாள். அங்கே நான் அறிந்த செய்தி என்னை அப்படியே ஸ்தம்பித்துப் போகும்படி செய்துவிட்டது. நாங்கள் அனுப்பிய ஆள்கள் திரும்பிச் சென்ற மறுநாள் அந்தப் பெண் கலங்கரை விளக்கின் உச்சியில் ஏறினாளாம். அன்று அமாவாசை. காற்று பலமாக அடித்தது. கடல் பொங்கிக் கொந்தளித்து வந்து கலங்கரை விளக்கைச் சூழ்ந்து கொண்டது. அந்தப் பெண் சிறிது நேரம் கொந்தளித்த அலை கடலைப் பார்த்துக் கொண்டே நின்றாளாம். அப்படி அவள் அடிக்கடி நிற்பது வழக்கமாதலால் யாரும் அதைப் பொருட்படுத்தவில்லையாம்! திடீரென்று 'வீல்' என ஒரு சத்தம் அலை கடலின் முழக்கத்தையும் மீறிக் கொண்டு கேட்டதாம். பிறகு, அவளைக் காணோம்! பெண் உருவம் ஒன்று விளக்கின் உச்சியிலிருந்து கடலில் தலைகீழாக விழுந்ததை இரண்டொருவர் பார்த்தார்களாம். படகுகளைக் கொண்டு வந்து ஆனமட்டும் தேடிப் பார்த்தும் பயன்படவில்லை. கொந்தளித்துப் பொங்கிய கடல் அந்தப் பெண்ணை விழுங்கி விட்டது என்றே தீர்மானிக்க வேண்டியிருந்ததாம்......

"இந்தச் செய்தியைக் கேட்டதும் என் நெஞ்சில் ஈட்டியினால் குத்துவது போன்ற வலியும் வேதனையும் உண்டாயின. ஆனால் சற்று நேரத்துக்கெல்லாம் ஒருவித அமைதியும் உண்டாயிற்று. அவளை என்ன செய்வது என்ற கேள்வி இனி இல்லை. அதைப் பற்றி யோசித்து மனதைக் குழப்பிக் கொள்ள வேண்டியதுமில்லை!......

"துன்பமும் அமைதியும் கலந்த இந்த விசித்திர வேதனையுடன் தஞ்சைக்குத் திரும்பினேன். இராஜ்ய காரியங்களில் மனதைச் செலுத்தினேன். போர்க்களங்களுக்குச் சென்றேன். உன் தாயை மணந்து கொண்டேன். வீரப் புதல்வர்களைப் பெற்றேன். உன்னை என் மகளாக அடையும் பாக்கியத்தையும் பெற்றேன்......

"ஆனாலும், மகளே! செத்துப்போன அந்தப் பாவியை என்னால் அடியோடு மறக்க முடியவில்லை. சிற்சில சமயம் என் கனவிலே அந்தப் பயங்கரக் காட்சி,—நான் கண்ணால் பாராத அந்தக் காட்சி,—தோன்றி என்னை வருத்திக் கொண்டிருந்தது. கலங்

கரை விளக்கின் உச்சியிலிருந்து ஒரு பெண் உருவம் தலைகீழாகப் பாய்ந்து அலை கடலில் விழும் காட்சி என் கனவிலும் கற்பனையிலும் தோன்றிக் கொண்டிருந்தது. கனவில் அந்தப் பயங்கரக் காட்சியைக் காணும்போதெல்லாம் நான் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருப்பேன். பக்கத்தில் படுத்திருப்பவர்கள் 'என்ன? என்ன?' என்று கேட்பார்கள். உன் தாயார் எத்தனையோ தடவை கேட்டதுண்டு. ஆனால் நான் உண்மையைக் கூறியதில்லை. 'ஒன்றுமில்லை' என்று சில சமயம் சொல்வேன். அல்லது போர்க்கள பயங்கரங்களைக் கற்பனை செய்து கூறுவேன். 'நாளடைவில் காலதேவனின் கருணையினால் அந்தப் பயங்கரக் காட்சி என் மனதைவிட்டு அகன்றது; அவளும் என் நினைவிலிருந்து அகன்றாள்; அகன்று விட்டதாகத்தான் சமீபகாலம் வரையில் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் உயிரோடிருப்பவர்களைக் காட்டிலும் செத்துப் போனவர்கள் அதிக கொடுமைக்காரர்கள் என்று தோன்றுகிறது. மகளே! ஊமைச்சியின் ஆவி என்னை விட்டு விடவில்லை. சில காலமாக அது மீண்டும் தோன்றி என்னை வதைக்க ஆரம்பித்திருக்கிறது! என்



இராஜாதித்தர்

மகளே! மாண்டவர்கள் மீண்டு வருவார்கள் என்று நீ நம்புகிறாயா......?''

இவ்விதம் சொல்லிவிட்டுச் சுந்தர சோழர் தம் பார்வையை எங்கேயோ தூரத்தில் செலுத்தி வெறித்துப் பார்த்தார். அவர் பார்த்த திக்கில் ஒன்றுமே இல்லைதான்! ஆயினும் அவருடைய உடம்பு நடுங்குவதைக் குந்தவை கண்டாள். எல்லையற்ற இரக்கம் அவர்பேரில் அவளுக்கு உண்டாயிற்று. கண்களில் நீர் ததும்பியது. தந்தையின் மார்பில் தன் முகத்தைப் பதித்துக் கொண்டு கண்ணீர் விட்டாள். அதனால் அவருடைய நடுக்கமும் குறைந்ததாகத் தோன்றியது. பிறகு தந்தையை நிமிர்ந்து நோக்கி, "அப்பா! இந்தப் பயங்கரமான வேதனையைப் பல வருஷகாலம் தங்கள் மனதிலேயே வைத்துக் கொண்டு கஷ்டப்பட்டிருக்கிறீர்கள். அதனாலேதான் தங்கள் உடம்பும் சீர் குலைந்து விட்டது. இப்போது என்னிடம் சொல்லி விட்டீர்கள் அல்லவா? இனிமேல் தங்கள் உடம்பு சரியாகப் போய் விடும்'' என்றாள்.

சுந்தரசோழர் அதைக் கேட்டுச் சிரித்த சிரிப்பின் ஒலியில் வேதனையுடன் கூட அவநம்பிக்கையும் கலந்திருந்ததேன்? அவர் கூறினார்:—

"குந்தவை! நீ நம்பவில்லை. மாண்டவர்கள் மீண்டு வருவார்கள் என்று நீ நம்பவில்லை. ஆனாலும் அதோ அந்தத் தூணுக்குப் பக்கத்தில், குத்து விளக்கின் பின்னால், அந்தப் பாவியின் ஆவி நேற்று நள்ளிரவில் நின்றது. என் கண்ணாலேயே பார்த்தேன். அதை எப்படி நம்பாமலிருக்க முடியும்? நான் கண்டது வெறும் பிரமை என்றால், உன் தோழியைப் பற்றி என்ன சொல்வாய்? அவள் எதையோ பார்த்துக் கேட்டதனால் தானே நினைவு தப்பி விழுந்தாள்! அவளை அழைத்து வா, குந்தவை! நானே நேரில் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்!'' என்று சுந்தரசோழர் பரபரப்புடன் கூறினார்.

"அப்பா! வானதி ஒரு பயங்கொள்ளிப் பெண்! கொடும்பாளூர் வீர வேளிர் குலத்தில் இவள் எப்படிப் பிறந்தாளோ, தெரியவில்லை. இருட்டில் தூணைப் பார்த்தாலும், அவள்

அலறி அடித்துக் கொண்டு மயக்கமாய் விழுவான். அவனைக் கேட்பதில் யாதொரு பயனும் இல்லை. அவன் ஏதும் பார்த்திருக்கவும் மாட்டான்; கேட்டிருக்கவும் மாட்டான்."

"அப்படியா சொல்கிறாய்? அவன் போனால் போகட்டும். நான் சொல்ல வேண்டியது மிச்சத்தையும் கேள்! மாண்டவர்கள் மீண்டு வருவார்கள் என்பதில் எனக்கும் வெகுகாலம் நம்பிக்கை இல்லாமல் தானிருந்தது. அப்படிப்பட்ட தோற்றம் என்னுடைய வீண் மனப் பிரமை என்றே நானும் எண்ணியிருந்தேன். காவேரி நதியில் நாம் எல்லாருமாக ஓடத்தில் போய்க் கொண்டிருந்தபோது குழந்தை அருள்மொழி வர்மன் திடீரென்று காணாமற் போனது உனக்கு நினைவிருக்கிறதல்லவா? நாம் எல்லாரும் திகைத்தும் தவித்தும் நிற்கையில் ஒரு பெண்ணரசி பொன்னி நதி வெள்ளத்திலிருந்து குழந்தையை எடுத்துத் தூக்கிக் கொடுத்தாள். குழந்தையை மற்றவர்கள் வாங்கிக் கொண்டதும் அவள் மறைந்து விட்டாள். இதைப் பற்றி நாம் எவ்வளவோ தடவை பேசியிருக்கிறோம். நீ மறந்திருக்க முடியாது. நீங்கள் எல்லாரும் காவேரியம்மன் தான் குழந்தையைக் காப்பாற்றியதாக முடிவு கட்டினீர்கள். ஆனால் என் கண்ணுக்கு என்ன தோன்றியது தெரியுமா? அந்த வேளூர் குலமகள்—ஊமைச்சி தான்—குழந்தையை எடுத்துக் கொடுத்ததாகத் தோன்றியது. அன்றைய தினமும் நான் நினைவிழந்து விட்டேன் என்பது உனக்கு ஞாபகம் இருக்கிறதா? குழந்தைக்கு நேர்ந்த அபாயத்தை முன்னிட்டு நான் நினைவிழந்தேன் என்று எல்லாரும் எண்ணினார்கள். ஆனால் உண்மை அதுவன்று. இத்தனை நாள் கழித்து உனக்குச் சொல்கிறேன். குழந்தையை எடுத்துக் கொடுத்த பெண்ணுருவம் அவளுடைய ஆவி உருவம் என்று எனக்குத் தோன்றிய படியால்தான் அப்படி மூர்ச்சை யடைந்தேன்......

"மகனே! உன் தமையனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டிய தினம் நினைவிருக்கிறதா? அன்று பட்டாபிஷேகம் நடந்த பிறகு ஆதித்த கரிகாலன் அந்தப்புரத்துக்குத் தாய்



கண்டராதித்தர்

மார்களிடம் ஆசி பெறுவதற்காக வந்தான் அல்லவா? அவனுக்குப் பின்னால் நான் வந்தேன். அதே ஊமைச்சியின் ஆவி அங்கே பெண்களின் மத்தியில் நின்று கரிகாலனைக் கொடூரமாக உற்றுப் பார்த்ததைக் கண்டேன். மீண்டும் ஒரு தடவை பிரக்ஞை இழந்தேன். பிறகு யோசித்த போது அந்தச் சம்பவத்தைக் குறித்து எனக்குச் சந்தேகம் உண்டாயிற்று. அப்படி அவள் கரிகாலனைக் கொடூரமாகப் பார்க்க வேண்டிய அவசியம் என்ன என்று ஐயுற்றேன். அதுவும் என் சித்தப் பிரமையின் தோற்றமாயிருக்கலாம் என்று எண்ணினேன். ஆனால், மகனே! இந்தத் தடவை தஞ்சைக்கு வந்த பிறகு அந்தச் சந்தேகமெல்லாம் தீர்ந்து விட்டது. ஒரு காலத்தில்,—அவள் உயிரோடிருந்த காலத்தில், — அவள் முகத்தைப் பார்த்து அவள் மனதிலுள்ளதைத் தெரிந்து கொள்வேன்; அவள் உதடு அசைவதைப் பார்த்து அவள் சொல்ல விரும்புவது இன்னதென்று தெரிந்து கொள்வேன். அந்தச் சக்தியை மீண்டும் நான் பெற்றுவிட்டேன். குந்தவை! நாலைந்து முறை நள்ளிரவில் அவள்

என் முன்னால் தோன்றி எனக்கு எச்சரிக்கை செய்து விட்டான். 'என்னைக் கொன்றுயே! அதை நான் மன்னிக்கிறேன். ஆனால் மீண்டும் பாவம் செய்யாதே! ஒருவனுக்குச் சேரவேண்டிய இராஜ்யத்தை இன்னொருவனுக்குக் கொடுக்காதே!' என்று அவன் சொல்வதைப் புரிந்து கொண்டேன். அவனுக்குப் பேசும் சக்தி வந்து வாயினால் பேசினால் எப்படித் தெரிந்து கொள்வேனே அவ்வளவு தெளிவாகத் தெரிந்து கொண்டேன். மகளே! அதை நிறைவேற்றி வைக்க எனக்கு நீ உதவி செய்ய வேண்டும். சாபமுள்ள இந்த இராஜ்யம், — இந்தச் சோழ சிம்மாசனம்,—என் புதல்வர்களுக்கு வேண்டாம்! இதை மதுராந்தகனுக்குக் கொடுத்து விடலாம்......"

குந்தவை அப்போது குறுக்கிட்டு, "அப்பா! இது என்ன சொல்கிறீர்கள்? நாடு நகரமெல்லாம் ஒப்புக் கொண்டு முடிந்து போன காரியத்தை இப்போது மாற்ற வேண்டிய அவசியம் என்ன? தாங்கள் மாற்றினாலும் உலகம் ஒப்புக் கொள்ளுமா?" என்று கேட்டாள்.

"உலகம் ஒப்புக் கொண்டால் என்ன, ஒப்புக் கொள்ளா விட்டால் என்ன? தர்மம் இன்னதென்று தெரிந்து செய்ய வேண்டியது என் கடமை. நான் இந்தச் சோழ ராஜ்யத்துக்கு இளவரசனாகவும் பிறகு சக்கரவர்த்தியாகவும் முடி சூட்டிக் கொண்ட போதே என் மனம் நிம்மதியாயில்லை. என் மனச் சாட்சி என்னை உறுத்தியது. மூத்தவரின் மகன் உயிரோடிருக்கும்போது இளையவரின் மகனாகிய நான் பட்டத்துக்கு வந்ததே முறையன்று. அந்தப் பாவத்தின் பலனை இன்று நான் அநுபவிக்கிறேன். என் புதல்வர்களும் அத்தகைய பாவத்துக்கு ஏன் உள்ளாக வேண்டும்? ஆதித்தனுக்கும் இந்த ராஜ்யம் வேண்டாம்; அருள்மொழிக்கும் வேண்டாம். இந்த ராஜ்யத்துடன் வரும் சாபமும் வேண்டாம். நான் உயிரோடிருக்கும்போதே மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டிவிட வேண்டும். அதன் பிறகு ஆதித்தன் காஞ்சியில் கட்டியிருக்கும் பொன் மாளிகையில் சென்று நான் மன நிம்மதியோடு வசிப்பேன்......"

"அப்பா! பெரிய பிராட்டி இதற்குச் சம்மதிக்க வேண்டாமா?"

"மகளே! அதற்காகத்தான் உன் உதவியை நாடுகிறேன். எந்தக் காரணம் சொல்லியாவது என் பெரியம்மையை இங்கே வரும்படி செய். ஆகா! எவ்வளவோ தெரிந்த பரம ஞானியான அந்த மூதாட்டிக்கு இந்த தர்ம நியாயம் ஏன் தெரியவில்லை? என்னை ஏன் இந்தப் பாவம் செய்யும்படி ஏவினார்? அல்லது அவருடைய சொந்தப் பிள்ளையின் பேரிலேதான் அவருக்கு என்ன கோபம்? தாயின் இயற்கைக்கே மாறான இந்தக் காரியத்தில் அவருக்கு ஏன் இவ்வளவு பிடிவாதம்? மதுராந்தகன் ஏதோ சிவ பக்தியில் ஈடுபட்டுச் சந்நியாசியாகப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்தபோது அதற்கு நியாயம் உண்டு. இப்போது அவனுக்கே இராஜ்யம் ஆளும் ஆசை வந்திருக்கும்போது இன்னொருவனுக்கு எப்படிப் பட்டம் கட்டலாம்!"

"அப்பா! இராஜ்யம் ஆள ஆசை இருக்கலாம்; அதற்குத் தகுதி இருக்க வேண்டாமா?"

"ஏன் தகுதி இல்லை? மகானாகிய கண்டராதித்தருக்கும் மகாஞானியான மழவரையர் மகளுக்கும் பிறந்த மகனுக்கு எப்படித் தகுதி இல்லாமற் போகும்?"

"தகுதி இருக்கட்டும்; இராஜ்யத்தின் குடிகள் அதற்கு ஒப்புக்கொள்ள வேண்டாமா?"

"குடிகளுடைய அபிப்பிராயத்தைக் கேட்பதாயிருந்தால், அவர்கள் உன் தம்பிக்கு உடனே பட்டம் கட்டிவிட வேண்டும் என்பார்கள். அது நியாயமா? அருள்மொழிதான் அதை ஒப்புவானா? ... அதெல்லாம் வீண் யோசனை, மகளே! எப்படியாவது உன் பெரிய பாட்டியை இங்கே சீக்கிரம் வரும்படி செய்! நான் யமனோடு போராடிக் கொண்டிருக்கிறேன் என்று எழுதி அனுப்பு; என்னை உயிரோடு பார்க்க வேண்டுமானால் உடனே புறப்பட்டு வர வேண்டுமென்று சொல்லி அனுப்பு..."

"அது ஒன்றும் அவசியமில்லை, அப்பா! தஞ்சைத் தளிக்குளத்தார்

கோயிலுக்குத் திருப்பணி செய்ய வேண்டுமென்ற விருப்பம் பெரிய பிராட்டிக்கு இருக்கிறது. அதைக் குறிப்பிட்டு இச்சமயம் வரும்படி எழுதி அனுப்புகிறேன். அது வரை தாங்கள் அலட்டிக் கொள்ளாமல் பொறுமையா யிருங்கள், அப்பா!"

இவ்விதம் கூறித் தந்தையிடம் விடை பெற்றுக் கொண்டு குந்தவை தன் இருப்பிடத்துக்குச் சென்றாள். வழியில் அன்னை வானமாதேவியைச் சந்தித்தாள். "அம்மா! இனிமேல் என் தந்தையை ஒரு கணநேரம் கூட விட்டுப் பிரியாதீர்கள்! மற்றவர்கள் போய்ச் செய்ய வேண்டிய பூஜைகளைச் செய்யட்டும்!" என்றாள்.

குந்தவையின் உள்ளத்தில் சில காலமாக ஏற்பட்டிருந்த ஐயங்கள் இப்போது கொஞ்சம் தெளிவு பெறத் தொடங்கி யிருந்தன. கன இருட்டா யிருந்த இடங்களில் கொஞ்சம் வெளிச்சம் தெரிய ஆரம்பித்திருந்தது. தன் தந்தைக்கும் சகோதரர்களுக்கும் விரோதமாக ஏதோ ஒரு பயங்கரமான மந்திர தந்திர சூழ்ச்சி நடைபெற்று வருகிறது என்பதை அவள் அறிவு நன்கு உணர்த்தியது. ஆனால் அது எத்தகைய சூழ்ச்சி, எப்படி எப்படி யெல்லாம் இயங்குகிறது என்பதை முழுதும் அவளால் அறிந்துகொள்ள முடியவில்லை. சோழ மகாராஜ்யத்துக்கும் அந்த ராஜ்யத்துக்குத் தன் சகோதரர்கள் பெற்றுள்ள உரிமைக்கும் பேரபாயம் ஏற்பட்டிருக்கிறதென்பதை அவள் உணர்ந்தாள். அந்த அபாயத்திலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு பெண்பாலாகிய தன்மீது சுமந்திருக்கிறதாகவும் நம்பினாள்.

அக்கப்போர்

"மத்திய சர்க்கார் ஒதுக்கிய தொகை போதவில்லையாதலால் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற அதிக வரி போடப்போகிறேன்."

—கனம் கோபால் ரெட்டி

கனம் கோபால் ரெட்டி அதிக வரி போடாமல் இருந்தால் அதையே பொது ஜனங்கள் மகத்தான அபிவிருத்தி திட்டமாக மதிக்கத் தயாராக இருக்கிறார்கள்.

★

"பெர்ஷியா எண்ணெய்த் தகராறு சம்பந்தமான பிரச்னைபற்றி பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஸ்ரீ ஆட்லி ஸ்ரீ சர்ச்சிலுடன் ரகஸ்ய விவாதம் நடத்தினார்." —லண்டன் செய்தி

இந்த விவாதத்தின் முடிவாக ஸ்ரீ சர்ச்சில் தம் எரியும் சுருட்டுடன் பெர்ஷிய எண்ணெய்ப் பிரதேசத்துக்கு நேராக விஜயம் செய்யாதிருக்க வேண்டும்.

★

"அருப்புக் கோட்டையில் சூதாடியவர்கள் கைது." —ஒரு செய்தித் தலைப்பு

கோட்டையில் சூதாடும் நம்மைப் போலீஸ் எதிரிகளால் தாக்க முடியாது என்று அவர்கள் தவறாக நினைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

★

"பதநி தொழிலைச் சட்ட பூர்வமாக நிறுத்தியாக வேண்டும்." —ஒரு போலீஸ் அதிகாரி

'இது மிகவும் வரவேற்கத் தக்கதே' என்கிறார் ஒரு ஆரம்பப் பாட்டு வாத்தியாரின் அண்டை வீட்டுக்காரர்.

★

"காச நோயை மனோ வலிய சக்தியால் குணப்படுத்தலாம்." —ஒரு செய்தி

நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பிரகாச நோயைக் குணப்படுத்த மனோவலிய சக்தி பயன்படுமா!

"மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஸ்ரீ மகேஷ் சந்திர மிஸ்ரா என்பவர் காங்கிரஸில் உள்ள ஊழல்களைக் கண்டித்து அ. இ. கா. கமிட்டி காரியாலயத்தில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தபடி உண்ணாவிரதமிருக்கிறார்."

—செய்தி

காங்கிரஸில் ஊழல்கள் இருக்கக் கூடாது என்று அவர் ஒற்றைக்காலில் நிற்கிறார் போலும்!

★

"பூனாவுக்கும் கல்யாணுக்கும் நடுவில் பூமி சரிவு ஏற்பட்டிருப்பதால் மதராசுக்கு வரும் எல்லா வண்டிகளும் வேறு பாதை வழியாகத் திருப்பப்பட்டிருக்கின்றன." —பம்பாய் செய்தி

நீண்ட தூரப் பிரயாணிகளுக்கு இதை விட வேறு பாதை வேண்டியதில்லை.

★

"வருமான வரியைக் கட்டத் தவறியவர்களுக்கு ஜூலை 31-ந் தேதி வரை அவகாசமளிக்கப்பட்டிருப்பதாக ஸ்ரீ தியாகி கூறினார்."

—ஒரு செய்தி

இப்படித் தாங்களாகவே முன் வந்து வருமான வரியைக் கட்டுகிறவர்களுக்கு வருமான வரித் தியாகிகள் என்ற பட்டத்தை அரசாங்கம் அளிக்க வேண்டுமென்று ஸ்ரீ தியாகி அவர்கள் சிபாரிசு செய்வாரா!

★

"தாழ்த்தப்பட்ட வகுப்புச் சிறுவர்கள் பனியன் அணிந்து வந்ததைக் காணச் சகிக்காமல் பனியனைக் கிழித்தெறிந்த ஒருவருக்கு மாத்தளை நீதிபதி ரூ 140 அபராதம் விதித்தார்."

—கொழும்புச் செய்தி

அந்த நபர் பனியனைக் கிழிக்கும்போது அந்த பனியனே தமக்குச் சனியனாக வரும் என்று நினைத்திருப்பாரா!



7. எகிப்து

இப்போது நாம் உலக அதிசயங்கள் நிறைந்த எகிப்து தேசத்தின் காட்சிகளைக் காணச் செல்வோமா?

அரேபியாவிலிருந்து எகிப்துக்குச் செல்ல வேண்டுமாயின் இரண்டு நாடுகளுக்கும் இடையே உள்ள செங்கடலைக் கடக்க வேண்டும் அல்லவா? பூகோள படத்தைப் பார்ப்பவர்கள் செங்கடலின் உருவம் இந்திய மகா சமுத்திரத்தின் கைபோல் இருப்பதைக் காணலாம்.

அதற்குச் செங்கடல் என்று பெயர் வழங்குவதற்குப் பல காரணங்கள் உண்டு. செங்கடலை அடுத்துள்ள மலைகள் சிவப்பு நிறமானவை. தவிர, செங்கடலில் உற்பத்தியாகும் பவழக் கொடிகளும் கடற் பாசிகளும் சிவப்பு நிறமாக இருக்கின்றன. செங்கடலில் பதினாயிரக் கணக்கான சிவப்பு மீன்கள் எப்போதும் சஞ்சரித்துக் கொண்டிருப்பதால் அதன் தண்ணீர் சிவப்பு நிறமாகத் தோன்றுவதும் அந்தப் பெயர் வழங்குவதற்கு ஒரு காரணம். சிற்சில சமயங்களில் புயல் காரணமாகப் பாலைவனத்திலிருந்து மணற் புழுதி செங்கடலில் வந்து விழுவதால் தண்ணீரின் மேல் பரப்பு சிவப்பு வர்ணமாகக் காட்சியளிக்கிறது.

செங்கடல் சுமார் ஆயிரத்து இருநூறு மைல் நீளமும் சற்றேறக் குறைய இருநூறு மைல் அகலமும் இருக்கிறது.

எகிப்து ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே மிகச் சிறந்த நாகரிகம் வாய்ந்த தேசமாக விளங்கியது. இந்த உண்மையை நாம் சரித்திரத்தின் மூலம் மாத்திரம் அறிந்து கொள்ளவில்லை; எகிப்தில் காட்சியளிக்கும் உலகப் பிரசித்தி பெற்ற மகோன்னதமான சிலைகளும் சின்னங்களும் அந்த உண்மையை இன்றும் பறைசாற்றி வருகின்றன.

இதோ ஸ்பிங்க்ஸ் (Sphinx) என்று கூறப்படும் இந்தப் பிரம்மாண்டமான சிலையைப் பாருங்கள். இதன் தலை மனிதரைப்போல் தோன்றுகிறது. ஆனால் இதன் உடல், கால்கள், பாதங்கள் முதலியவை சிங்கத்தின் அவயவங்களைப் போல் காட்சியளிக்கின்றன. இந்த ராக்ஷச உருவத்தை, எகிப்தில் உள்ள ஆலயங்களையும் சமாதிகளையும் காவல் புரியும் ஒரு தேவதையாக எகிப்தியர்கள் கருதுகின்றனர்.

இந்தச் சிலை இருநூற்று நாற்பது அடி நீளமும் சுமார் அறுபத்தாறு அடி உயரமும் இருக்கிறது. இதனுடைய முகத்தின் அகலம் மாத்திரம் பதின்மூன்று அடி எட்டு அங்குலம் இருக்கிறது எனில் இது எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

இதன் தலையும் உடலும் ஒரே பாறையில் செதுக்கப்பட்டிருப்பது ஈடு இணையில்லாத அற்புதமான வேலைப்பாடாகும்.

அராபியர்கள் துப்பாக்கிகளால் சுட்டதாலும், பாலைவனத்தில் ஏற்பட்ட மணல் மாரியினாலும் மேற்படி சிலையின் முகம் பழுதாகியிருக்கிறது. எனினும் இன்றும் அதைக் காணும் லட்சக்கணக்கான யாத்ரீகர்களுக்கும் அது அவர்களை உற்றுப் பார்ப்பது போல் காட்சியளிக்கிறது. எகிப்தின் புராதன சரித்திரத்தையும் நாகரிகத்தையும் எல்லோருக்கும் எடுத்துச் சொல்வது போல் தோன்றுகிறது.


மணல் மாரி காரணமாக அந்தச் சிலையின் அடித்தளம் மூவாயிரம் ஆண்டுகளாக மூடப்பட்டிருந்தது. ஆனால் 1926-ம் ஆண்டில் மணலை யெல்லாம் முதல் தடவையாக அப்புறப்படுத்தி அந்த இடத்தைச் சுத்தம் செய்தார்கள்.

* * *

மேலே குறிப்பிட்ட சிலையைப் போலவே எகிப்தில் உள்ள Pyramid கல்லறைகளும் உலகப் பிரசித்தி பெற்றவை. பிரபல எகிப்திய மன்னர்களுக்காகவே அந்தக் கல்லறைகள் அக்காலத்தில் கட்டப்பட்டன.

கிறிஸ்துவ சகாப்தம் ஆரம்பமாவதற்கு ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பே மேற்படி கல்லறைகள் கட்டப்

பட்டதாகத் தெரிகிறது. உலகத்திலுள்ள ஏழு அதிசயங்களில் இதுவும் ஒன்று. இந்த அதிசய நிர்மாணத்தைப் பார்ப்பதற்காக நூற்றுக் கணக்கான வருஷங்களாக அந்த இடத்துக்கு ஒட்டகங்கள், குதிரைகள் மீதும் நடந்தும் எண்ணிக்கையற்ற யாத்ரீகர்கள் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்.



மரணம் அடைந்த பின் ஆத்மா மறுபடியும் அதே தேகத்துக்குள் பிரவேசிக்கிறது என்பது எகிப்தியர்களின் விசித்திரமான நம்பிக்கை. அதனால்தான் எகிப்தில் மரணம் அடைந்த மன்னர்களின் உடல்களைக் காப்பாற்றி வைப்பதென்ற வழக்கம் வெகு காலமாக இருந்து வந்திருக்கிறது.

எனினும் மாண்ட எகிப்திய மன்னர்களின் உடல்களுக்கு விலையுயர்ந்த நகைகளை அணிவித்து வைத்ததால் கொள்ளைக்காரர்கள் உடல்களைத் தூக்கி எங்கேயோ எறிந்து விட்டு, நகைகளை மாத்திரம் அடித்துக் கொண்டு போய் விட்டார்கள்.

அத்தகைய கல்லறைகளில் ஒன்றின் அடிவாரம் மாத்திரம் பதின்மூன்று ஏக்கர் விஸ்தீரணம் இருக்கிறது. அது சுமார் ஐந்நூறு அடி உயரம் இருக்கிறது. ஒவ்வொரு பாறைக் கல்லின் எடையும் இரண்டரை டன் வீதம் இருபத்திமூன்று லட்சம் பாறைக் கற்களைக் கொண்டு அதை நிர்மாணித்ததாகக் கணக்கு எடுத்திருக்கிறார்கள்.

இவ்வாறு சிறியவையும் பெரியவையுமாக எகிப்தில் எழுபத்தைந்து கல்லறைகள் இருக்கின்றன. யந்திரங்கள் இராத அந்தக் காலத்தில் இவ்வளவு பெரிய பாறைகளைத் தூக்கிச் சென்று அதிசயமான மேற்படி கல்லறைகளை எவ்வாறு நிர்மாணித்தார்கள் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. அதில் உள்ள கற்களைக் கொண்டு ஒரு லட்சம் ஜனங்களுக்கு மேல் வசிப்பதற்குத் தகுதியான ஒரு பட்டணத்தையே நிர்மாணிக்க முடியும் என்று மதிப்பிடுகிறார்கள்.

எல்லாவற்றையும் விடப் பெரியதாக இருக்கும் ஒரு கல்லறையை மாத்திரம் ஒரு லட்சம் தொழிலாளர்கள் இருபது வருஷ காலம் வரையில் கஷ்டப்பட்டுக் கட்டியதாகப் பிரபல கிரேக்கச் சரித்திராசிரியர் குறிப்பிட்டிருக்கிறார்.

* * *

எகிப்து தேசச் சரித்திரத்தைப் பார்க்கு முன், அந்த நாட்டில் உள்ள மற்றொரு அதிசயத்தைப் பற்றிக் குறிப்பிட வேண்டியது அவசியம். எகிப்து தேசத்தின் ஜீவனாகத் திகழும் நைல் நதிதான் அந்த அதிசயமாகும். சுமார் நாலாயிரம் மைல் நீளமுள்ள நைல் நதி, உலகத்தில் இருக்கும் பெரிய நதிகளில் மூன்றாவது ஸ்தானத்தை வகிக்கிறது.


உலகத்திலேயே பயங்கரமான பாலைவனங்கள் பரந்து கிடக்கும் ஆப்பிரிக்காவில் இணையில்லாத சுபிட்சத்தைக் கொடுக்கும் நைல் நதி இருப்பது மகத்தான ஆச்சரியம் அல்லவா?

நைல் நதியில் வருஷா வருஷம் வெள்ளம் உண்டாகி வடிகின்றது. அப்போது படியும் வண்டல் மண் அந்தப் பிரதேசத்தைப் பொன் கொழிக்கும் பூமியாகச் செய்து விடுகிறது. மேற்படி வண்டல் மண்ணின் செழுமைக்கு ஒரு உதாரணம் கூறலாம்.

அமெரிக்காவில் அரும்பாடு பட்டுச் செப்பனிடப்படும் பூமியில் கூட ஒரு ஏக்கருக்கு ஒரு 'பேல்'தான் பருத்தி உற்பத்தியாகிறது. ஆனால் நைல் வண்டல் படிந்துள்ள எகிப்து பூமியில் யாதொரு உரமுமின்றி ஒரு ஏக்கருக்கு இரண்டரை பேல்களுக்கு மேல் பருத்தி உற்பத்தியாகிறது. எனவே எகிப்தின் வளத்துக்கும் செல்வச் செழுமைக்கும் நைல் நதிதான் முக்கிய காரணம்.

உலகத்திலே மிக மிகச் செழுமையுள்ள ஒரு சில பிரதேசங்களில் நைல் நதி பாயும் பிரதேசமும் ஒன்றாகும். உலகத்தில் சரித்திரம் என்று தோன்றியதோ அன்றிருந்து நைல் நதி சக்தி பொருந்தியதாக இருந்து வருகிறது. எனவே, நைல் நதியின் பெருமையைப் பற்றி எகிப்தில் ஏராளமான கதைகள் வழங்குகின்றன.

காதல் கதை



லக்ஷ்மி ராஜேந்திர சங்கர்

மேஜைக்குப் பின்னாலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு கையில் பென்சிலுடன் தயாராக இருந்தாள், எழுத்தாளர் "மாலி" யின் காரியதரிசி, மிஸஸ் மாலதி.

எதிரில், முன்னும் பின்னுமாக நடந்து கொண்டிருந்த மிஸ்டர் "மாலி" சட்டென்று திரும்பி நின்று கொண்டார். இரு கைகளையும் ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு "என் அருமைக் கண்மணி! என்னால் இனி காத்திருக்க முடியாது! என் காதலை, உண்மைக் காதலை, நீ ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்!" என்றார்.

மாலதியின் கண்கள் மிரண்டன. முகத்தில் நாணம், பயம் என்ற உணர்ச்சிகள் மின்னல் வேகத்தில் தோன்றி மறைந்தன. 'ஆகா! என்ன தைரியம்!' என்று அவள் வாய் முணுமுணுத்தது.

"மாலி" அதை ஒன்றையும் கவனியாதவர் போல் மீண்டும் உணர்ச்சியுடன் தொடர்ந்தார்:

"காதலிக்கவே உலகத்தில் பிறந்தவள் நீ. வெற்று வார்த்தைகளில் நேரத்தைப் போக்க நான் விரும்பவில்லை. இதோ சில நிமிஷங்களே இருக்கின்றன. அதற்குள் என் வாழ்நாள் சந்தோஷமடைய வேண்டும். இந்த நினைவு என் ஆயுட் காலமெல்லாம் எண்ணிப் புளகாங்கிதம் அடையும் இன்ப நினைவு நாளாக மிருக்கும். வா! என் உயிரே! இதோ பார்! என் கைகள் நடுங்குகின்றன! மனம் படபடக்கிறது! உனக்குத் தெரியவில்லையா! வா! வா!" என்று கூறிய வண்ணம் கைகளை விரித்தார்.

மாலதி, திக்பிரமை அடைந்தவளாய், அவரையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். ஐந்து நிமிஷம் சென்றன.

"மிஸஸ் மாலதி! என்ன விழிக்கிறீர்கள்! நான் இவ்வளவு நாழிகை கூறி வந்தது உங்கள் காதில் விழவில்லையா! ஏன் எழுதாமல் உட்கார்ந்திருக்கிறீர்கள்!" என்றார் மாலி.

மாலதிக்குப் பேச்சே வரவில்லை.

"மிஸ்டர் மாலி, என்னை மன்னித்து விடுங்கள். நீங்கள் 'டிக்டேட்' செய்ய ஆரம்பித்து விட்டீர்கள் என்பதை நான் உணரவில்லை!" என்றாள் மெதுவாக.

"பின் என்ன நினைத்தீர்கள்! உங்களிடம் காதல் கொண்டு விட்டேனென்றா!" என்று கேட்டுவிட்டு விழுந்து விழுந்து சிரிக்கலானார்.

மாலதிக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. பூமாதேவி அப்படியே பிளந்து தன்னை ஏற்றுக் கொண்டுவிட மாட்டாளா என்று ஏங்கினாள். ஆனால் பூதேவி எப்போதும்போல் சலனமற்று விளங்கினாள்.

தன் நிலைமையை ஒருவாறு சமாளித்துக் கொண்டு "இதோ தயாராக இருக்கிறேன். நீங்கள் மீண்டும் ஆரம்பியுங்கள்" என்று தயக்கத்துடன் கூறிவிட்டு நோட்டையும் பென்சிலையும் எடுத்து வைத்துக் கொண்டாள்.

"நான் தயாராக வில்லையே! நினைத்த பொழுது எழுதவும் சொல்லவும் முடிகிறதா! அந்தக் கோவையே போய் விட்டது. இனி

இன்று பிரயோஜனமில்லை. வாருங்கள்! சிறிது தேநீர் அருந்துவோம்!" என்று கூறிக் கொண்டே பக்கத்தறையில் உட்கார்ந்து கொண்டு இருவருக்கும் தேநீர் கொண்டு வரும் படி வேலையாளிடம் உத்தரவிட்டார்.

"உண்மையாகவே நீங்கள் என்னைத் தவறாக எண்ணிக் கொண்டுவிட்டீர்களா! இதற்கு முன் நீங்கள் எந்த ஆசிரியரிடமும் வேலை பார்த்தது கிடையாதோ! என் சிந்தனை வேகத்தில் உங்களை நான் கவனிக்கவே யில்லை. பிறகுதான் ஒருவேளை என்னைச் சந்தேகிக்கிறீர்களோ என்று நினைத்து நிறுத்தினேன்!" என்றார் மாலி.

"பின் எப்படி எண்ணுவது! கடந்த ஒரு வருஷத்தில் நான்கு இடங்களில் வேலை பார்த்தாகிவிட்டது. அநேகமாக எல்லோருமே சிறிது காலத்திற்குள் காதல் காட்சிகளைத் தொடங்கி விட்டார்கள். ஒரு அபலைப் பெண் வயிறு வளர்க்க வந்துவிட்டால் புருஷர்கள் அவளை மரியாதையாக நடத்தாமல் இப்படிக் கேவலமாக நடந்து கொள்வதைப் பார்த்தால் ஒரு பக்கம் கோபமாகவும், ஒரு பக்கம் வருத்தமாகவும் இருக்கிறது!" என்றாள் மாலதி.

"எல்லோரையும் அப்படி எண்ணி விடாதீர்கள். நம் தேசத்தில் பெண்கள் வேலை செய்வது புதிதாகையால் கொஞ்சம் சிரமம் தான். காலவட்டத்தில் அதுவும் சகஜமாகி விடும்!" என்றார் மாலி.

"பெண்கள் வெளியே புறப்பட்டாலே, அவர்களைப் பற்றிக் கேவலமாக எண்ணுவது புருஷ தர்மம் போலும்!" என்றாள் மாலதி சிறிது கசப்புடன்.

"அதெல்லாம் போகட்டும்! உங்களுக்கு ஏன் இந்த விதி! உங்களைப் பார்த்தால் பெரிய மனிதர் வீட்டுப் பெண்ணைப்போல் இருக்கிறது. கல்யாணம் வேறு ஆகியிருக்கிறது. அப்படியிருக்க நீங்கள் வேலைசெய்து ஜீவனம் செய்யவேண்டிய அவசியம் என்ன! சும்மா பொழுது போக்குத்தானா, அல்லது உண்மையிலேயே நீங்கள் சம்பாதித்துத் தானாகவேண்டுமா! வித்தியாசமாக எண்ணிக் கொள்ளாதீர்கள். உண்மையில் உங்களை என் சொந்த சகோதரியாகவே மதிக்கிறேன்!" என்று இரக்கமாகவும் அன்போடும் கூறினார்.

மாலதியின் கண்களில் கண்ணீர் நிறைந்து உருண்டு கன்னங்களில் வழிந்தோடியது.

"உங்களுடைய இந்த அன்பான மொழிகள் எனக்கு எவ்வளவோ தைரிய மூட்டுகின்றன. முதலில் உங்களைப் பற்றித் தவறுதலாக எண்ணியதற்கு மன்னிக்க வேண்டும். நான் உங்களுடைய கதைகளை அதிகம் படித்ததில்லை. தவிரவும் காதல் கதைகளும், நவீனங்களும் இப்பொழுது எனக்கு வெறுப்பைத்தான் கொடுக்கிறது!"

"எழுத்தாளர்களாகிய நாங்கள் பலராகவும் நடிக்கவேண்டியிருக்கிறது. காதலனாகவும், கள்ளனாகவும், பிச்சைக்காரனாகவும் பாத்திரங்களைச் சித்திரிக்க நாங்களே ஓரளவுக்கு அவர்களாக மாறவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இல்லாவிட்டால் பத்திரிகை ஆசிரியர்களும் பதிப்பாளர்களும் 'இதில் ஒன்றும் இல்லை' என்று தள்ளி விடுகிறார்கள். என்ன செய்வது! உண்மை உணர்ச்சி கதைகளில் தோன்றுவதற்கு நாங்கள் கூட நடிக்கக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதிருக்கட்டும்! நான் கேட்ட விஷயங்கள்...உங்கள் கணவர்...!" என்று மேலே கூற இஷ்டமில்லாததைப்போல் தயங்கினார் மாலி.

"ஆம்! எனக்குக் கணவர் இருக்கிறார். நல்ல உத்தியோகம் பார்க்கிறார். நல்ல பணக்காரரும்தான். ஆனால்...வேண்டாம்! அந்தப் பழைய கதையை இப்பொழுது கிளறுவானேன்!" என்று கூறிக்கொண்டே மீண்டும் கண்களில் மல்கிய நீரைத் துடைத்துக் கொண்டாள்.

"மாலி" கோப்பையிலிருந்த தேநீரை ஒரே மூச்சில் அருந்திவிட்டு "உங்களைப் பற்றி எனக்குத் தெரிந்திருந்தால் நல்லதுதான். ஆனால் உங்களுக்கு அது மன வருத்தத்தைக் கொடுக்கும் என்றால் வேண்டாம்!" என்றார்.

மாலதி, தலை குனிந்தபடியே சிறிது நேரம் சிந்தித்துவிட்டு, "இல்லை, இல்லை! அதெல்லாம் ஒன்றுமில்லை! கூறுகிறேன் கேளுங்கள்!" என்று அவளுடைய துயரச் சரிதையைக் கூறத் தொடங்கினாள் :—

ஆம், நான் நல்ல குடும்பத்தில் கடைசிப் பெண்ணாகப் பிறந்து சீரும் சிறப்புமாகத்தான் வளர்ந்தேன். என் தந்தை மிகவும் ஆசைப் பட்டு என்னைப் படிக்க வைத்தார். படிப்பிலும் கெட்டிக்காரியாகத் தானிருந்தேன். கலாசாலையில் எல்லோருடைய அன்பையும் மதிப்பையும் பெற்றிருந்தேன். நடுவில் என் கல்யாணப் பேச்சு வந்தது. எப்படியாகிலும் ஒரு கல்யாணத்தைப் பண்ணிவிட வேண்டும் என்று அம்மா பிடிவாதமாக இருந்தாள்.

அநேக பிரயத்தனங்கள் செய்து அம்மாவின் தூரத்து பந்துவின் பிள்ளை ஒருவரை நிச்சயமும் செய்துவிட்டாள். ஆனால், நடுவில், அந்தப் பையன் ஒரு பெண்ணின் மேல் காதல் கொண்டிருப்பதாகவும் அவளையே மணம் புரிந்து கொள்ளப் போவதாகவும் பிடிவாதம் செய்கிறான் என்றும் எங்கள் காதுக்கு எட்டியது. இதைக்கேட்ட அம்மா 'நன்றாயிருக்கிறது! நான் இப்பொழுதே சென்று விவாகத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும்! ரொம்ப நல்ல வரன்! சொத்து ஏகப்பட்டது இருக்கிறது! பையனும் அழகு. எப்படியும் இந்த சம்பந்தத்தை விடக்கூடாது!' என்று கூறி, மறுநாளே என்னையும் அழைத்துக்கொண்டு பிறந்தகத்திற்குப் பயணமானாள். 'மாலதியைப் பார்த்துவிட்டு எந்த மடையன் வேண்டாமென்பான்!' என்று என் தந்தையும் உற்சாக மூட்டினார். எனக்கு இதொன்றும் பிடிக்காவிட்டாலும் என் பெற்றோர்களின் அன்பையும் சொல்லையும் தவிர்க்க முடியவில்லை.

அவர்கள் வீட்டு வாசலில் வண்டியிலிருந்து இறங்கினதும் ஒரு வாலிபர் எங்களை எதிர் கொண்டழைக்க வந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு பேச்சு மூச்சற்று கல்லாகச் சமைந்து விட்டோம்.

அவர் வேறு யாருமல்ல. நான் இண்டர் முதல் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த

பொழுது, நடந்த வாக்குப் போட்டியில் மாணவர்கள் எல்லோரும் கலந்து கொண்டிருந்தார்கள். அதில் இவரும் கலந்து கொண்டிருந்தார். கடைசியாக நாங்கள் இருவரும் வாக்குவாதம் செய்ததில் எனக்கே அந்தப் போட்டியில் வெற்றி கிட்டியது.

அந்தக் கல்லூரியில் அதுவரையில் அவரே முடிசூடா மன்னராக இருந்தார். அப்படியிருக்க, பி.ஏ. கடைசி வகுப்பில் படித்துக் கொண்டிருந்த அவரை அப்பொழுதுதான் சேர்ந்திருந்த ஒரு ஜூனியர் மாணவி தோற்கடித்தது அவருக்குச் சிறிது கோபத்தையும் வெட்கத்தையும் உண்டாக்கியிருந்தது. ஆனால் அவர் அந்த வருஷக் கடைசியில் படிப்பு முடிந்து ஊருக்குத் திரும்பிவிடவே நான் அதை யெல்லாம் மறந்து விட்டேன். ஆனாலும் எதனாலோ அந்தக் கம்பீரமான முகம் என் மனக்கண் முன் அடிக்கடி வாதாடிக் கொண்டிருக்கும்.

அன்று நேருக்கு நேர் ஏற்பட்ட திடீர் சந்திப்பு எங்களைத் திகைக்க வைத்துவிட்டது. 'சத்துருவே எங்களை எதிர்கொண்டழைக்க வந்து விட்டானே!' என்று அம்மாவின் பரிகாசக் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு விஷயத்தை உணர்ந்துகொண்டு இருவரும் விரைவாக உள்ளே சென்று விட்டோம்.

பிறகு எங்கள் திருமணம் விமரிசையாக நடந்தேறியது. அவர் காதல் கொண்டிருந்த பெண் நான்தான் என்பதை அவர் கூறுமலேயே தெரிந்து கொண்டேன்.

'இதோ பார், மாலதி! இனிமேல் நான் உன்னுடைய கணவன். என்னுடன் வாதாட வந்துவிடாதே, ஜாக்கிரதை!' என்றெல்லாம் அவர் வேடிக்கையாகக் கூறுவார்.

புதுடில்லியில் அவருக்கு நல்ல வேலை. எங்கள் வாழ்க்கை இன்பமயமாக இருந்தது. பன்னிரண்டு மாதங்கள் பன்னிரண்டு நிமிஷங்களைப்போல் விரைந்தோடியது.

தூய வானத்தில் சிறிது சிறிதாக மேகம் படர ஆரம்பித்தது. 'தந்தைக்கு அபாயம்' என்ற தந்தியைக் கண்டு ஊருக்குத் திரும்பினேன். ஆனாலும் தந்தையைக் காணமுடியாத அபாக்கியசாலியானேன். அம்மாவின் ஆறுதலுக்காக நான் அங்கேயே இரண்டு மாதம் தங்கினேன். நான் அப்பொழுது மூன்று மாதக் கர்ப்பிணி. அவரும் என்னை இருந்துவிட்டு வரும்படி எழுதினார்.

மாதம் சம்பளம் வாங்கியதும் பணம் வந்து விடும். 'இந்தச் சமயத்தில் நீ சந்தோஷமாக இருக்கவேண்டும். அதனால் உன் இஷ்டப்படி செலவு செய்துகொள். அம்மாவைக் கேட்க வேண்டாம்!' என்று அன்புடன் அவர் கடிதங்கள் வரும்பொழுது என் அதிருஷ்டத்தை எண்ணி எண்ணிப் பூரிப்படைவேன்.

சில மாதங்களுக்கெல்லாம் அம்மாவும் வருத்தம் மாறி என் வளைகாப்பு, சீமந்தம் எல்லாவற்றிற்கும் ஏற்பாடு செய்ய விரும்பினாள். தன்னைச் சிலோனுக்கு மாற்றி யிருப்பதால் அடுத்த மாதம் வருவதாகவும் அப்பொழுது எல்லாம் நடத்தலாமென்றும் என் கணவர் கடிதம் எழுதினார்.

கூறியபடி அவரும் வந்தார். விசேஷங்களும் நடந்தேறின. என்னை இச்சமயத்தில் புது ஊருக்கு அழைத்துப் போக வேண்டாமென்று சொல்லிவிட்டு என் கணவர் மட்டும் சிலோனுக்குச் சென்று விட்டார்.



காலச் சக்கரம் யாருக்கும் காத்திராமல் சுழன்று கொண்டிருந்தது. என் அருமைக் கண்மணி பிறந்தான். ஆறு மாதத்திற்குப் பிறகு என் கணவர் ஒருமுறை வந்து எங்களுடன் ஒரு மாதமிருந்தார். குழந்தையைக் கீழே விடாமல் வைத்துக் கொஞ்சுவார். எவ்வளவோ அன்பாகத் தானிருந்தார். ஆனாலும் முன்னைக்கு இப்போது ஏதோ ஒரு வித்தியாசம் இருப்பதாக என் அந்தராத்மா கூறியது. வீடு கிடைத்ததும் எழுதுவதாகக் கூறிவிட்டு மறுபடியும் சென்றார்.

சில மாதங்கள் கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. அப்போதைக் கப்போது பணமும் குழந்தைக்கு விளையாட்டுச் சாமான்களும் அனுப்புவார். ஆனால் என்னை வரும்படி மட்டும் எழுதவில்லை.

இந்தச் சமயத்தில் என் தமையனுக்கு உத்தியோகத்தில் ஏதோ தகராறு ஏற்பட்டு வேலை போய்விட்டது. வீட்டில் கஷ்டங்கள் தலைகாட்ட ஆரம்பித்தன.

இது போதாதென்று அவரிடமிருந்து வரும் கடிதங்களும் திடீரென்று நின்று விட்டன. நான் பல கடிதங்கள் அவருக்கு எழுதியும் அவற்றிற்கெல்லாம் பதிலே வரவில்லை.

வேறு வழி ஒன்றும் தோன்றாமல் நானே குழந்தையுடன் புறப்பட்டு வருவதாக ஒரு கடிதம் எழுதினேன். அதற்கு உடனே பதில் வந்தது. அதில் இன்னும் வீடு கிடைக்காததால்

தான் சிநேகிதன் வீட்டிலிருப்பதாகவும் நான் வரவேண்டாமென்றும் எழுதியிருந்தார்.

அப்பொழுதுதான் என் மனதில் ஏதேதோ சந்தேகம் தோன்ற ஆரம்பித்தது. இதில் ஏதோ மர்மம் இருக்கிறதென்று எண்ணி அங்கே தெரிந்தவர்களுக்கு எழுதிக் கேட்டேன். அவர்கள் எழுதிய செய்தி என்னைத் தூக்கிவாரிப் போட்டது. என் கணவர் மிகவும் அழகிய ஒரு சிங்களப் பெண்ணை மறு விவாகம் செய்து கொண்டு தன் வீட்டில் சுகமாக இருப்பதாகவும், இதுவரை எங்களுக்கு அது விஷயம் தெரியாததையும் பற்றி வியந்து எழுதினார்கள்.

அப்பொழுது என் மனம் அடைந்த வேதனையை எப்படிச் சொல்லுவது! மறுபடியும் நேரிடையாக அவருக்கே எழுதிக் கேட்டேன். அது உண்மைதானென்றும், வேண்டுமானால் நானும் குழந்தையும் அங்கு வந்திருக்கலாமென்றும் கூசாமல் எழுதியிருந்தார். எந்தச் சுயமரியாதையுள்ள பெண்ணும் இந்த அநியாயத்தைப் பொறுக்க மாட்டாள்.

அதிலிருந்து என் மனம் இடிந்து போய் விட்டது. உலகமே வெறுத்துவிட்டது. மனிதர்களின் காதல் உணர்ச்சியைக் குறித்து நான் வியந்தது கொஞ்ச நஞ்சமல்ல. பிறகு நான் மறுபடியும் கலாசாலையில் சேர்ந்து பி.ஏ. படித்து முடித்தேன். பின்னும் ஒரு வருஷம் டைப்ரைட்டிங்கும் சுருக்கெழுத்தும் கற்றேன். என் குழந்தையும் சிறிது பெரியவனாகிவிட்டான். இனிமேலும் அம்மாவுக்கும் அண்ணாவுக்கும் பாரமாக இருக்கக் கூடாதென்று எண்ணி வேலை தேடி அலைந்தேன். சில இடங்களில் இரண்டொரு மாதம் வேலை செய்தேன். ஏதாவதொரு வேலையை ஏற்று நானும் என் மகனும் கண்ணியமாகக் காலக்ஷேபம் செய்ய விரும்பினேன். ஆனால் பெண்ணாகப் பிறந்து விட்டால் பிறருடைய கொடுமைகளுக்கு ஆளாகிக் கஷ்டப்படவேண்டும் என்பதுதான் நம்முடைய சட்டம் என்று தோன்றுகிறது!'' என்று ஒரே மூச்சில் கூறி முடித்தாள் மாலதி.

ஆசிரியர் ''மாலி'' அப்படியே ஐந்து நிமிஷம் உட்கார்ந்தபடி இருந்தார். பிறகு மெதுவாகத் தலை நிமிர்ந்து, ''உங்கள் வாழ்க்கை உண்மையில் இவ்வளவு வருந்தத் தக்கதாக இருக்கும் என்று நான் எண்ணவே யில்லை. கதைகள் எழுதும்போது என்ன வேண்டுமானாலும் புனைந்து சந்தோஷமடையலாம். ஆனால் உண்மை நேருக்கு நேர் வரும்போது எவ்வளவு கஷ்டமானது என்பதை இன்றுதான் அறிய முடிந்தது. என்னுடைய வாழ்வில் நான் காதலித்த பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது போய்விட்டதினால் நான் பிரம்மச்சாரியாகவே யிருந்து விட்டேன். காதல்தான் தெய்வம் என்றெல்லாம் லட்சியம் கொண்டிருந்தேன். இப்பொழுது தங்களுடைய கதையைக் கேட்கும்போது 'காதல் உண்மையே அல்ல; நிச்சயமற்றது' என்று தெளிவாகத் தெரிகிறது. என்னுடைய சித்தி சில மாதங்களாக ஓர் அநாதை ஆசிரமம் வைத்து நடத்தி வருகிறாள். அதற்கு என்னை அடிக்கடி பணமும் ஆட்களும் அனுப்பும்படி கேட்பாள். உங்களைப்போல் உதவிக்கு ஒரு ஆளிருந்தால் எவ்வளவோ சந்தோஷமடைவாள். நீங்கள்



அக்கா:—ஏண்டா, மறந்து போகாமல் கடிதாசைத் தபாலில் போட வேண்டும் என்பதற்காகத்தானே இவ்வளவு ஞாபக முடிச்சுகள் போட்டிருக்கிறேன்? அப்படியும் மறந்து போய் விட்டாயே!

தம்பி:—போ அக்கா! நான் ஒன்றும் மறக்கவில்லை. நீதான் கடிதாசைக் கொடுக்க மறந்து போய்விட்டாய்!

இஷ்டப்பட்டால் நான் இப்பொழுதே ஏற்பாடு செய்து விடுவேன். நீங்கள் குழந்தையுடன் சௌகரியமாக இருக்கலாம்!'' என்றார்.

மாலதியின் முகம் மலர்ந்தது. கடவுளே தனக்கு வழி காட்டி உதவுவதாக எண்ணி அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டாள்.

''சரி! கடைசியாக இந்த ஒரு கடிதத்தை அடித்துக் கொடுத்து விடுங்கள்:

''காதல் களஞ்சியம்'' பத்திரிகை ஆசிரியருக்கு,

நீங்கள் கேட்ட காதல் கதையை அனுப்ப முடியாததற்கு வருந்துகிறேன். இனிமேல் நான் காதல் கதைகள் எழுதவே போவதில்லை. மனிதனுக்குக் காதல் என்பது கேவலம் சரீர சம்பந்தமானது என்கிற எண்ணம் ஒழிய வேண்டும். ஆண் பெண் காதலைவிட உயர்ந்த காதலொன்று உலகில் இருக்கிறது. அதுதான் சுயநலமற்ற அன்பு. மனிதன் யாராயினும் ஒருவருக்கொருவர் காட்டக்கூடிய புனிதமான அன்பு. அதை நான் இன்றுதான் உணர்ந்தேன். வந்தனம்.

—''மாலி.''

ஆணித்தரமான தீர்ப்பு

கொழும்பு, ஜூலை 5உ—

எட்டு லட்சம் இலங்கை இந்தியர்களின் வருங்காலத் தலைவிதியையும் அவர்களுடைய அரசியல் அந்தஸ்தையும் நிர்மாணிக்கக்கூடிய ஒரு முக்கியமான தீர்ப்பைக் கொழும்பு ஜில்லா நீதிபதி ஸ்ரீ சிவஞான சுந்தரம் இவ்வாரம் வெளியிட்டிருக்கிறார். சுமார் 18 பக்கங்கள் அடங்கிய இத் தீர்ப்பு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததென்று கூறினால் மிகையாகாது.

இந்தத் தீர்ப்புக்குக் காரணமாயிருந்த ஸ்ரீ கே. ஜி. எஸ். நாயரின் அப்பீல் விருத்தாந்தம் ரஸமானது. இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தின்படி இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ள விரும்பும் இந்தியர்களுக்கு ஆகஸ்டு 5-ம் தேதிவரை மனுப்போட அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் தவணை காலமே இன்னும் முடியவில்லை. இதுவரை போட்டுள்ள ஒன்றரை லட்சம் மனுக்களில் ஓராயிரம் மனுக்களைத்தான் அரசாங்கம் பட்டுவாடாச் செய்திருக்கிறது. பதிவுக் கமிஷனர் காரியாலயத்தில் மலைபோலக் குவிந்து கிடக்கும் மற்ற மனுக்களைப் பட்டுவாடாச் செய்து இலங்கை இந்தியர்களில் யார் யார் இலங்கைப் பிரஜைகள் என்பதைத் நிர்மாணிக்க வேண்டுமானால், தற்சமயம் காரியங்கள் நடைபெறும் நத்தை வேகத்தில் சுமார் பத்து வருடங்களாவது பிடிக்கும்.

இரண்டு லட்சம் இந்திய ஓட்டர்களை வாக்காளர் ஜாபிதாக்களிலிருந்து நீக்கியது அக்கிரமமென்று ஸ்ரீ எஸ். தொண்டமான், ஜனாப் அஸீஸ் போன்ற இந்திய அங்கத்தினர்களும் ஸ்ரீ செல்வநாயகம் போன்ற இந்திய அனுதாபிகளும் சென்ற வாரம் கூட பார்லிமெண்டில் இடித்துக் காட்டினார்கள். டாக்டர் மலானைப் பின்பற்ற வேண்டாமென்று ஒரு சிங்கள அங்கத்தினரே ஸ்ரீ சேனநாயகாவை எச்சரித்தார். ஆனால் சேனநாயகா அசைந்து கொடுப்பதாயில்லை. அதற்கு மாறாக இந்தியர்களைப் பற்றி இடக்காகவும் அலட்சியமாகவும் வார்த்தைகளைக் கொட்டினார். சிங்கள விவசாயிகளை விரட்டி நாட்டைச் சூறையாட வந்த பிரிட்டிஷாருக்கு இந்தியர்கள் உடந்தையாயிருந்தார்களென்றும் அதை உத்தேசித்தே அவர்களுக்கு முன்பு ஓட்டுரிமை அளிக்கப்பட்டிருந்ததென்றும், நாடு சுதந்திரம் பெற்று விட்டபடியினால் சூறையாடியவர்களின் ஓட்டுரிமையைப் பறித்து விட்டதாயும் அவர் வியாக்கியானம் செய்தார்.

இப்படிப்பட்ட சமயத்தில்தான் ஸ்ரீ கே. ஜி. எஸ். நாயர் அப்பீலில் கொழும்பு ஜில்லா நீதிபதி ஆணித்தரமாகத் தீர்ப்புக் கூறியிருக்கிறார். ஸ்ரீ நாயரின் பெயர் 1935-ம் வருடம் முதற்கொண்டு ஓட்டர் ஜாபிதாவில் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. பிரஜாவுரிமைச் சட்டத்தின்படி அவர் இன்னும் இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்து கொள்ளவில்லை. இக் காரணத்தை முன்னிட்டு அவருடைய பெயரையும் அவரைப் போன்ற நிலையிலுள்ள இரண்டு லட்சம் இந்தியர்களின் பெயர்களையும் ஓட்டர் பதிவுக் கமிஷனர் வாக்காளர் ஜாபிதாவிலிருந்து நீக்கினார். அதை ஆட்சேபித்தும் தமது பெயரைத் திரும்பவும் ஓட்டர் ஜாபிதாவில் சேர்க்கும்படி உத்தரவிடுமாறு கோரியும் ஸ்ரீ நாயர் அப்பீல் கொடுத்தார். நீதிபதி ஸ்ரீ சிவஞானசுந்தரம் அவருக்குச் சாதகமாக உத்தர விட்டிருக்கிறார். மேற்படி தீர்ப்பின் சாராம்சம் பின் வருமாறு:—

"அரசியல் திட்டத்தின் 29 (1) ஷரத்தில் பார்லிமெண்டு சபையின் சட்டமியற்றும் அதிகாரங்கள் வரையறுக்கப் பட்டுள்ளன. ஒரு வகுப்பாருக்கு மற்றவர்களுக்கில்லாத வில்லங்கங்களை உண்டு பண்ணக்கூடிய முறையிலோ அல்லது பிரத்தியேக சலுகைகளையும் வசதிகளையும் அளிக்கக் கூடிய முறையிலோ சட்டமியற்றும் அதிகாரம் பார்லிமெண்டு சபைக்குக் கிடையாதென்று 29 (1) வது ஷரத்து தெளிவாகக் கூறுகிறது. இந்த ஷரத்தின் இலட்சியம் அரசியல் திட்டத்தை பார்லிமெண்டு சபை நிறைவேற்றிய பொழுது இலங்கையிலிருந்த ஒவ்வொரு வகுப்பாருக்கும் இருந்து வந்த உரிமைகளையும் வசதிகளையும் பாதுகாக்க வேண்டுமென்பதுதான். இருக்கும் உரிமைகள் பறிக்கப்படாமலிருக்கும் பாதுகாப்பு நடவடிக்கையாகவே 29 (1) வது ஷரத்து அரசியல் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். இந்த ஷரத்தின் லட்சியத்தை நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ முறியடிக்கும் முறையில் சட்டமியற்றுவது பார்லிமெண்டின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட விஷயம்.

"பிரஜா வுரிமைச் சட்டம், தேர்தல் திருத்தச் சட்டம் இவ்விரண்டினுடைய பொது இலட்சியமும் இந்தியர்களுடைய ஓட்டு பலத்தைக் குறைப்பதுதான். இந்தியர்கள் இந்நாட்டில் நீடித்து வசித்து வந்த பொழுதிலும் அவர்களில் பெரும்பாலோர் பிரஜாவுரிமைச் சட்டப் பரீட்சையில் தேறி இலங்கையர்களாவதும் ஓட்டர்களாவதும் துர்லபம். அவர்கள் ஓட்டர்களாக அவர்களிடமில்லாத சில யோக்கிய தாம்சங்களைக் கேட்கின்றன இந்தச் சட்டங்கள். இந்த யோக்கியதாம்சங்கள் இலங்கையர்களிட மிருப்பதினால் அவர்களை இச்சட்டங்கள் பாதிக்கவில்லை. ஆகவே இரு சட்டங்களும் சட்ட விரோதமானவை. ஸ்ரீ நாயரின் பெயரைத் திரும்பவும் ஓட்டர் ஜாபிதாவில் சேர்க்க வேண்டுமென்றும் அப்பீல் மனுவில் அவர் ஒட்டிய ஐந்து ரூபாய் முத்திரைக் கட்டணத்தையும் அவருக்குத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்றும் உத்தர விடுகிறேன்."

ஆணித்தரமான இத்தீர்ப்பை உத்தேசித்து ஓட்டர் ஜாபிதாக்களிலிருந்து நீக்கிய இரண்டு லட்சம் இந்தியர்களின் பெயர்களையும் கண்ணியமாக மறுபடியும் ஜாபிதாவில் சேர்க்க வேண்டுமென்று ஜனாப் அஸீஸ் அரசாங்கத்துக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அரசாங்கத்துக்கு இது ஒரு தர்மசங்கடமான நிலைமைதானென்பதில் சந்தேகமில்லை. கொழும்பு நீதிபதியின் தீர்ப்பை அனுசரித்து நடப்பதாயின் ஓட்டர் ஜாபிதாக்களைத் திருத்தியமைத்து, இந்தியர்களுக்கு வேண்டா வெறுப்புடன் ஓட்டுரிமை அளிப்பதோடு பழைய திட்டத்தின்படி அடுத்த ஆண்டில் பொதுத் தேர்தலையும் சட்டுப்புட்டென்று நடத்தி முடிக்க இயலாது. சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் கொடுத்தாலும்கூட, இந்திய வாக்காளர்களில்லாமல் நடத்தும் பொதுத் தேர்தல் சட்டப்படி செல்லுமா என்ற ஒரு சிக்கலான பிரச்னையும் ஏற்படவே செய்யும்.

—ரஜனி.

கொடுத்து வைத்தவள்



வி.எஸ்.ஆர்.

"யாரது! ஞானவி!" என்ற பெண் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள் ஞானவி. இவ்வளவு சுவாதீனமாக, அதுவும் முன்பின் தெரியாத இவ்வளவு பெரிய பட்டணத்தில் யார் தன்னைக் கூப்பிட முடியும் என்று அதிசயித்த வண்ணம் அவள் திரும்பிப் பார்த்தாள். எதிரே நின்ற பெண்ணை நினைவுக்குக் கொண்டு வர முயன்றாள் ஞானவி. "யார்! மரகதம்!" என்று ஆவல் ததும்பக் கேட்டாள் அவள். "ஆமாம், நான் மரகதம் தான்! என்னை அடையாளம் கண்டு கொள்ள இவ்வளவு நேரம் ஆயிற்று! ஆனால் நானோ உன்னைப்பார்த்தவுடனேயே தெரிந்து கொண்டு விட்டேனே!" என்று முகத்தில் குதூகலம் ததும்பக் கூறித் தன் சிநேகிதியின் கையைப் பற்றினாள் மரகதம்.

பல வருஷங்கள் கழித்துச் சந்தித்த தன் பால்ய சிநேகிதியைப் பார்த்ததும் ஞானவி விவரிக்க இயலாத ஆனந்தத்தையும் பரபரப்பையும் அடைந்தாள்.

"மரகதம்! உன்னை அடையாளம் தெரியவில்லைதான். நீ எவ்வளவு அழகாக, எவ்வளவு உயரமாக வளர்ந்திருக்கிறாய்!" என்று கூறி சர்வாலங்காரத்துடன் விளங்கும் மரகதத்தை மேலும் கீழுமாகப் பார்த்தாள். மரகதத்தின் ஆடையாபரணங்கள் அவள் நல்ல நிலைமையில் இருப்பதைத் தெரியப்படுத்தின. சாதாரணப் பட்டிக்காட்டுப் பெண்ணாக இருந்த மரகதம் இப்பொழுது எவ்வளவு நவ நாகரிக யுவதியாக விளங்குகிறாள்!

"ஞானவி! அன்று போலவே இன்றும் இருக்கிறாய்! ஆனால் உன் அழகுடன் நான் எப்பொழுதாவது போட்டி போட முடியுமா, என்ன!" என்றாள் மரகதம்.

"மரகதம்! மரகதம்! எவ்வளவு எதிர்பாராத சந்திப்பு! நீ இப்பொழுது எங்கே யிருக்கிறாய்! உன் அகத்துக்காரருக்கு என்ன வேலை! எத்தனை குழந்தைகள்! எல்லாவற்றையும் சொல்லு!" என்று மூச்சு விடாமல் கேள்விகளை அடுக்கினாள் ஞானவி.

"முதலில் உன்னைப் பற்றிச் சொல்லு!" என்று எல்லையற்ற உற்சாகம் மேலிடக் கெஞ்சினாள் மரகதம்.

"நீ தான் சொல்ல வேண்டும்!" என்று கெஞ்சிக் கொண்டே கொஞ்சினாள் ஞானவி.

"ஞானவி! வரவில்லையா?" என்று அப்பொழுது யாரோ ஒரு அம்மாள் கூப்பிட்டாள். அவர்கள் அப்பொழுது நின்று கொண்டிருந்தது சென்னை கந்தஸ்வாமி கோவில் அருகில் உள்ள பாத்திரக் கடை வாசலில்.

"இதோ வந்து விட்டேன், மாமி!" என்று அவசரமாக ஞானவி பதில் சொல்லி விட்டு மரகதத்தைப் பார்த்து, "மரகதம் உன் விலாசத்தைச் சொல்லு! கட்டாயம் உன் வீட்டுக்கு நாளைக்குச் சாயங்காலம் வருகிறேன். எல்லாவற்றையும் நேரில் பேசிக் கொள்வோம்" என்றாள் ஞானவி.

"நான் மாம்பலம், நவநீதம் தெரு, பத்தாம் நம்பர் வீட்டில் இருக்கிறேன். கட்டாயம் நாளைக்கு வர வேண்டும். உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன்" என்று கூறி, ஞானவியைப் பார்த்து ஒரு குதூகலப் புன்னகை புரிந்து விட்டு அருகில் நின்று கொண்டிருந்த பளபளவென்று கண்ணைப் பறிக்கும் காரில் ஏறிக் கொண்டாள் மரகதம். காரில் செல்லும் பால்ய சிநேகிதியையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டு நின்றாள் ஞானவி.

"யாருடி அந்தப் பெண்!" என்று கேட்டாள் ஜானகியின் மாமி.

"நாங்கள் இரண்டு பேரும் சிறு வயதிலிருந்து ஒன்றாக விளையாடியவர்கள். மரகதம் எங்கள் ஊர்ப் பெண். கல்யாணமாகிப் புக்ககம் போன பிறகு, ஐந்து வருஷங்கள் கழிந்து இப்பொழுதுதான் சந்தித்தோம்" என்றாள். ஜானகியும் அவள் மாமியும், அவர்களுடன் வந்திருந்த இன்னும் சில ஸ்திரீகளும் ரிக்ஷாக்களில் ஏறிக் கொண்டனர்.

• • •

ஜானகியின் மாமா பெண்ணுக்கு இன்னும் சில தினங்களில் சென்னையில் கல்யாணம் நடைபெற இருந்தது. அதற்காக அவள் புக்ககத்துக் குக்கிராமமான குளத்தூரிலிருந்து முதல் தினம் சென்னைக்கு வந்திருந்தாள். குளத்தூர் சென்னைக்கு அருகாமையில் இருந்தும் அவள் சென்னைக்கு வர அதுவரை சந்தர்ப்பம் ஏற்படவில்லை. பட்டணத்தையே அது வரை பார்த்திராத ஜானகி, மிகவும் ஆவலுடன் பட்டண விஜயத்தை எதிர்பார்த்திருந்தாள். ஆனால் எதிர்பாராத காரணத்தால் அவள் கணவன் ஜகன்னாதன் கிளம்ப முடியாமல் போகவே, வேறு சில பந்துக்களுடன் ஜானகியைச் சென்னைக்கு அனுப்பி வைத்திருந்தான். உற்சாகமாக ஜானகியும் வந்தாள்.

சென்னைக்கு வந்த மறுநாள் ஜானகி மாமியுடன் பாத்திரக்கடைக்குச் சென்ற போது தான் எதிர்பாராதவிதம் மரகதத்தைச் சந்தித்தாள். மரகதமும் ஜானகியும் தஞ்சை ஜில்லாவிலுள்ள ஒரு கிராமத்தில் பிறந்தவர்கள். மரகதம் சாதாரண மிராசுதாரின் மகள். காலட்சேபத்துக்குப் போதுமான சொற்ப வருவாய் உள்ள குடும்பத்தில் பிறந்தவள். ஆனால் ஜானகியோ செல்வம் மிகுந்த குடும்பத்தில் பிறந்திருந்தாள். சிறு வயதிலிருந்தே மரகதமும் ஜானகியும் நெருங்கிய சிநேகிதிகள் ஆயினர். இருவரும் ஒருவரை யொருவர் ஒரு கணமும் பிரிந்திருக்க மாட்டார்கள். தான் சாப்பிடும் தின்பண்டங்களை ஜானகி மரகதத்துடன் பகிர்ந்து கொள்ளாமல் இருக்கமாட்டாள். செல்வமும் அந்தஸ்தும் இக்குழந்தைகளின் நட்பைப் பிரிக்கவில்லை. அவர்கள் பெரியவர்களானதும், அவர்கள் பகிர்ந்து கொண்ட ரகசியங்கள்தான் எவ்வளவு! மனம் விட்டுப் பேசிய அன்பு மொழிகள்தான் எத்தனை!

ஒருநாள் யாரோ ஒரு வாலிபன் பட்டணத்திலிருந்து மரகதத்தைப் பெண் பார்க்க வந்தான். சில நாட்களுக்கெல்லாம் அவனுக்குக் கல்யாணம் நடந்தது. அப்பொழுது புக்ககம் சென்ற மரகதத்தை இப்பொழுதுதான் ஜானகி பார்த்தாள்! பூங்கொடிபோல்! மெலிந்த தேகத்துடன், ஏழ்மையின் உருவாக, எளிமையின் பிரதிநிதியாக விளங்கிய மரகதம் எங்கே! வாளிப்பான ஆகிருதியுடன், செல்வத்தில் கொழிக்கும், நவநாகரிக மரகதம் எங்கே!

முன்பெல்லாம் மரகதமும் ஜானகியும் ஜோடியாய் வெளியில் செல்லும்போது, ஜானகிதான் அழகி என்று யாரும் சொல்வார்கள். இன்றோ தன்னைவிட மரகதம்தான் அழகிலும் ஆரோக்கியத்திலும் சிறந்து விளங்குகிறாள் என்பதை ஜானகி உணர்ந்தாள். மரகதம் போட்டுக் கொண்டிருந்த வைர நகைகளையும் அவள் ஏறிச்சென்ற பளபளவென்ற காரையும் அவள் எப்படி மறக்க முடியும்! இந்தச் சமயத்தில் மரகதத்தின் நிலைமையைத் தன் நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்க்காமலிருக்க அவளால் முடியுமா!

மரகதத்துக்குக் கல்யாணமாகிப் புக்ககம் சென்ற மறு வருஷம் ஜானகியின் கல்யாணம் நடந்தது. ஜகன்னாதனைச் சிறு வயதிலிருந்தே ஜானகிக்கு நன்றாகத் தெரியும். அவன் தூரபந்துவுங்கூட. செங்கற்பட்டுக்கு அருகிலுள்ள குளத்தூர் அவன் சொந்த ஊர். ஜகன்னாதன் ஏழை என்று தெரிந்திருந்தும் அவனையே கல்யாணம் செய்து கொள்வேனென்று ஜானகி பிடிவாதம் செய்தாள். பெண்ணின் அந்தரங்கமான காதலை உணர்ந்த அவள் தந்தையும் கல்யாணத்தை நடத்தி விட்டார்.

ஜானகியின் தந்தை தம் செல்வம் அனைத்தையும் தமது மகளின் சுக வாழ்வுக்காக அர்ப்பணம் செய்யத் தயாராக இருந்தார். ஆனால் ஜகன்னாதன் தன் மாமனாரின் உதவியை நிராகரித்து விட்டான். அவனுக்கிருந்த பத்து ஏக்கர் நிலம் அக்குடும்பத்தின் ஜீவனத்



குழந்தை:—அம்மா, இரண்டு வருஷமாக ரயிலில் போகும்போதெல்லாம் எனக்கு நாலு வயது என்று சொல்லிக் கொண்டிருக்கிறாயே! எனக்கு ஐந்தாகிறதற்கு எத்தனை வருஷம் ஆகும், அம்மா?

அம்மா:—உஷ்.......ஷ்.......!

குழந்தை:—அம்மா, உனக்கு வயது ஐந்து ஆகிறதற்கு எத்தனை வருஷம் ஆயிற்று, அம்மா?

னுக்குப் போதுமானதாக இருந்தது. புருஷன் வீட்டுக்கு வந்த ஜானகிக்கு எளிய வாழ்வு காத்திருந்தது. புக்ககத்தில் வேறு மனிதர்கள் இல்லாத காரணத்தால் குடும்ப பாரம் அவ்வளவையும் அவளே தாங்கவேண்டி வந்தது. பணமுடையினால் குடும்பம் தத்தளித்த சமயத்தில் ஜானகி, "ஏன் இந்தப் பிடிவாதம்! என் அப்பா என்ன வேற்று மனிதரா! ஏன் அவர் உதவியை இப்படி வெறுக்க வேண்டும்!" என்று கேட்டாள். "ஏன் என்னைக் கல்யாணம் செய்து கொண்டாய்! என் செல்வத்தைப் பார்த்து நீ என்னைக் கல்யாணம் செய்துகொள்ளவில்லை யல்லவா!" என்றான். அதிலிருந்து ஜானகி அந்தப் பேச்சையே எடுப்பதில்லை. வாஸ்தவந்தான். அந்த வறுமை வாழ்வு அவளாகத் தேர்ந்தெடுத்ததுதானே!

தன் நிலைமையும் மரகதத்துக்கு வந்த எதிர்பாராத அதிருஷ்டத்தையும் ஒப்பிட்டுப் பார்த்ததும் இப்பொழுது அவளுக்குச் சற்றுப் பொறாமை ஏற்படத்தான் செய்தது.

* * *

மறுநாள் மாலை, மரகதத்திடம் வாக்களித்திருந்தபடியே அவள் வீடு சென்றாள். நவநீதம் தெரு 10-ம் நம்பர் வீட்டைக் கண்டு அவள் திகைத்துப் போனாள். வெண்மை வெளேரென்று பிரகாசித்த அந்தப் பெரிய பங்களாவின் முன்புறத்தை மலர்க்கொடிகள் மறைத்தன. விதம் விதமான புஷ்பச் செடிகள் தோட்டத்தை அலங்கரித்தன. இந்த அழகிய பங்களாவுக்கும் குளத்தாரிலுள்ள தன் ஓட்டு வில்லை வீட்டுக்கும் எவ்வளவு வித்தியாசம்!

மரகதம் வாசலிலே நின்று கொண்டிருந்தாள். சிநேகிதியைக் கண்டதும் குதூகலத்துடன் வரவேற்று அழைத்துப் போனாள். உள்ளே சென்ற ஜானகி அங்கிருந்த ஸோபாக்களையும், கட்டில்களையும் அலங்காரங்களையும், பார்த்துப் பிரமித்தாள்.

"ஜானகி! டிபன் சாப்பிடு!" என்று கூறிப் பட்சணத் தட்டை அவள் எதிரில் வைத்தாள் மரகதம். சாப்பிடும்போதே மெய்மறந்த நிலையில் தங்கள் பால்யப் பருவத்து நினைவுகளைப் பற்றிப் பேசினார்கள். வெகு நாட்கள் கழித்துச் சந்தித்த பால்ய சிநேகிதிகள் எப்படிச் சம்பந்த மில்லாமல் பேசிச் சிரித்து மகிழ்வார்களோ அப்படியே செய்தார்கள். சாப்பிட்டு முடித்ததும், மரகதம் ஜானகியை உள்ளே அழைத்துக் கொண்டுபோய்த் தன் பங்களா முழுவதையும் சுற்றிக் காண்பித்தாள். பின்னர் அறைக்கும் அழைத்து வந்து தன் நகைகள், பட்டுப் பட்டாடைகள் எல்லாவற்றை

'மூக்கு பத்திரம்!'

அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் சில தினங்களுக்கு முன் ஒரு சங்கீத விமர்சகருக்குக் கடிதம் ஒன்று எழுதினார். "அடுத்த தடவை நான் உம்மைச் சந்திக்க நேரும் போது, நீர் உம்முடைய மூக்கைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் என் முஷ்டியினால் அதற்கு (மூக்குக்கு) ஆபத்து நேரப் போகிறது" என்று ட்ரூமன் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தார். ட்ரூமனின் ஏக புத்திரியான மார்கரேட் ட்ரூமன் பொது மேடைகளில் பாடுவது உண்டு. ஜனாதிபதியின் புதல்வி என்ற காரணத்தினால் அவரது பாட்டை விமர்சகர்கள் மிகப் பாராட்டி எழுதுவது வழக்கம். ஆனால் சமீபத்தில் ஒரு விமர்சகர், "மார்கரேட் ட்ரூமனின் பாட்டு அபஸ்வரக் களஞ்சியமாக இருக்கிறது" என்று குறிப்பிட்டிருந்தார். தனது புதல்வியைப் பற்றி அவ்விதம் எழுதிய விமர்சகரின் மீது ஜனாதிபதி ட்ரூமனுக்கு அவ்வாறு கோபம் வந்தது இயல்புதானே! மார்கரேட் ட்ரூமன் இப்போது ஐரோப்பாவில் யாத்திரை செய்யப் புறப்பட்டிருக்கிறார். தாம் போகும் இடங்களில் தம்மைப் பாடும்படி பொது ஜனங்கள் கேட்டால், தாம் பாடத் தயாராக இருப்பதாகவும் பயமுறுத்தியிருக்கிறார்.




மார்கரேட் ட்ரூமன்

அரசியல் மாயாவி

சியாம் பிரதம மந்திரி பிபுல் ஸாங்கிராம் இருக்கிறாரே, அவரை அரசியல் மாயாவி என்று சயாம் மக்கள் கருதுகின்றனர். 1940-ம் வருஷம் ஜப்பான் யுத்தம் ஆரம்பமாவதற்கு முன் ஜப்பானிலிருந்து உயர்தர அதிகாரி ஒருவர் இரகசியமாகச் சயாமுக்கு வந்து, 'நீங்கள் எந்தக் கட்சி!" என்றார். 'சந்தேகம் என்ன! ஆசிய ஆசியர்களுக்கு அல்லவா! நான் உங்கள் கட்சிதான்' என்றார் ஸாங்கிராம். பிறகு சில நாட்கள் கழித்து பிரிட்டிஷ் சர்க்கார் பிரதிநிதி வந்து சயாம் பிரதம மந்திரியிடம் அதே கேள்வியைப் போட்டார். 'நீங்கள் ஜனநாயகத்தை ரட்சிக்கப் போகிறவர்கள் அல்லவா! நான் உங்கள் கட்சிதான்' என்றார் ஸாங்கிராம். பிறகு யுத்தம் மூண்டது. சயாம் பகிரங்கமாக ஜப்பான் கட்சியில் சேர்ந்து நேசநாடுகள் மீது யுத்தப் பிரகடனமும் செய்தது. ஆனால் இரகசியமாக நேச நாடுகளின் கட்சியில் இருந்தது. எனவே யார் ஜயித்தாலும் யார் தோற்றாலும் ஸாங்கிராம் மாத்திரம் எப்போதும் பிரதம மந்திரி பதவியில் இருந்தார், இன்றும் இருந்து வருகிறார். அவரைப் பதவியிலிருந்து துரத்துவதற்கும் அவரது உயிருக்கு உலை வைப்பதற்கும் எத்தனையோ சதிகள் நடந்தன. சமீபத்தில் கூட சயாம் கடற்படையினர் சதி செய்து ஸாங்கிராமைக் கடத்திச் சென்றார்கள். ஆனால் மறுபடியும் அரசியல் மாயாவி ஸாங்கிராம் பிரதம மந்திரி பதவிக்கு வந்து விட்டார்!



ஸாங்கிராம்



"அட ஈசுவரா! உனக்கு இன்னும் கல்யாணமே ஆகவில்லை என்றல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறேன்! உன் அகத்துக்காரர் பெயர் என்னடி?"

"நீங்கள் தான் முதலிலேயே சொல்லி விட்டீர்களே, மாமி!"

யும் எடுத்துக் காட்டினாள். "ரொம்ப பேஷாயிருக்கிறதே! ரொம்ப நன்றாயிருக்கிறதே!" என்று ஞானம் சொல்லி வந்தபோதிலும் தன் வறுமை நிலை அவளுக்கு ஞாபகம் வந்து வேதனையைக் கொடுத்தது. "மரகதம்! நீ கொடுத்து வைத்தவள்! உன் அதிருஷ்டம் யாருக்கு வரும்!" என்று மலர்ந்த முகத்துடன் கூறியபோதிலும் கசப்பின் ரேகை உள்ளத்தே படர்ந்தோடியது.

"இது என்ன மரகதம்! புலியும் காட்டுப் பன்றியும்!" என்று கூடத்தில் நடுவில் இருந்த இரு உருவங்களைச் சுட்டிக் கேட்டாள் ஞானம்.

"இதுவா! என் அகத்துக்காரருக்கு வேட்டையாடுவதில் பிரியம். ஞாயிற்றுக் கிழமைகளில் வெளியூர்க் காடுகளுக்குச் சென்று புலி, காட்டுப்பன்றி, ஓநாய் முதலிய மிருகங்களை வேட்டையாடுவார். செத்துப்போன மிருகங்களில் வைக்கோலை அடைத்து வீடு நிறைய வைத்திருந்தார். நான்தான் அவைகளை எடுத்து அதோ அந்த அறையில் வைத்துப் பூட்டியிருக்கிறேன். இந்த இரண்டு மிருகங்களை மட்டும் இங்கேயே வைத்திருக்க வேண்டும் என்று பிடிவாதம் செய்து வைத்துக் கொண்டிருக்கிறார்" என்றாள் மரகதம்.

"ஆமாம். உன் அகத்துக்காரரைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே!" என்று கேட்டாள் ஞானம்.

"என் அகத்துக்காரர் பாங்குக் கம்பெனி நடத்துகிறார். லக்ஷக்கணக்கான ரூபாய்களுக்குப் பாங்குகளை வாங்குகிறார்; விற்கிறார். பண முடை என்பதே எனக்குக் கிடையாது" என்றாள் மரகதம். தன் பெருமையை எவ்வளவு அடக்கமாக 'எவ்வளவு படாடோபமின்றி மரகதம் சொல்லிக் கொள்கிறாள் என்பதை நினைக்க நினைக்க ஞானம் உண்மையில் அளவு கடந்த ஆச்சரிய மடைந்தாள்.

"மரகதம்! நான் பட்டிக் காட்டுப் பெண் தானே! இந்த ஊரில் பல வருஷங்களாக இருப்பவள் நீ! இந்த ஊரில் வேடிக்கை, விநோதம் நிறைய இருக்குமே! அதைப்பற்றியெல்லாம் எனக்குச் சொல்லு!" என்று ஒரு குழந்தையைப் போல் கேட்டாள் ஞானம்.

"இவ்வளவு பெரிய பட்டணத்தில் வேடிக்கை விநோதங்களுக்கு என்ன குறைச்சல்! திருவல்லிக்கேணி கடற்கரை மெரினாவைப்போல உலகத்தில் எங்குமே கிடையாதாம். பார்க், மியூஸியம், மிருகக் காட்சி சாலை, நூல் நிலையங்கள் எல்லாம் பார்க்க வேண்டியவை. இதைத் தவிர புதுப்புது சினிமாக்கள், நாடகங்கள் வேறு. டிஸம்பர் வந்து விட்டால் சங்கீதக் கச்சேரிகள், மகாநாடுகள் இவைகளுக்குக் குறைவில்லை!" என்று பட்டணத்தின் மகிமையை மரகதம் எடுத்துக்கூற ஆரம்பித்ததும் ஞானம் திகைத்துப் போய் விட்டாள். கிராமத்தில் பிறந்து, கிராமத்தில் வாழ்க்கைப்பட்ட பெண்ணுக்குப் பட்டண மகத்துவம் வியப்பை அளித்தது.

"ஞானம்! உன் புக்ககத்தைப்பற்றி நீ ஒன்றுமே சொல்லவில்லையே. உன் கிராம வாழ்க்கையைப் பற்றியும் நான் தெரிந்து கொள்ள ஆவலாக இருக்கிறேன். எல்லாவற்றையும் சொல்லு!" என்றாள் மரகதம்.

"என் அகத்துக்காரர் ஒரு சாதாரண மிராசுதார்தான். காலட்சேபத்துக்குக் கஷ்டமில்லை. என்ன மரகதம்! விசேஷமாகக் குறிப்பிடும்படி கிராமத்தில் என்ன நடக்கப் போகிறது!" என்று ஞானம் கூறினாளே தவிர, பேச்சுவாக்கில் கிராம வாழ்க்கையைப் பற்றிப் பிரமாதமாக வர்ணிக்க ஆரம்பித்து விட்டாள்.

"அடடா! எங்கள் கிராமத்தில் எப்பொழுதும் ஜலத்துக்குக் குறைவில்லை! பச்சைப் பட்டாடை உடுத்தி இயற்கை அன்னை புதுப் புஷ்பமாலைகள் அணிந்து எவ்வளவு அழகாகக் காட்சி யளிப்பாள். தெரியுமா! நாங்கள் ஆனந்தமாக ஏரியில் நீந்துவோம். எங்கள் அகத்தில் இரண்டு பசுமாடுகள் இருக்கின்றன. நான்தான் பால் கறப்பேன். கூழ் போல் பாலும் கட்டி கட்டியாகத் தயிரும் எங்களுக்குக் கிடைக்கும்!" என்று உற்சாகத்துடன் ஞானம் கூறியபோதிலும், அவளுக்கே தான் கூறியதெல்லாம் 'சப்'பென்று இருந்ததாகத் தோன்றியது. மரகதத்தின் அற்புதமான பங்களாவுக்கும் கண்ணைப் பறிக்கும் காருக்கும், அவளது ராஜ போகத்துக்கும் முன்னால் தன் பசுமாடும் கட்டித் தயிரும் எம்மாத்திரம்!

"அப்புறம் குளத்தூரில் என்ன விசேஷம், ஞானம்!" என்று கேட்டாள் மரகதம்.

"மரகதம்! எங்கள் ஊர் ஒரு ஒதுப்புறமான இடம் என்பதனால் ரேடியோ, கிராமபோன், மோட்டார் ஒன்றும் இல்லை என்று எண்ண வேண்டாம்!" என்றாள் பெருமிதத்துடன்.

"அதெல்லாம் கூட இருக்கிறதா!" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் மரகதம்.

"ஓ! எங்கள் தெருவுக்குப் பக்கத்துத் தெருவில் ரஞ்சிதம் வீட்டிலிருந்து ஓயாமல் ரேடியோ சத்தம் கேட்கும். கிராமபோன் பாடும்...... ஆனால் நாங்கள்தான் அவள் வீட்டுக்குப் போவதில்லை!" என்றாள் ஜானகி.

"ஏனோ!" என்று கேட்டு வைத்தாள் மரகதம்.

"ஒன்றுமில்லை; அவள் ஒரு தாசி. யாரோ ஒரு பணக்காரன் அடிக்கடி பிரும்மாண்டமான காரில் அவள் வீட்டுக்கு வருகிறான், போகிறான். அந்தப் பணக்காரன் ஏதோ தற்செயலாகக் குளத்தூருக்கு ஒரு நாள் வந்த போது இருவருக்கும் சம்பந்தம் ஏற்பட்டு விட்டது. அது போகட்டும். எந்த ஊரில் இருந்தாலும் குளத்தூரில் இருப்பது போல் ஆகுமா!" என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டாள் ஜானகி. ஆனால் அவள் மன ஏக்கத்தையும் வேதனையையும் அவள் குரல் காட்டி விட்டது. அந்த வீட்டில் தன்னைச் சுற்றிலுமுள்ள ஒவ்வொரு பொருளையும் பார்க்கப் பார்க்க "மரகதம் கொடுத்து வைத்தவள்" என்று அவள் வாய்க்குள் சொல்லிக் கொண்டாள்.

லக்ஷம் லக்ஷமாகப் பணம் சம்பாதித்து செல்வத்தின் சகல சுகங்களையும் மனைவிக்கு அளித்து, அருமை பெருமையாக அவளை வைத்துக்கொண்டிருக்கும் மரகதத்தின் கணவனுடன் ஏழை ஜகந்நாதனை அவள் மனம் ஒப்பிட்டுப் பார்த்தது. ஒட்டுப் போட்ட சட்டையுடனும், காவி படிந்த வேஷ்டியுடனும், தலையில் கட்டுக்குடுமியுடன் பகலெல்லாம் வயலில் உழைத்து விட்டு, அலுத்துக் களைத்து வீட்டுக்கு வரும் ஜகந்நாதனின் உருவம் ஜானகியின் மனத்தின் முன் நின்றது. அதுவரை அனுபவித்திருந்த ஒரு ஏமாற்றமும் வேதனையும் அவள் உள்ளத்தே தலை தூக்கியது.

"நாழியாகிறது மரகதம்! நான் போய் வருகிறேன்! என்னை ஞாபகம் வைத்துக் கொள்வாயா!" என்று கூறி விட்டு எழுந்த ஜானகியின் கண்கள், சுவரில் மாட்டப் பட்டிருந்த புகைப்படத்தின் மீது விழுந்தது. அந்தக் கணத்தில் அவள் இடி விழுந்தவள் போல் ஸ்தம்பித்து நின்று விட்டாள்.

"இது யாருடைய படம்!" என்ற வார்த்தை மெள்ள ஜானகியிடமிருந்து வெளிவந்தது.

"என் அகத்துக்காரர் படம்!" ஜானகி நினைத்தது சரிதான்! அது மரகதத்தின் கணவனின் படம்தான்! ஜானகிக்குத் தலைசுற்றி மயக்கம் வருவதுபோலிருந்தது. குளத்தூரில் ரஞ்சிதத்தின் வீட்டுக்கு எந்தப் பெரிய மனிதர் காரில் வருவதை அவள் அடிக்கடி பார்த்திருக்கிறாளோ அவரேதான்! எந்த மனிதர் அவள் ஊருக்குப் பக்கத்திலுள்ள பெருங்குடிக் காட்டில் புலிவேட்டையாட வருவதாக ஊரார் சொல்லிக் கொண்டார்களோ அந்த மனிதர் தான். அவள் உள்ளத்திலிருந்த பொறாமை பறந்தோடியது. மரகதத்தின் நிலையை நினைக்க அவள் நெஞ்சு உருகியது. விஷயத்தைத் தெரிந்து கொண்டவள் போல் காட்டிக் கொள்ளாமல் இருப்பதுவே மேல் அல்லவா!



வேலைக்காரன்:—அம்மா, அம்மா! ஓடியாங்க! ஐயா திடீரென்று மயக்கமாகத் தரையில் விழுந்து கிடக்கிறாங்க!

எஜமானி:—கையிலே ஏதாவது காகிதம் வைத்துக் கொண்டிருக்கிறாரா?

வேலைக்காரன்:—ஆமாம், அம்மா! ஒரு 'பில்' மாதிரி இருக்குதுங்க!

எஜமானி:—சபாஷ்! சபாஷ்! என்னுடைய வைர நெக்லேஸ்' பண்ணி வந்துவிட்டது! இதோ வந்து விட்டேன்!

"போய் வருகிறேன் மரகதம்!" என்று சொல்லி விட்டு 'விர்' என்று வாசலுக்கு வந்து ரிக்ஷாவில் ஏறிக் கொண்டாள். ரிக்ஷா புறப்பட்டதும் திரும்பிப் பார்க்காமலிருக்க அவளால் முடியவில்லை. மரகதம் தன் புடவைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்ததை அவள் பார்த்துவிட்டாள்.

★

கல்யாணம் முடிந்த மறுநாளே ஜானகி குளத்தூருக்கு வந்து சேர்ந்தாள். ஒட்டுப் போட்ட சட்டையும் தானுமாய், கட்டுக்குடுமியுடன் வெளியில் புறப்பட்டுக் கொண்டிருந்த ஜகந்நாதன் வாசலில் வண்டி வந்து நிற்பதையும் ஜானகி இறங்கி வருவதையும் கண்டு பிரமித்து விட்டான். அவள் உள்ளே வந்ததும், "என்ன ஜானகி! பட்டணத்தில் இரண்டு வாரம் இருந்து விட்டு வரப்போவதாகச் சொன்னாய் அதற்குள் வந்து விட்டாயே!" என்றான்.

"அதற்காக என்மேல் கோபம் இல்லையே!"

"கோபம்தான்! என்னைத் தனியே விட்டு ஒரு வாரம் போனதற்காக உன்மேல் எனக்கு அசாத்தியமான கோபம்தான்!"

ஜானகியின் கண்களில் பொல பொலவென்று நீர் பெருகியது.

"அடேடே! எதற்காக அழுகிறாய்!" என்றான் ஜகந்நாதன் ஆச்சரியத்துடன்.

"நான்தான் கொடுத்து வைத்தவள்!" என்று ஜானகியின் உதடுகள் முணங்கின.

பரிசுக் கதை—5

அதிர்ஷ்டமற்ற

மாலை நேரமாதலால் முனியாண்டி வீட்டிலேயே இருந்தான். அவன் வீட்டுக்கு வெளியே ஒரு கட்டிலைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் மனைவி பெத்தாயி சமையல் அறையிலிருந்து உருளைக் கிழங்குப் பொரியலை எடுத்து வந்தாள். உருளைக் கிழங்குப் பொரியல் என்றால் முனியாண்டிக்கு உயிர்.

முனியாண்டிக்கு முப்பத்தைந்து வயது இருக்கும். அவன் கையிலும் முதுகிலும் காயத்தின் வடுக்கள் இருந்தன. உள்ளூர் கட்சிச் சண்டையில் அவன் வீரப் போர் புரிந்ததன் அடையாளங்கள்தான் அவை.

முனியாண்டியின் முகத்தில் படர்ந்திருந்த சோர்வும் கோபமும் பொரியலைக் கண்டதும் மறையலாயின. அவன் சந்தோஷத்துக்கு அறிகுறியாகத் தன் கைகளைத் தேய்த்துக் கொண்டு, கனைத்தான்.

"நல்ல பெண்சாதி என்றால் நீதான் நல்ல பெண்சாதி. நீ நம்முடைய வீட்டுக்கே பெரிய பொக்கிஷம் அல்லவா?"

முனியாண்டி இவ்வாறு சொன்னதைக் கேட்டதும் பெத்தாயியின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

பெத்தாயிக்கு இருபத்திரண்டு வயது இருக்கும். ஒரு வருஷத்துக்கு முன்தான் கல்யாணம் நடந்தது. சாதாரணமாக அவளை அழகி என்றுதான் சொல்ல வேண்டும். அதிலும் பூரண வளர்ச்சியடைந்திருந்த யௌவனத்தின் சின்னங்கள் அவளுடைய அழகை இன்னும் அதிகப்படுத்தின. அவள் தான் கொண்டு வந்த தின்பண்டத்தைத் தன் கணவன் மகிழ்ச்சியுடன் தின்பதை காணத்துடன் கவனித்துக் கொண்டிருந்தாள்.

*

நாலாபுறமும் மாமரங்கள் அடர்ந்த அந்தத் தோப்பின் நடுவில் சிறிது தூரத்துக்கு இடைவெளி இருந்தது. அங்கு மரங்களோ, செடிகளோ எதுவுமில்லை. அதன் மத்தியில்தான் முனியாண்டியின் வீடு அமைக்கப்பட்டிருந்தது. அதன் சுவர்கள் சுமார் பதினைந்து அடி உயரம் இருக்கும். வீட்டின் மேல்தளம் தகிக்கும் வெய்யிலுக்குத் தகுதியான பாதுகாப்பாக அமைந்திருந்தது. வாசற் கதவு இரும்பு போன்ற தேக்கு மரத்தால் செய்யப்பட்டிருந்தது. கதவுக்கு இடது பக்கத்தில் மூன்று கெஜ தூரத்துக்கப்பால் ஒன்றரை சதுர அடி உள்ள ஜன்னல் வைக்கப்பட்டிருந்தது. ஜன்னலின் கம்பிகளோ மிக்க அழுத்தமாக இருந்தன.

குடிசைக்கு உள்ளே ஒரு பெரிய அறையும் அதை அடுத்துச் சமையல் அறையும் பண்டங்கள் வைப்பதற்கான சிறிய அறையும் இருந்தன. பெரிய அறையில் இரண்டு கயிற்றுக் கட்டில்கள் மாத்திரம் போடப்பட்டிருந்தன. ஒரு ஓரத்தில் துப்பாக்கியொன்றும் ஈட்டிக் கம்புகளும் இருந்தன.

முனியாண்டி ராமநாதபுரம் பிராந்தியத்திலுள்ள தேவர்கள் வகுப்பைச் சேர்ந்தவன். அந்த வகுப்பினர் யுத்தப் பிரியர்கள். எனவே துப்பாக்கியும் ஈட்டிக் கம்புகளும் அங்கு வைக்கப்பட்டிருந்ததைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

"இந்தப் பொரியலை நீயும் கொஞ்சம் சாப்பிடேன்" என்று கூறி முனியாண்டி பெத்தாயியின் கையைப் பிடித்தான். அவள் கையைத் திமிறிக் கொண்டு, சிரித்தவாறே உள்ளே ஓடிவிட்டாள்.

இந்த உல்லாசக் காட்சியை முனியாண்டியையும் பெத்தாயியையும் தவிர மற்றொரு பேர்வழி கவனித்துக் கொண்டிருந்தது அவர்களுக்கு எப்படித் தெரியும்? சிறிது தூரத்துக்கு அப்பால் மரங்களிடையே ஒளிந்து கொண்டிருந்த ஒருவன் மேற்படி காட்சியைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன்தான் பழனி என்ற பிரசித்திபெற்ற கொள்ளைக்காரன்.

பல கொள்ளைகளிலும் தீவட்டிக் கொள்ளைகளிலும் சம்பந்தப்பட்ட பழனியைச் சட்டம் துரத்திக் கொண்டிருந்தது. அவனைப் பிடிக்கப் போலீசார் படாத பாடுபட்டுக் கொண்டிருந்தனர். அவர்களின் வலை பழனியை நெருங்கிக் கொண்டிருந்தது

ஏணிகள்

எஸ்.கே.செட்டூர்

மூலக்கதை : ஆங்கிலம்

மொழிபெயர்ப்பு : 'வாஞ்சி'

சற்றேறக் குறைய ஆறடி உயரமுள்ள பழனியின் கைகள் இரும்பு உருளைகளைப் போல் இருந்தன. மார்போ இரும்பு கவசம் போல் படம் பொருந்தியதாக இருந்தது. அவன் முகத்தில் நிலவும் அமைதியைப் பார்ப்பவர்கள் அவன் கொடிய கொள்ளைக்காரன் என்பதை நம்ப மாட்டார்கள். அவனுடைய கைகளிலும் மார்பிலும் பல பயங்கரமான வடுக்கள் இருந்தன. கொள்ளைகளிலும் சண்டைகளிலும் காயம் பட்டதால் ஏற்பட்ட வடுக்கள் தான் அவை.

முனியாண்டி பொறியலைத் தின்று கொண்டிருந்த போது மரங்களிடையே யிருந்து திடீரென்று ஒரு விதமான சப்தம் கேட்டது. முனியாண்டி திடுக்கிட்டான்.

அதையடுத்து, "முனியாண்டி! நீ தனியாகத்தானே இருக்கிறாய்?" என்று அங்கிருந்து ஒரு குரல் வந்தது.

"ஆமாம், யார் அது?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் முனியாண்டி.

"நான் தான் அப்பா, பழனி. உன் சொந்தக்காரன். பரமக்குடி தாலுக்காவில் போலீஸ்காரர்கள் என்னைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காகத் தான் நான் இங்கே ஓடி வந்திருக்கிறேன். எனக்குச் சாப்பாடும் இரவு தங்குவதற்கு இடமும் கொடுக்க மாட்டாயா?"

"அடே! பழனியா? தாராளமாக வா, அப்பா. கொஞ்சம் பொறு, யாராவது இருக்கிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்து விட்டு வருகிறேன்" என்று முனியாண்டி கூறிவிட்டு, மரங்களுக்கு அப்பால் யாராவது ஒளிந்து கொண்டிருக்கிறார்களா என்று பார்த்து வந்தான்.

"யாரும் இல்லை. நீ இங்கே வரலாம்" என்று வரவேற்றான் முனியாண்டி.

பழனி ஒளிந்து கொண்டிருந்த இடத்தை விட்டு, அசட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டே வந்தான். அவனுடைய வலது கையில் ஒரு கைத் துப்பாக்கியும் அவனுடைய தோளில் இரண்டு ஈட்டிகளும் இருந்தன.

"நாம் வீட்டுக்கு உள்ளே சென்று பேசலாம்" என்றான் பழனி.

இருவரும் கட்டிலை உள்ளே தூக்கிக் கொண்டு போய்க் கதவை இறுகத் தாளிட்டுக் கொண்டனர்.

பெத்தாயி சமையல் அறையில் வெகு மும்முரமாகச் சமைத்துக் கொண்டிருந்தாள். உறவினர் இருவரும் கட்டிலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

"இன்னும் கொஞ்சம் பொறியல் கொண்டு வா" என்று கத்தினான் முனியாண்டி.

அவனது கட்டளைக்கிணங்க, பெத்தாயி ஒரு தட்டில் பொறியலை எடுத்து வந்தாள்.

அவளைப் பழனி விழுங்கி விடுபவன்போல் கண்கொட்டாமல் பார்த்தான். அவனுடைய கண்கள் அவளுடைய ஒவ்வொரு அவயவத்தையும் அலசி ஆராய்ச்சி செய்வது போல் தோன்றின.

"இவள்தான் என் பெண்சாதி" என்று கூறினான் முனியாண்டி பெருமிதத்துடன்.

முனியாண்டி அவ்வாறு சொன்னதும் பழனியை வரவேற்பதற்கு அறிகுறியாகப் பெத்தாயியின் முகத்தில் ஒரு வினாடி புன்முறுவல் தவழ்ந்தது. பிறகு அவள் நாணுக்காக முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டாள்.

பெத்தாயி சமையல் அறையிலிருந்து வெளியே வரும்போதெல்லாம், பழனியின் கண்கள் அவளை ஊடுருவிப் பார்த்தவண்ணமாக இருந்தன.

'இந்த மனிதன் என்ன இப்படி வெறிக்க வெறிக்கப் பார்க்கிறானே. என்ன துணிச்சல் இவனுக்கு?' என்று பெத்தாயி மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்.

★

"நம்முடன் சாப்பிடுவதற்கு இன்னும் ஒருவர் வந்திருக்கிறார்" என்று சொன்னான் முனியாண்டி.

"நன்றாக வரட்டுமே" என்று கூறி பெத்தாயி விருந்தாளியை வரவேற்றாள்.

பெத்தாயி தன் கணவனுக்கும் பழனிக்கும் இலைகள் போட்டுப் பரிமாறத் தொடங்கினாள். அவள் மிகச் சுறு சுறுப்பாகக் காரியங்களைச் செய்து வருகையில் பழனியின் பொல்லாத மனம் யௌவனப் பருவம் ததும்பும் அவளுடைய அவயவங்களை வர்ணிக்கத் தொடங்கியது.

பழனியின் கண்கள் தன்னை விட்டு அகலவில்லை என்பதை அவனைப் பார்க்காமலேயே பெத்தாயி தெரிந்து கொண்டாள். எனினும் அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைச் சிறிதும் கவனியாதவள்போல் அவள் அமைதியாகத் தன்னுடைய அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

பெத்தாயி இருவருக்கும் பரிமாறியபின், வழக்கப்படி ஒருபுறத்தில் தானும் உட்கார்ந்து சாப்பிடலானாள்.

அவர்கள் வெகுநேரம் மௌனமாகவே சாப்பிட்டார்கள். பழனி மிகுந்த பசியுடன் இருந்ததால் அவன் சாப்பிடுவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான். ஆனால் அவனது கண்கள் அடிக்கடி ஜன்னல் பக்கம் நோக்கிய வண்ணமிருந்தன. அவனது அந்தப் பார்வையில் ஒருங்கே பீதியும் துணிச்சலும் கலந்திருந்தன. எனினும் நன்றாக மூடப்பட்டிருந்த ஜன்னல் கதவு அவன் மனத்தில் தோன்றிய பீதியைப் போக்கி நம்பிக்கையையும் திருப்தியையும் அளித்தது.

அவர்களுடைய தலைக்கு மேலே, மேல் தளத்துக்குக் கீழே மரத்தினால் அமைக்கப்பட்ட பரண் ஒன்று இருந்தது. அந்தப் பரணுக்கு ஒரு கதவு இருந்தது. ஏணியை வைத்துக் கொண்டு பரண்மீது ஏறுவோர் கதவை மேலே தள்ளிக் கொண்டு ஏற வேண்டும்.

பரணையும் அறையின் ஒருபுறத்தில் வைக்கப்பட்டிருந்த ஏணியையும் பழனி மகிழ்ச்சியுடன் மாறி மாறிப் பார்த்தான்.

"பகலில் நான் ஒளிந்து கொள்வதற்கு இதைக் காட்டிலும் சிறந்த இடம் வேறு எங்கு இருக்க முடியும்?" என்று கூறி முனியாண்டியைப் பாராட்டினான் பழனி.

"இருக்க முடியாதுதான். சங்கடத்தில் மாட்டிக் கொண்டு என் உதவியை நாடி வரும் நண்பர்களுக்காகவே நான் இந்தப் பரணைப் போட்டு வைத்திருக்கிறேன். பரண்மீது ஏறுவோர் ஏணியையும் மேலே இழுத்துக்கொண்டு கதவை மூடிக் கொண்டு விட்டால் ஒளிந்திருப்பவரைக் கண்டு பிடிப்பது கஷ்டமான காரியந்தான்."

"அடடா! உனக்கு எவ்வளவு மூளை! என்ன முன் யோசனை!"

பழனியின் பாராட்டு முனியாண்டியைப் பரவசப் படுத்தியது.

"எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது; தூக்கமும் வருகிறது" என்று சொல்லி விட்டுப் பழனி ஏணியின் வழியாகப் பரணில் ஏறிக் கொண்டான்.

உடனே மண்ணெண்ணெய் விளக்கு அணைக்கப்பட்டது. முனியாண்டியும் அவன் மனைவியும் கயிற்றுக் கட்டில்களில் போய்ப் படுத்துக் கொண்டார்கள். வீட்டில் இருளும் நிசப்தமும் நிலவின.

பரண் மீதேறிப் படுத்த பழனி, தான் நண்பர்களிடையே இருந்ததால் கவலையற்று அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்தான்.

பொழுது விடிந்தது. பழனி பரணிலிருந்து இறங்கி வந்தான். சிறிது நேரம்



கழித்து இருவரும் யுத்த மந்திராலோசனையை ஆரம்பித்தனர்!

"என்னைப் போலீசார் பிடிக்க முயற்சித்து வருகிறார்களா என்பதை நான் தெரிந்து கொள்ள வேண்டும்" என்றான் பழனி.

"நீ ஏன் கவலைப்படுகிறாய்? பரமக்குடி எங்கே இருக்கிறது? இந்த இடம் எங்கே இருக்கிறது?"

"இருந்தாலும் சமீபத்தில் போலீஸ் ஸ்டேஷன் எங்கு இருக்கிறதோ, அங்கு சென்று வேவு பார்த்து வந்தால் தான் என் மனதுக்குத் திருப்தியும் நிம்மதியும் ஏற்படும்."

சமீபத்தில் உள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்வதாயின்

முனியாண்டியின் வீட்டிலிருந்து சுமார் ஆறு மைல் தூரம் போக வேண்டும்.

"சரி, நீ என்ன யோசனை சொல்கிறாய்?" என்று கேட்டான் முனியாண்டி.

"என்னைப் போலீஸார் வேட்டையாடி வருகிறார்கள். பெரும்பாலான போலீஸ்காரர்களும் என்னைப் பார்த்த உடனேயே கண்டு கொள்வார்கள். எனவே இன்று பகல் முழுவதும் நான் தலையை வெளியே காட்டக் கூடாது. நீ ஒரு உதவி செய்ய முடியுமா? நீ மல்லான்கிணறு போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்ல வேண்டும். என்னை அங்கிருப்பவர்கள் தேடிக் கொண்டிருக்கிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நீ காலை ஆகாரம் சாப்பிட்ட உடனே சென்றால், இருட்டுவதற்கு முன் திரும்பி வந்து விடலாம்."

பழனி கூறிய விஷயத்தை முனியாண்டி ஆலோசித்துப் பார்த்தான். அவன் சென்றால் பெத்தாயி தனியாக அல்லவா இருக்கும்படி நேரும்?



"அங்கே உனக்கு ஏதாவது சாமான்கள் வாங்க வேண்டுமா?" என்று பெத்தாயியைக் கேட்டான் முனியாண்டி.

"நீங்கள் வாங்கி வர முடியாத சாமான் எனக்கு என்ன இருக்கிறது?" என்று மிடுக்காய்க் கூறிவிட்டாள் பெத்தாயி.

அவள் இவ்விதம் கூறியபின் தன்னுடன் கூட வரும்படி அவளை முனியாண்டி எவ்வாறு அழைக்க முடியும்? தவிர, பகல் வேளைதானே? அவளைத் தனியாக விட்டுச் செல்ல ஏன் தயங்க வேண்டும்?

"உனக்குப் போலீசாரிடம் பயமா?" என்றான் பழனி.

"ஒருகாலுமில்லை. போலீசாரைக் கண்டு நான் ஏன் பயப்பட வேண்டும்? நீ சொன்னபடி நிச்சயமாக அறிந்து வருகிறேன்."

"இந்த உதவிக்குப் பிரதி உபகாரமாக நான் உனக்கு ஏதாவது ஒரு காலத்தில் நிச்சயம் செய்வேன்" என்று பழனி தன் நன்றியைத் தெரிவித்தான்.

அதே சமயம் அவன் மனத்தில் பெத்தாயியைப் பற்றிய சிந்தனையே மேலோங்கி இருந்தது. அவளது அழகு அவன் மனத்தை நிலைகுலையச் செய்தது.

★

காலை பத்து மணி அடித்தது. முனியாண்டி புறப்பட்டான்.

அவனைப் பழனி விடை கூறி அனுப்பி விட்டு, கதவை நன்றாகத் தாளிட்டுக் கொண்டான். முனியாண்டி மாட்டு வண்டி ரஸ்தா வழியாக மல்லான்கிணறுக்குச் செல்ல இரண்டு மணி நேரம் ஆகும். திரும்பிவர இரண்டு மணி நேரம் செல்லும். அங்கு விசாரிப்பதற்கு ஒரு மணி நேரம் வேண்டும். எனவே முனியாண்டி திரும்பி வருவதற்குக் குறைந்த பட்சம் ஐந்து மணி நேரம் பிடிக்கும். தனக்கு ஐந்து மணி அவகாசம் கிடைத்தது பழனிக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.

பெத்தாயி சமையல் அறைக்குள் சென்றாள். பழனி கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திருந்தான். அவன் ஒரு கத்தியை எடுத்து மரப்பிடி செய்வதற்காக ஒரு மரத்துண்டைச் சீவிக் கொண்டிருந்தான். சமையல் அறை

யில் பெத்தாயி பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தது அவனுக்குக் காது கேட்காமல் இல்லை.


அரை மணி நேரம் கழித்து அவள் சமையலறையிலிருந்து வெளியே வந்தாள்.

“இங்கு வந்து என்னுடன் பேசிக் கொண்டிருக்கக் கூடாதா?” என்று கூறிப் பழனி, கட்டிலின் ஒரு புறத்தைச் சுட்டிக் காட்டினான்.

“நான் இங்கேயே உட்காருகிறேன்” என்று சொல்லி பெத்தாயி மற்றொரு கட்டிலில் உட்கார்ந்தாள்.

பழனி பேச ஆரம்பித்தான். அவன் தன்னுடைய ‘வீரப் பிரதாபங்களை’ பெத்தாயிக்கு வர்ணித்துக் கூறினான். தன்னால் கொள்ளையடிக்கப்பட்ட ஆடவர்கள்—பெண்களைப் பற்றி விவரித்தான். தான் பல கான்ஸ்டேபிள்களைச் சுட்டிருப்பதாகப் பெருமையடித்துக் கொண்டான். பல தடவை தான் சிறையிலிருந்து தப்பியதையும் எடுத்துச் சொன்னான், தன்னுடைய பிரதாபங்களைக் கேட்டுப் பெத்தாயிக்கு உண்டான ஆச்சரியத்தை அவன் கவனிக்காமலில்லை.

பழனி ஒரு முரட்டுப் பேர்வழி. கொடிய கொள்ளைக்காரன். வெறியன். எந்தக் காரியமாயினும் துணிந்து செய்து விடுவான்; சற்றும் தயங்கமாட்டான்.



“ஸார், நான் புதுசா ஆரம்பித்திருக்கும் ஜனநாயக முன்னணிக் கட்சியில் தாங்கள் சேர்ந்து என்னை ஆதரிக்க வேண்டும்.”

“அடடா! நீங்கள் வேறே தனியா ஆரம்பித்து விட்டீர்களா? நான் ஆரம்பித்துள்ள மக்கள் கட்சியில் உங்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்றல்லவா நினைத்தேன்!”

அவன் கட்டிலிலிருந்து எழுந்து சோம்பல் முறித்தான். “எனக்குக் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும்” என்றான்.

அவள் பணிவாக உள்ளே சென்று, ஒரு குவளையில் தண்ணீர் கொண்டு வந்தாள்.

பழனி அதை வாங்கிக் கொண்டான். அதே சமயம் அவளுடைய கையைப் பற்றினான். ஆனால் அந்தத் தகாத செய்கையைக் கண்டு அவள் அதிர்ச்சி அடையவில்லை. திமிறிக்கொண்டு ஓடவில்லை. புன்முறுவலுடன் பேசாமல் நின்றாள்.

“பரணுக்கு வருகிறாயா?” என்றான் பழனி. இருவருமாகப் பரண் மீதேறிக் கதவைச் சாத்திக் கொண்டனர்.

★

அவர்கள் பரண்மீதேறி அரை மணி நேரம்கூட இராது. குடிசையின் கதவை யாரோ தடதடவென்று தட்டும் சப்தம் கேட்டது.

“அட கடவுளே! அவன் அதற்குள் திரும்பி வந்து விட்டானே” என்று பழனியின் மனம் புழுங்கியது. பெத்தாயி நடுநடுங்கி விட்டாள்.

“அவன் திரும்பி வருவது சாத்தியமல்ல. முனியாண்டி இப்போதுதான் மல்லான் கிணறு சென்றிருப்பான்” என்றான் பழனி.

மெதுவாக அவன் பரண் கதவைத் திறந்து உற்றுக் கேட்டான். வாசற்படியிலிருந்து உரத்த குரல் கேட்டது.

“அடேய், பழனி! கதவைத் திறந்து சரண் அடைந்து விடு. நீ உள்ளே இருப்பது எங்களுக்குத் தெரியும்.”

பழனியைக் கோப வெறி ஆட்கொண்டது. அந்த ‘அயோக்கியப் பயல்’ முனியாண்டியே தன்னைப் போலீசாரிடம் காட்டிக் கொடுத்துவிட்டதாக நினைத்தான்.

பழனி தன்னுடன் துப்பாக்கியும் சுட்டிகளும் கொண்டு வந்திருந்தான் அல்லவா? அவன் ஜன்னல் வழியாகக் குறி வைத்துச் சுட்டான். அதனால் வீடு முழுதும் அதிர்ந்தது. அவ்வளவுதான்! பூட்ஸ்களுடன் பூமியே அதிரும்படியாகப் போலீஸார் ஓடுவது கேட்டது.

பழனி உள்ளூற சிரித்துக் கொண்டான். அவன் நினைத்தபடி வீட்டுக்கு வெளியில் வந்திருந்த போலீஸ் சப் இன்ஸ்பெக்டரும் ஏழு கான்ஸ்டேபிள்களும் ஓட்டமாக ஓடி மரங்களுக்கு அப்பால் போய் ஒளிந்து கொண்டார்கள். (அடுத்த இதழில் முடியும்)

நாயும் பூனையும்





'ரோஸ்' என்று ஒரு ரோஷமான நாய். அது தன்னுடைய நான்கு அருமைக் குட்டிகளுடன் ஒருவர் வீட்டில் வெகு ஆதரவுடன் வசித்து வந்தது.

ஒரு நாள் கருப்பன் என்ற ஒரு பூனை தன் குட்டிகளுடன் ரோஸ் இருக்கும் வீட்டுக்குள் குடியேற முயன்றது. வெகு லாகவமாக வீட்டுக்குள் வந்தது. ரோஸ் உர்...ர்...ர் என்று சப்தம் போட்டு "ஏ கருப்பரே, மரியாதையாய்ப் போய் விடும்!" என்று உறுமியது.

இதற்குக் கருப்பனா பயப்படும்? "அடே சரிதான், சும்மா இரு. எச்சிற்கலை நாயே!" என்றது. இப்படி மாறி மாறி இரண்டும் வைதுகொண்டன.


சண்டை முற்றிப் போய்ப் பூனையை நாய் துரத்திற்று. துரத்திக் கொண்டே வெகு தூரம் ஓடி விட்டது. அப்பொழுது பூனைக் குட்டிகளும் நாய்க் குட்டிகளும், தங்கள் தாயார்கள் சண்டையிட்டு ஓடுவதையே மறந்து ஒன்றோடொன்று விளையாட ஆரம்பித்தன. விளையாட்டுப் போக்கில் இரண்டு பூனைக் குட்டிகள் ஒரு கிணற்றின் மேல் ஏறி எட்டிப் பார்த்தன.

அடுத்த விநாடி இரண்டும் கால் தவறித் 'தொப்' என்று கிணற்றுக்குள் விழுந்தன. தெய்வச் செயலாகக் கிணற்றில் வாளி தொங்கிக் கொண்டிருந்தது. குட்டிகள் அதைப் பிடித்துக் கொண்டு பயத்தில் மியாவ், மியாவ் என்று கத்தின. தற்செயலாக இதை நாய்க் குட்டிகள் பார்த்து விட்டன. எப்படியாவது பூனைக் குட்டிகளைக் காப்பாற்றி விட வேண்டும் என்று யோசித்து வாளியில் கட்டியிருந்த கயிற்றை நான்கு குட்டிகளும் கவ்விக் கொண்டு இழுத்தன. வெகு நேரம் இழுத்து, குட்டிகள் வெளியே கொண்டு வந்து விட்டன.

துரத்திக் கொண்டு ஓடிய பூனையும் நாயும் திரும்பி வந்து சேர்ந்தன. நாய்க் குட்டிகளின் செயலைக் கேட்டு ஆச்சரியப்பட்டன. ரோஸுக்கு வெட்கம் தாங்க முடியவில்லை. தன் குழந்தைகளுக்கு வாழத் தெரிந்தது கூடத் தனக்குத் தெரியவில்லையே என்று நினைத்தது.

"பூனையாரே, வாருங்கள்! வாழ்க்கை ஒற்றுமையாக ஒத்து வாழ்வதற்குத் தான், சண்டை போடுவதற்கல்ல. ஆகையால் நீங்களும் நானும் இனி மேல் சிநேகமாக இருக்கலாம்!" என்று சந்தோஷத்தோடு கூறிற்று ரோஸ்.

பாப்பா மலர்



3. இளவரசியின் விவாகம்

சீன தேசத்து அரசன் தன் மகள் பகதூராவைத் தனியறையில் வைத்து விட்டுச் சும்மா இருந்து விடவில்லை. தன்னுடைய குமாரியை எப்படிப் பழைய நிலைக்குக் கொண்டு வருவது என்று ஆலோசித்தான். பிறகு அரசன் தனது மந்திரிமார்களை அழைத்து ஒரு புது உத்தரவு பிறப்பித்தான். யாராவது மந்திரவாதி, வைத்தியன், சோதிடன் தனது மகளுடைய பைத்தியத்தைத் தெளிய வைத்தால் அவனுக்குத் தன் மகளை மணம் செய்து வைப்பதாகத் தெரிவித்தான். அப்படி குணப்படுத்தத் தவறினால் தவறியவன் தலையை வாங்கி விடுவதாகவும் கண்டிப்பாகக் கூறி விட்டான். அரசனுடைய உத்தரவைத் தேச முழுவதும் யானைமீது சென்று பேரிகை கொட்டி ஜனங்களுக்குத் தெரிவித்தார்கள்.

இந்தச் செய்தி கேட்டதும் மந்திரவாதிகளும் சோதிடர்களும், பிரபல வைத்திடர்களும் கூட்டம் கூட்டமாக அரண்மனையை நோக்கி வந்தார்கள். இளவரசியைக் குணப்படுத்துவதாகச் சொல்லிக் கொண்டு வந்தவர்களில் ஒருவரால்கூட அவளைக் குணப்படுத்த முடியவில்லை. மந்திரவாதிகள் வந்து வேப்பிலை வீசித் தங்கள் மந்திரங்களை ஓதிப் பார்த்தார்கள். வைத்தியர்கள் என்னென்னவோ மருந்துகளைக் கொடுத்துப் பார்த்தனர். சோதிடர்கள் தங்கள் சுவடிகளை வைத்துக் கொண்டு சாஸ்திரங்களையே புரட்டினர்.

இளவரசிக்கு வந்த நோய் சரீரத்தைப் பற்றியதாக இருந்தால் இவர்களால் ஏதாவது செய்ய முடிந்திருக்கும். அது மனத்தைப் பற்றிய நோயல்லவா? ஒருவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

அரசன் உத்தரவுப்படி இவர்கள் எல்லாம் தலையை இழந்து உயிர் நீத்தனர். இவ்வாறு நூற்று ஐம்பது பேர் தங்கள் உயிரை இழந்தனர். இந்த நூற்று ஐம்பது பேர்களின் தலைகள் நகரில் முக்கிய வாயிற்படிக் கொன்றுகத் தொங்க விடப்பட்டிருந்தன.

இந்தச் சமயத்தில் பகதூராவின் தாதியின் மகன் பல நாடுகளில் சுற்றிவிட்டுத் தன் தாயைப் பார்ப்பதற்கு வந்திருந்தான். அவன் பெயர் மர்ஸவான். அவன் மகா புத்திசாலி. இவன் தன் தாயைப் பார்ப்பதற்காக நகருக்குள் வருகையில் ஒவ்வொரு கோபுர வாயிலில் மனிதர் தலை தொங்கிக் கொண்டிருப்பது கண்டு திகைப்படைந்தான். இதன் காரணத்தை விசாரித்ததில் பகதூரா இளவரசியின் காதல் நோயினால் நேர்ந்த விபரீதங்களை விளக்கமாக அறிந்து கொண்டான்.

இளவரசி குழந்தையாயிருக்கும் பொழுது அவளுடன் விளையாடியவன் இந்த மர்ஸவான். தன் பழங்காலத்

தோழிக்கு இந்தக் கதி நேர்ந்தது கண்டு அவன் மிகவும் மனம் வருந்தினான். தன் தாயின் உதவியால் அவன் ரகசியமாக பகதூராவைப் பார்த்து அவள் உள்ளக் கோளாறின் காரணத்தை அறிந்துகொண்டான். உலகமெல்லாம் அலைந்து தேடி அவள் கனவில் கண்ட காதலனை எப்படியாவது கண்டு அழைத்து வருவதாக இளவரசிக்கு வாக்களித்தான்.

தன்னுடைய பழைய நண்பனின் வார்த்தைகளைக் கேட்டு பகதூரா சந்தோஷமடைந்தாள். இளவரசனைப் பற்றி அவள் அறிந்து கொள்ள விரும்பிய தகவல்களையெல்லாம் அவனுக்குக் கூறினாள். மர்ஸவான் அடுத்த நாளே தனது புனித யாத்திரையைத் தொடங்கினான்.

மர்ஸவான் நாடு நாடாக, நகரம் நகரமாகச் சென்று விசாரித்தான். இளவரசியின் மாயக் காதலனைப் பற்றி எதுவும் தெரியவில்லை. ஆனால் சென்ற இடத்திலெல்லாம் பகதூராவுக்குப் பைத்தியம் பிடித்தது பற்றிய பேச்சாகவே இருந்தது. கடைசியாக ஒரு துறைமுகப்பட்டினத்திற்கு வந்து சேர்ந்தான் மர்ஸவான். கமரல்ஸமான் என்னும் இளவரசன் ஒருவனுக்கு ஒரு விசித்திர நோய் பிடித்திருப்பதாக அங்கு பேசிக் கொண்டிருப்பதைப் பற்றிக் கேள்விப்பட்டான். இந்த நோய் பகதூராவை வாட்டி வரும் நோய் போலவே இருந்ததால் மர்ஸவான், இளவரசன் படுத்த படுக்கையாயிருக்கும் நாட்டை நோக்கிச் சென்றான்.

ஒரு வர்த்தகக் கப்பலில் ஏறி ஷாஸமான் மன்னரின் பிரதான துறைமுக நகருக்கு வந்து சேர்ந்தான். ஆனால் கப்பல், துறைமுகத்தில் நுழைவதற்கு முன் ஒரு பாறை மீது மோதி, அரசனும் இளவரசனும் தங்கியிருந்த அரண்மனைக்கு எதிரில் கடலில் மூழ்கியது. அதிர்ஷ்டவசமாக மர்ஸவானுக்கு நன்றாக நீந்தத் தெரியும். ஆகையால் பத்திரமாகக் கரை வந்து சேர்ந்தான்.

அவனைக் காப்பாற்றியவர்கள் மர்ஸவானை அரண்மனைக்குள் அழைத்துச் சென்றனர். அங்கே அவனுக்கு உலர்ந்த உடையும் உணவும் அளிக்கப்பட்டன. உண்டு களைப்பாறிய பின் ஏவலாட்கள் அவனைப் பிரதம மந்திரியிடம் அழைத்துச் சென்றனர். மந்திரி, மர்ஸவானிடம் சிறிது பேசி அவனுடைய வரலாற்றை அறிந்து கொண்டான். மர்ஸவான் மிகுந்த புத்திசாலி, பல கலைகளைக் கற்றறிந்தவன் என்பதை மந்திரி அறிந்து கொண்டான். தனது மன்னனின் ஒரே புதல்வனான இளவரசன் கமரல்ஸமானின் நோயைத் தீர்க்க முடியுமா என்று கேட்டான்.


"நோயின் காரணத்தை அறிந்தால் ஒருவேளை இளவரசனின் நோயைக் குணப்படுத்தலாம்" என மர்ஸவான் பதிலளித்தான். இளவரசன் கலியாணம் செய்து கொள்ள மறுத்தது, அவனை மன்னர் சிறையிட்டது, சிறையில் அவன் யாரோ ஒரு இளவரசியைச் சந்தித்து அவளுடன் மோதிரம் மாற்றிக் கொண்டதாகக் கூறியது முதலிய எல்லா விவரங்களையும் மந்திரி மர்ஸவானுக்குக் கூறினான்.

இளவரசனின் கதை கேட்டு மர்ஸவான் ஆனந்தமடைந்தான். இளவரசி பகதூராவின் காதலனைக் கண்டுபிடிக்கப் போகிறோம் என்று மகிழ்ச்சியடைந்தான். இளவரசன் கமரல்ஸமானுடன் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தால் அவனைக் குணப்படுத்த முடியும் என்று மந்திரியிடம் கூறினான்.

உடனே மந்திரி, மர்ஸவானை இளவரசன் அறைக்கு அழைத்துச் சென்றான். அங்கே இளவரசன் இளைத்துத் துரும்பாகப் படுத்திருக்கும் பரிதாப நிலையிலிருப்பதைக் கண்டு மர்ஸவான் துக்கமடைந்தான். இளவரசன் அருகில் அமர்ந்து தனது கதையையும் இளவரசியின் சோக நிலையையும் விரிவாக எடுத்துக் கூறினான். இந்தக் கதையைக் கேட்டவுடன் கமரல்ஸமான் புது உயிர் பெற்றவன் மாதிரி துள்ளி எழுந்து உட்கார்ந்து கொண்டான். மர்ஸவான் விவரித்த இளவரசிதான், தனது அருமைக் காதலி என்று இளவரசன் உறுதியுடன் கூறினான்.

இளவரசன் நோய் தீர்ந்தவன் போலானான். தனது காதலி உயிருடனிருக்கிறாள் என்பதை அறிந்தவுடன் அவன் மனநோய் நொடிப்பொழுதில் மறைந்தது. ஈரேழு லோகமும் பறந்து சென்று தன் அருமைக் காதலியைப் பார்க்கவும் அவன் தயாராயிருந்தான்.





இந்தச் சமயத்தில் அரசன் அங்கே வந்து சேர்ந்தான். தன் மகன் பைத்தியம் தெளிந்து பேசுவதைக் கண்டு களிப்படைந்தான். இந்த மாறுதலுக்கு மர்ஸவான் தான் காரணம் என்பதை அறிந்து அவனுக்கு ஏராளமான பரிசுகளை வழங்கினான்.

கமரல்ஸமான் தினம் தவறாமல் புது நண்பனுடன் உலாவச் சென்றான். ஒரு நாள் இருவரும் வேட்டையாடிக் கொண்டிருக்கும்பொழுது, தன்னை அன்றே சீனுவுக்கு அழைத்துச் செல்லும்படி இளவரசன் மர்ஸவானை வேண்டிக் கொண்டான். அப்படிச் செய்யாவிட்டால் உயிர் வாழ முடியாதென்றும், தனது தந்தை அவ்வளவு தொலைவிலுள்ள நாட்டிற்குத் தன்னை அனுப்ப என்றைக்கும் சம்மதிக்க மாட்டாரென்றும், அவருக்குத் தெரியாமல் தன்னை உடனே அழைத்துச் செல்லும்படியும் மர்ஸவானை மன்றாடிக் கேட்டுக் கொண்டான்.

மர்ஸவானும் இந்த வேண்டுகோளுக்கு இணங்கினான். ஏனெனில் தான் காதலித்த இளவரசனைச் சந்தித்தால்தான் சீன தேசத்து இளவரசி குணமடைவாள்.

உடனே வேகமாகச் செல்லும் இரண்டு குதிரைகளுக்கு ஏற்பாடு செய்து, அவற்றின் மீது ஏறிக்கொண்டு இருவரும் சீனுவுக்குப் புறப்பட்டார்கள். பலநாள் பிரயாணத்திற்குப் பிறகு இருவரும் சீன நாட்டுத் தலைநகரை அடைந்தனர். அங்கே இருந்து எவ்வாறு காரியம் கைகூடும் வகை காணலாம் என்பதைப் பற்றி யோசித்து முடிவு செய்தனர்.

இளவரசனுக்கு மர்ஸவான் சோதிடருடைய உடையை வாங்கி அளித்தான். இந்த உடையை அணிந்துகொண்டு அரண்மனைக்குச் சென்று இளவரசியைக் குணப்படுத்தத் தான் வந்திருப்பதாகக் காவலாட்களிடம் கூறினான். இளவரசியைக் குணப்படுத்தாமற் போனால் தலை போய் விடுமாகையால், இவ்வளவு அழகு வாய்ந்த இளைஞன் இந்த முயற்சியில் ஈடுபடுகிறானே என்று அவர்கள் வருந்தினர். சீன நாட்டரசன் "அப்பனே, உன் பொன்னான உயிரைப் போக்கிக் கொள்ளாதே. இது உன்னால் ஆகக்கூடிய காரியமல்ல" என்று கேட்டுக் கொண்டான்.

ஆனால் அந்த நூதன சோதிடன் இளவரசியைக் குணப்படுத்த முடியும் என்று தனக்குத் தைரியமிருக்கிறது எனப் பயமின்றி அறிவித்தான். இளவரசியின் அறையருகில் சென்றவுடன் "அறைக்குள் செல்லாமலே அவளை நான் குணப்படுத்துகிறேன்" என்று தெரிவித்தான். உடனே தனது பையிலிருந்து காகிதமும் எழுதுகோலும் எடுத்து இளவரசிக்கு ஒரு கடிதம் எழுதினான். அக்கடிதத்தில் அன்றொருநாள் இரவு தாங்கள் இருவரும் மோதிரம் மாற்றிக்கொண்ட விஷயத்தைத் தெரிவித்தான். அன்றிரவு சந்தித்தவன் தான் தான் என்று கூறி அக்கடிதத்தோடு தன் கையிலிருந்த இளவரசியின் மோதிரத்தையும் கழற்றி வைத்து அவற்றை அங்கிருந்த ஒரு அடிமையிடம் கொடுத்து இளவரசியிடம் சேர்க்கச் சொன்னான்.

சோதிடன் கூறியபடியே கடிதத்தை இளவரசியிடம் கொடுத்தான். அதை வாங்கி அவள் படித்தாள். ஆனந்தமடைந்தாள். தனது இருப்பிடத்தை விட்டு எழுந்தாள்; ஓடிக் கதவைத் திறந்தாள். எதிரில் இளவரசன், அவளுடைய கனவுக் காதலன் காட்சியளித்தான். அப்படியே அவன் மீது பாய்ந்து அவனை அன்புடன் அணைத்துக் கொண்டாள். இந்த அதிசயத்தைக் கேட்டு அரசன் ஓடி வந்தான். மகள் பைத்தியம் தெளிந்து காணப்பட்டதைப் பார்த்துப் பரவசமடைந்தான். அரசனிடம் கமரல்ஸ

மான் இளவரசியை முன்பு சந்தித்த அதிசயத்தை, விரிவாகக் கூறினான்.

அது கேட்டு மன்னன் மகிழ்ச்சியடைந்து அவர்களுடைய திருமணத்திற்குச் சம்மதித்தான். அடுத்த நாளே இளவரசன் கமரல்ஸமானுடைய நாட்டுக்குச் செய்தி அனுப்பினான். இந்தச் சந்தோஷ சமாசாரத்தைக் கேள்வியுற்றதும் அரசனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. மகன் திடீரென்று காணாமற்போன வருத்தம் தாங்காமல் சோர்ந்து கிடந்த அவனுக்குப் புது உற்சாகம் உண்டாயிற்று. உடனே அவன் தன் பரிவாரங்களுடன் புறப்பட்டுச் சீன தேசம் வந்து சேர்ந்தான். பிறகு இளவரசன், இளவரசி இவர்களுடைய கலியாணம் வெகு கோலாகலமாக நடந்தது.

மர்ஸவானின் முயற்சியால்தான் பிரிந்தவர் கூடினர் என்பதை யறிந்து சீன நாட்டரசன் அவனுக்கு ஏராளமான பரிசுகள் வழங்கித் தனது சபையில் உயர்ந்த பதவியும் அளித்தான். பல வாரங்கள் ஆனந்தமாகக் கழிந்த பிறகு ஒரு நாள் தந்தை நோய் வாய்ப்பட்டிருப்பதாகக் கமரல்ஸமான் கனவு கண்டான். அவன் உடனே தன் மனைவியோடு தனது நாட்டிற்குத் திரும்பிச் செல்ல விரும்பினான். (தொடரும்)

விடு கவி

நீலமேனி கண்மூக்கு வாய் சோரியும் உண்டு
நக்கவிந்த கால் நாலு வாலும் உண்டு
நிலைமையாய் நின்றவிடம் நின்றிடாது
நிமிர்ந்து ஒருக்கணித்தால் படுத்துக்கொள்ளும்
நீரில் உரசிடும் குகைக்குள் அடங்கும்
புந்திசேர் குருவை அடுத்திருக்கும் அதன்குலம் அதுவாகும்
நிலைபெயர்ந்துத் தாவழிந்தால் பாபாகும்
நக்கவிந்த பயனறிந்து சாற்றுவீரே

[விடை அடுத்த இதழில்]

[வால்—வெள்ளை; புந்தி—புதன்; குரு—வியாழன்; அதை அடுத்திருப்பது வெள்ளி.]

காரணம் புரிந்தது!

"இன்றைக்குக் கட்டாயம் மழை வந்து விழும் போலிருக்கிறதே!" என்றாள் ஒரு பெண் தன் தோழியைப் பார்த்து.

"ஏன்? எதற்காகச் சொல்கிறாய்?" என்று ஆச்சரியத்துடன் வினவினாள் அவள் தோழி.

"பார், அதோ தூரத்தில் சேற்றுவரை எலியும் பூனையுமா யிருந்த ஜெயமும், லக்ஷ்மியும் இன்று சிரித்துப் பேசி அளவளாவிக் கொண்டு போகிறார்களே? சேற்றுக்கூட ஜெயம் என்னிடம் வந்து லக்ஷ்மியைப் பற்றி நூறு அவதூறுகள் சொல்லிவிட்டுப் போனாள். இன்று தோளோடு தோள் இணைந்து போவது ஆச்சரியமாயில்லையா? அதனால்தான் மழை வரும் என்று சொன்னேன்" என்றாள் அந்தப் பெண்.

"ஆமாம்! சேற்றுவரை ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டிருந்தது வாஸ்தவந்தான். ஒருவருக்கொருவர் பேசாம லிருந்ததும் உண்மை தான். ஆனால் இனிமேல் அவர்கள் அப்படி இருக்க மாட்டார்கள்" என்றாள் அவள் தோழி.

"அது உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள் அந்தப் பெண்.

"ஜெயமும், லக்ஷ்மியும் எப்பொழுது பார்த்தாலும் சண்டை போட்டுக் கொண்டிருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. அவர்களுடைய மனஸ்தாபத்தை எப்படியாவது தீர்த்து வைத்துவிட வேண்டும் என்று நான்தான் ஒரு உபாயம் செய்தேன்!"

"அப்படியா? என்ன உபாயம் செய்தாய்? எனக்குச் சொல்ல மாட்டாயா?"

"நான் தனியாக ஜெயத்தை அழைத்து, 'ஜெயம்! லக்ஷ்மியிடம் போய்ச் சண்டை போட்டுக் கொள்கிறாயே? அவள் உன்னிடம் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாள் தெரியுமா? உன் அழகைப் பற்றி அவள் எவ்வளவு தூரம் புகழ்ந்தாள் என்கிறாய்?' என்றேன். பிறகு லக்ஷ்மியைத் தனியாகக் கூப்பிட்டு, 'லக்ஷ்மி! நீ அடிக்கடி ஜெயத்திடம் மனஸ்தாபப்பட்டுக் கொள்கிறாயே? அவளுக்கு உன் மேல் எவ்வளவு பிரியம், தெரியுமோ? உன் புத்திசாலித்தனத்தையும் அழகையும் பற்றி அவள் புகழாத நாளே கிடையாது' என்றேன். இப்படி இருவரையும் தனித்தனியாக அழைத்து ஒருத்தியை இன்னொருத்தி எவ்வளவு தூரம் புகழ்கிறாள் என்று சொன்னவுடன் இருவரும் தங்கள் மனஸ்தாபத்தை அடியோடு மறந்து கல கலவென்று பேச ஆரம்பித்து விட்டார்கள்."



"பேஷ்! சரியான காரியம் செய்தாய்!" என்று வாழ்த்தினாள் அவள். —பி. எஸ். மணி

படித்துப் பாருங்கள்!

விவாகமானவர்களுக்கு ஒரு யோசனை

நம் நாட்டை இக் காலில் எத்தனையோ பிரச்னைகள் எதிர் நோக்கி நிற்கின்றன. முக்கியமாக உணவுப் பிரச்னை, உடைப் பிரச்னை, வீட்டுப் பிரச்னை, கல்விப் பிரச்னை, வேலையில்லாப் பிரச்னை ஆகியவைகளைக் கூறலாம். இத்தனை பிரச்னைகளையும் எப்படித் தீர்ப்பது என்பது தற்சமயம் மிக மிகப் பெரிய பிரச்னையாயிருக்கிறது. இந்த மிகப் பெரிய பிரச்னையைத் தீர்ப்பதற்கு இன்னும் ஒரு பெரிய பிரச்னையைத் தீர்த்து வைக்கவேண்டியிருக்கிறது. ஜனப் பெருக்கம் என்ற பிரச்னைதான்.

ஆண்டுதோறும் அபரிமிதமாகப் பெருகி வரும் ஜனப்பெருக்கத்தைத் தடுத்து நிறுத்தினாலன்றி, நாம் எந்த வகையிலும் உய்ய முடியாது என்று பல அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

மேல் நாட்டில் ஆயிரம் ஜனங்கள் உள்ள இடத்தில் வருஷத்தில் 26 குழந்தைகள் மட்டுமே பிறக்கின்றன. ஆனால், நம் நாட்டிலோ 42 குழந்தைகளுக்குக் குறைவாகப் பிறப்பதில்லை. இவ்வுலகில் பிறக்கும் குழந்தை ஒவ்வொன்றும் பிறந்தவுடன் நிறுத்துப் பார்த்தால் 8 ராத்தலுக்கு அதிகமாகக் காணப்படுகிறது. ஆனால் நம் நாட்டிலோ பிறந்த குழந்தையின் நிறை 6 ராத்தல்தான். அத்துடன் இன்னொரு பரிதபிக்கத் தக்க விஷயம் என்னவென்றால் நம் நாட்டில், ஆயிரம் குழந்தைகள் பிறந்தால் அவற்றுள் மூன்னூறு குழந்தைகள் பிறந்த ஒரு வருஷத்துக்குள் இறந்து விடுகின்றன. அதாவது நூற்றுக்கு 30 வீதம் ஆகிறது. இதேமாதிரி, குழந்தைகளைப் பெறும் தாய்மார்கள் 100-க்கு 20 வீதம் இறக்கிறார்கள். ஆகா! என்ன கொடுமை!

நினைப்பதற்கே சங்கடமாயிருக்கும் இந்த உண்மைகளைத் தெரிந்து கொண்டு சங்கடப்படுவதில் மட்டும் பயனில்லை. இதற்கு ஒரு பரிகாரம் செய்ய வேண்டுமல்லவா? அது இந் நூலில் தெளிவாகவும் விரிவாகவும் கூறப்பட்டிருக்கிறது.

குடும்பக் கட்டுப்பாட்டுக்கு, கர்ப்பத்தடை தான் சிறந்த சாதனம் என்பதை ஆசிரியர் பொ. திருகூடசுந்தரம் பிள்ளையவர்கள் ஆராய்ச்சியோடு விளக்கியிருக்கிறார். மேல் நாட்டுப் பிரபல டாக்டர்கள் இது விஷயமாகக் கூறியிருப்பதையெல்லாம் ஆசிரியர் பொருத்தமான முறையில் ஆங்காங்கு எடுத்துக் கூறியிருக்கிறார்.

பிரசுரம்: சக்தி நிலையம், தியாகராய நகர், சென்னை-17; விலை: ரூ. 3—4—0.

விபுலானந்த அடிகள்

தமிழுக்கு அருந் தொண்டு புரிந்த சுவாமி விபுலானந்தரின் வாழ்க்கைச் சரித்திரம் புனிதமானது. அடிகள் சேய் நாடாகிய இலங்கையில் தோன்றித் தாய் நாட்டில் கைலயங்கிரி வரை சென்று பற்பல நகரங்களில் பற்பல துறைகளில் அரும் பெரும் தொண்டுகள் புரிந்து பண்டிதரையும் பாமரரையும் ஆட்கொண்டார். அன்னாருடைய வாழ்க்கை வரலாற்றைத் திரு. மு. திருநாவுக்கரசு நல்ல தமிழில் இயற்றி அளித்திருக்கிறார்கள். இந் நூலில் அடிகளார் யாத்த சில பாடல்களும் கட்டுரைகளும் சேர்த்திருக்கின்றன. அடிகளார் மறைந்தமை குறித்துப் பல அன்பர்கள் பாடிய இரங்கற் பாக்களும் இதன் கண் உள.

பிரசுரம்: இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன், மதுரை

கவிதைக் கன்னி

கவிதைக் கன்னி பலரை அணுகினாள். அதனால் அவர்களின் கதி என்னவாயிற்று என்று எண்ணும் போது இந் நூல் ஆசிரியருக்கு அச்சம் உண்டாகிறது. ஆகவே, அவர் கவிதைக் கன்னியைப் பார்த்து,

பாரதி தன்னைச் சேர்ந்து
பயித்திய மாக்கி வைத்தாய்;
சீரிய புலவர் தம்மைத்
தெருவினில் அலைய வைத்தாய்;
நாரீ என்னை எவ்வன்
வைப்பதுன் எண்ணம் சொல்வாய்
ஜாரீ செல்ல வொட்டேன்
தோகையுன் வஞ்சம் வேண்டேன்.

இப்படிப் பல அரிய கருத்துக்களை நல்ல தமிழில், செய்யுள் உருவத்தில் இந்நூலில் காணலாம். இதன் ஆசிரியரைப் பற்றிக் கவிதைக் கன்னி என்ன எண்ணங்கொண்டிருந்தாலும் தமிழ்ப் பெரு மக்கள் நல்ல ஆதரவு அளிப்பார்கள் என்று எண்ணுகிறோம். விலையும் அதிகமில்லை. ரூ. 1—9—0 தான். ஆசிரியர்: யாழ்ப்பாணன்; பிரசுரம்: வட லங்கா புத்தக சாலை, பருத்தித் துறை, இலங்கை.

அன்பு வெளியீடு: அலர்—5

திருச் செந்தூர் முருகப் பெருமான் மீதும், வேங்கடாசல பதியின் மீதும், கோமதி யம்மன் மீதும் பக்தி ரஸம் ததும்பப் பம்பாய் தென்னிந்தியக் கல்விக் கழக உயர்தரக் கல்லூரியின் தமிழாசிரியர் திரு. கா. பிச்சுமணி அவர்கள் இயற்றிய செய்யுள் கோவை இது.


பிரசுரம்: என். விசுவநாதன், சென்னை.

கர்ப்பத் தடை

ஜனப் பெருக்கம் கட்டுப்பாடு இல்லாமல் பெருகிக் கொண்டே போனால் இன்னும் நாற்பது வருஷங்களுக்குள் ஜனங்கள் நம் நாட்டில் இப்பொழுது இருப்பது போல் இரண்டு மடங்கு ஆகி விடுவார்கள் என்று உலக ஜன சங்கியை இலாக்காக் காரியாலயம் வெளியிடும் தகவலை அலட்சியம் செய்து விடுவதற்கில்லை. ஆகவே கர்ப்பத் தடையை அனுமதித்துத்தான் ஆகவேண்டும் என்று மேல்நாட்டு அறிஞர்களும் (நம் நாட்டு அறிஞர்களும் கூட) அபிப்பிராயப்படுகின்றனர். அந்த அபிப்பிராயத்தைச் செயல் முறையில் கொண்டு வருவதற்குத் தக்க யோசனைகளை இந் நூலில் காணலாம்.

எழுதியவர்: ஸ்ரீ பாத சங்கர்

பிரசுரம்: கௌரி நிலையம், தியாகராய நகர், சென்னை, 17. விலை ரூ. 1—0—0.


50 ஆண்டுகளுக்கு
அவ்வளவு புதுமையானது
அவ்வளவு ருசியுள்ளது
மேலாக இந்தியாவில்
பிரசித்திபெற்ற
எவ்வளவு உயர்ந்த ரகம்
எவ்வளவு விதமான தினுசுகள்
பிஸ்கோத்துகள்
சிறந்த பிஸ்கோத்து
பிரிட்டானியா
FBMI
FEDERATION OF BISCUIT MANUFACTURERS OF INDIA



புளிக்கது எது?

வி. எஸ். வி.

மன்னார்சாமி மலாயா நாட்டிலிருந்து தாய் நாட்டுக்கு வந்து மாம்பழப் பட்டு என்னும் தன் சொந்தக் கிராமத்துக்குத் திரும்பினான். அவன் சிறு வயதிலேயே தாய் நாட்டை விட்டுக் கடல் கடந்து சென்றவன்.

மன்னார்சாமிக்கு மருதாயி என்று ஒரு மகள் இருந்தாள். தாயை இழந்த அவளை வளர்க்க வேண்டிய பொறுப்புடன் அவன் தன் சொந்த ஊருக்கு வந்து சேர்ந்தான்.

மலாய் நாட்டுப் பொன் மன்னார்சாமியின் மடி கனக்கவே இருந்தது. அவன் பிறந்து வளர்ந்த மாம்பழப் பட்டில் அவனை இணைத்த பாசம் ஒன்றே ஒன்றுதான். அதுதான் ஒரு சிறு மனைக் கட்டு. அதில் ஒரு சிறு குடிசை வேய்ந்து, பக்கத்தில் இருந்த சில மனைக் கட்டுகளையும் வாங்கிப் பயிர் வைத்தான்.

மன்னார்சாமி பழத் தோட்டம் வளர்ப்பதில் மிக்க அனுபவம் பெற்றவனாதலால் ஜாதிக்கு ஒன்று இரண்டு என்று மா, பலா, முதலியவற்றை நட்டான். அத்துடன் சாத்துக்குடிச் செடியை நிலம் கொள்ளுமளவும் நட்டு வைத்தான்.

மன்னார்சாமி உழைப்பாளி. நிலம் செழிக்க, உரமிட்டு, நீர் பாய்ச்சி, ஒவ்வொரு செடியையும், செல்வச் சிறுமியாக, கண் காணித்து வந்தமையால், சில வருஷங்களுக்குள் காண்பவர் கண்களுக்கு அந்தத் தோட்டம் பெருங் காட்சியாகவே இருந்தது.

மருதாயி கவலையின்றி வளர்ந்து வந்தாள். தோட்டத்தின் பழ விருக்ஷங்களுடன் போட்டியிட்டுக் கொண்டு வளர்ந்து வந்த அவள் தாயின் அங்க அவயவங்களின் பிரதிபிம்பம் போலத் துலங்கினாள்.

மருதாயி தன் கறுத்த கூந்தலை அள்ளிச் செருகிக் கொண்டை யிட்டுக் கொண்டிருப்பதே தனிச் சோபையைத் தருவதாயிருந்தது. அவள் அகன்ற கண்களின் விழிச் சுழலில், சிக்குண்ட கிராம யுவர்களின், இருதயம் கொல்லன் துருத்திபோல் வீங்கி வாடின.

ஒருநாள் மன்னார்சாமி மருதாயியை அழைத்து மிகவும் அன்புடன், “மருது, நீ இனிச் சிறுபிள்ளையல்ல. ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கணும். இந்த ஊர்ப் பிள்ளைகள் நல்லவர்கள் இல்லே. உனக்கு ஏற்றவனாக வெளியூரில்தான் பார்க்கணும். கடை கண்ணிக்குப் போகாதே; குடிசையிலேயே இரு. தோட்டத்தைப் பார்த்துக் கொள்!” என்று புத்தி சொன்னான்.

“அப்பா, உங்களுக்குக் கெட்ட பெயர் வரும்படியாக நான் நடந்து கொள்ள மாட்டேன்!” என்று தகப்பனாருக்குத் தைரியம் சொன்னாள் மருதாயி.

மன்னார்சாமி மன நிம்மதி பெற்றான்.

* * *

மாம்பழப் பட்டு, பாட்டாளிகள் உள்ள கிராமம். பருவ மழை இல்லாமையால் பஞ்சம் ஏற்பட்டு அந்தக் கிராம மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாகிவிட்டனர். கிராமத்தில் ‘ஸாவ்கார்’ என்று அழைக்கப்பட்டவன், ஒருவனே தனவான். சிறு வியாபாரத்தால் பெருந் தனம் மடக்கிச் சுக ஜீவனம் செய்து வந்தான். கிராம ஜனங்கள் தங்கள் சுக துக்கங்களுக்காக ஸாவ்காரையே சரண் அடைந்து வந்தார்கள்.

சிலந்திப் பூச்சி, வலை பின்னி ஈ எறும்புகளுக்காகக் காத்திருப்பது போல, ஸாவ்காரும் தன் வலையில் யார் சிக்குவார்கள் என்று காத்திருந்து, கிடைத்தவர்களைத் தன் பேராசைக்குப் பலியிட்டுப் பணம் சேர்த்து வந்தான்.

ஸாவ்காருக்கு ஒரே மகன். மருதாயியை விட ஒரு பிராயம் சிறியவன். அவனுக்குத் தகப்பனிடம் மிக்க செல்வாக்கு. ஒரு நாள் அவன் தன் தகப்பனிடம் சென்று, “அப்பா, எனக்கு ஒரு ஆசை” என்றான்.

“என்ன வேண்டும் கண்ணு, உனக்கு?”

“மருதாயி இருக்கிறாளே. அவள் அப்பா போட்டிருக்காரே பழத் தோட்டம்! அது மாதிரி எனக்கும் ஒரு தோட்டம் போட்டுத் தருகிறாயா?” என்று ஆவல் வீசும் விழிகளுடன் தன் விருப்பத்தைத் தெரிவித்தான்.

“அப்பா! இதுதானா பிரமாதம்? அந்தத் தோட்டத்தையே வேண்டுமானாலும் வாங்கித் தருகிறேன்” என்றான் தகப்பன்.

“அவர் ஏன் அப்பா அந்தத் தோட்டத்தை விற்கப் போகிறார்? எத்தனை கஷ்டப்பட்டுக்

குழந்தை மாதிரி செடிகளையும் மரங்களையும் காப்பாற்றி வருகிறார்! அவர் அந்தத் தோட்டத்தைத் தரமாட்டார், அப்பா! எனக்குப் புதிதாகத் தோட்டம் போட்டுக் கொடு" என்றாள் மகள்.

"உனக்கு ஏன் அந்த விசாரம்? பார்த்துக் கொண்டே இரு. நான் வாங்கித் தருகிறேனா இல்லையா என்று. புதிதாகத் தோட்டம் போடுவது என்றால் ரொம்ப நாளாகும், இல்லையா?" என்று தகப்பன் சொன்ன சமாதானம் மகளுக்குத் திருப்தி அளிக்கவில்லை.


"மருதாயிக்கு அந்தத் தோட்டமென்றால் உயிரு. என்னிடம் அவன்தான் 'செத்து வேணுமென்றாலும் போயிடுவேன். தோட்டத்தைக் கொடுக்க மாட்டேன்' என்று சொன்னானே" என்று பிடிவாதம் பிடித்தாள்.

வேறு வழியின்றி அவளைத் திருப்தி செய்வதற்காக "ஆகட்டும் போட்டுத் தருகிறேன்" என்று சொல்லி யனுப்பினான் ஸாவ்கார்.

மருதாயிக்கு வந்த ஜுரம் சாதாரணமானது என்றுதான் நினைத்தான் மன்னார்சாமி. ஆனால் போகப் போக அவன் உடம்பு துரும்பாய் இளைக்கத் தொடங்கியதும் அவன் அபிப்பிராயம் மாறியது. அவனுக்குப் பார்க்காத வைத்தியம் இல்லை. கிராமத்து வைத்தியரின் மாத்திரைகளுக்கும் சூரணத்துக்கும் லேகியங்களுக்கும் அந்த நோய் கேட்கிற வழியாயில்லை. பூசாரி வந்து உடுக்கு அடித்துப் பார்த்தான். ஊஹூம், ஒன்றும் பலன் இல்லை.

கடைசியில் மன்னார்சாமி வேறொன்றும் செய்யத் தெரியாதவனாய்ப் பக்கத்துப் பேட்டைப் பாதிரி வைத்தியரிடம் அழைத்துச் சென்றான். அவர் உச்சி முதல் உள்ளங்கால் பரியந்தம் அரைமணி நேரம் பரீக்ஷை செய்தார். பிறகு "அப்பா, வியாதி முற்றி விட்டது. என்னால் ஆனதைச் செய்து பார்க்கிறேன். என் வசம் மருந்து இல்லை. பம்பாயிலிருந்து விமான மூலம் தருவிக்க வேண்டும். நாளைத் தபாலுக்குள்ளாக நூறு ரூபாய் கொண்டு வா. தாமதம் பண்ணுவதற்கில்லை!" என்று சொல்லி மருதாயியை ஆஸ்பத்திரியில் சேர்த்துக் கொண்டார்.

முகம் வாட மனம் கசங்கக் கிராமம் திரும்பி, தன் விதிப் பயனுடன் போராட அசக்தனாகிப் பேயறைந்தவன் போல் உட்கார்ந்து விட்டான் மன்னார்சாமி. கிராமத்தில் ஸாவ்காரைத் தவிரப் பண உதவி செய்வோர் வேறொருவரும் கிடையாதல்



லவா? ஆனால் மன்னார்சாமி அவனிடம் செல்ல விரும்பவில்லை. மன்னாரைக் கண்டு மகனின் தேகஸ்திதியைக் கண்டறிய வந்தவர்கள், 'காரியம் பிரதானமே யல்லாமல் வீரியத்திற்கு இது சமயமன்று' என்று புத்தி யூட்டிச் சென்றார்கள். 'போவதா, கூடாதா?' என்று 'பெண்டுலம்' போல் மனம் ஊசலாடிக் கொண்டிருக்கையில், ஸாவ்காரே பிரத்யட்ச தெய்வம்போல் பிரசன்னமானான்.

"மன்னாரு, விஷய மெல்லாம் ஊரார் சொல்லக் கேட்டுப் புரிந்து கொண்டேன். இதோ பார், ஒன்றுக்கு இரண்டாகக் கொண்டு வந்திருக்கிறேன். ஜல்தி போய் மகன் உடம்பைக் கவனி" என்று சொல்லி இரண்டு நூறு ரூபாய் நோட்டை மன்னார் சாமியின் கையில் திணித்தான்.


சுருக்கச் சொல்லின், பணம் காற்றாய்ப் பறந்தது. கடன் ஏறியது. மகனின் உயிர்

'இப்பவோ, பின்னேயோ, சற்று நேரம் தன்னிலேயோ' யென்று, புலவரொருவர் பாடிய நிலையில் இருந்தது. மருதாயியின் வியாதி பாதிரி வைத்தியத்துக்குப் பிடிபடவில்லை. ஆகவே பாதிரி அவளைத் திரும்பி வீட்டுக்கே அனுப்பி விட்டார்.

* * *

அன்று குடிசையின் வெளிப் பக்கம் காலடிச் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து 'பரமசிவம்! பரமசிவம்' என்று வந்த குரல் செவிக்கு ஆறுத லளிப்பதாக இருந்தது. யார் என்று பார்க்கத் தட்டுத் தன்னாடிக் கொண்டு வெளியே வந்தான். பரதேசி யொருவரைக் கண்டான். அவர் கால்களில் விழுந்து கும்பிட்டான். மகவை மறந்தான். பரதேசிக்குப் பால் பழம் தந்து உபசரித்து வணங்கினான்.

"மகனே, பயப்படாதே! உன் குடிசை நிலை யான் அறிந்தேன். இந்தப் பச்சிலையை வெண்ணெய் போல் அரைத்துப் பாலுடன் கலந்து, மணிக்கு ஒரு தடவை நாவில் தடவு. கடவுள் கிருபை யிருந்தால் பிழைக் கலாம். கவலைப்படாதே" என்று கூறிப் பரமசிவமே போல் தோன்றி அன்பு சொரிந்து, ஔஷதம் தந்து தன் வழி சென்றார் அந்தச் சாமியார்.



"குழந்தையே பிறக்க வில்லை என்று வருத்தப்பட்டீர்களே! இப்போது உங்கள் மனைவிக்கு முதல் பிரசவத்திலேயே மூன்று குழந்தைகள் பிறந்திருக்கின்றன."

மருந்தின் வேகம் மாய வேலையாகி அன்றிரவே மருதாயி கண் விழித்தாள். மன்னார்சாமி அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை யில்லை. அந்தச் சாமியாரைத் தெய்வம் என்று மனதாரப் போற்றினான். ஆனால் சாமியார் மீண்டும் அவன் கண்ணில் படவே இல்லை.

ஸாவ்காரின் கடன் பல நூறுகளாயின. அதைப் பற்றியே கவலையற்றிருந்தான். மகள் உயிர்ப் பிச்சை பெற்றுப் பிழைத்தெழுந்த ஆனந்தத்தில் அவனுக்குக் கடன் பாரம் பெரிதாகத் தோன்றவில்லை. ஸாவ்கார் தன் 'சிலந்தி' வலையை வீசினான். 'மன்னார்சாமி, எனக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை எப்படிக் கொடுக்கப் போகிறான்? தோட்டத்தைத் தான் என் நிலையில் கட்டுவான் போலிருக்கிறது' என்று ஒரு பேச்சைக் கிளப்பி விட்டான். ஒரு வாரம் கழித்து மன்னார்சாமியை காணச் சென்றான்.

"நம்ம குழந்தை சௌக்கியமாகிவிட்டதல்லவா? ரொம்ப சந்தோஷம், எல்லாம் நம் பணத்து வேலையப்பா! நம்ப கணக்கைப் பார்த்துச் சீக்கிரம் தீர்த்துவிட்டால் நன்றாயிருக்கும். உன் சமயத்திற்கு, நீ கேட்காமலே கொடுத்தேன். எனக்கு இப்பொழுது கொஞ்சம் பணமுடை. ஒரு வாரத்தில் தீர்த்து விடு" என்று பயமுறுத்திச் சென்றான் ஸாவ்கார்.

காலம் கடந்து வர, வாரமும் சென்றது. எப்படிப் பணத்தைத் திருப்பிக் கொடுப்பது? தோட்டம் போனால் போகட்டும் என்று தீர்மானித்து விட்டான் மன்னார்சாமி. ஸாவ்காருக்கும் தெரிவித்து விட்டான்.

மன்னார்சாமி பழங்களைப் பறித்துக் கோணியில் கட்டி ஸாவ்காரிடம் எடுத்துச் சென்று எண்ணிக் கொண்டிருந்தான். திடீரென்று 'பரமசிவம், பரமசிவம்' என்ற குரலைக் கேட்ட மன்னார்சாமி திரும்பிப் பார்த்தான். மன்னார்சாமியின் மகளுக்குப் பச்சிலை கொடுத்த பரதேசியே அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தார். நெருங்கி வந்ததும் அவர் "பழம் இனிப்பா இருக்கும் போலிருக்கிறதே! ஒரு பழம் தா. மாதிரி பார்க்கிறேன்" என்றதும், ஸாவ்காரை நோக்கினான் மன்னார்சாமி.

"சாமியாருக்குப் பழம் கொடு, சாப்பிட்டுப் பார்க்கட்டும்" என்றான் ஸாவ்கார். பரதேசியின் கையில் பழம் ஒன்றைக் கொடுத்தான் மன்னார்சாமி. பரதேசி அந்தப் பழத்தைப் புலவிதமாக வர்ணித்துவிட்டு உரித்து,

ஒரு சுளை வாயில் போட்டுக் கொண்டார். உடனே, ' "அப்பாடா! என்ன புளிப்பு. புளி கூடத் தேவலை போலிருக்கிறதே" என்று பழத்தைத் துப்பி, "என்ன பழம் பயிரிட்டாய்? ஊரை ஏமாற்றும் பிழைப்பு! என்ன பிழைப்பு வேண்டிக் கிடக்கிறது? அவைகள் ஊறுகாய்க்குக் கூட லாயக்கில்லை" என்று முகத்தை விகாரமாக்கிக் கொண்டு சொன்னார்.

"நல்ல வேளை தப்பினேன். சாமியாரே, நீங்க நல்லா யிருக்கணும் ஏமாற யிருந்தேன். இன்றைக்குப் பத்திரம் எழுதி விடுவது என்று ஸ்டாம்புக் காகிதம் கூட வாங்கி வந்துவிட்டேன். மன்னார்சாமி, உன் தோட்டத்தை யாருக்காவது கொடுத்துக் கொள். என் பணத்தைச் சீக்கிரத்திலேயே கட்டி விடு" என்று பழத்தையும் மன்னாரையும் அனுப்பி விட்டான்.

பரதேசியின் நடத்தை மன்னார்சாமிக்குக் கோபத்தைத் தான் தந்தது. ஆனால் மகனைக் காப்பாற்றிய மகானுபாவன் என்ற எண்ணம் எழுந்ததும் "என்னங்க, இப்படி என் தலையில் கல்லைப் போட்டு விட்டீர்களே" என்றான். 'மன்னாரு, என்னைக் கவனித்துப் பார். நான் யார் தெரிகிறதா?" என்று பரதேசி கேட்டார்.

"தெரியவில்லையே! ஆனால் பார்த்த முகமாகத்தானிருக்கிறது" என்று மன்னார்சாமி திகைத்தான்.

"என் மகள் வெள்ளை இறந்ததும் வருத்தம் கொண்டு, பரதேசியாகி, ஊரூராய் அலைந்து திரிந்து பல பரதேசிகளிடம் சிநேகம் கொண்டு, பச்சிலைப் பிரயோக ரகசியங்கள் அறிந்தேன். அதன் மூலம் கொஞ்சம் பணமும் சம்பாதித்திருக்கிறேன். ஸாவ்காரின் சூழ்ச்சி அறிவேன். அதற்காகப் பழம் புளிக்கிறது என்று, நாடகம் நடித்தேன்" என்று மன்னார் பிரமித்து நிற்கப் பரதேசி தன் விருத்தாந்தத்தைச் சொன்னார்.

"மருதாயி இங்கே வா. உனக்கு உயிர்ப் பிச்சை கொடுத்த உன் தாத்தா வந்திருக்கிறார்!" என்று கூப்பிட்டான் மன்னார்சாமி.

பேத்தியை இரு கரங்களால் அணைத்து ஆனந்தப் பெருக்கெய்தி "தம்பி, இந்தா பணம்! இதில் நிறைய பணம் இருக்கிறது. ஸாவ்கார் பணத்தை அவனிடம் வீசி எறிந்து விடு. மிச்சத்தை மகள் கலியாணத்துக்கு வைத்துக் கொள். இப்பொழுது சொல்லு "புளித்தது எது? பழமா, ஸாவ்கார் மனமா?" என்று கேட்டார் பரதேசி.



ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

42. டாக்டர் என்ன செய்வார்?

ஆசனம் போட்டதின் மூலமாக 'அப்பெண்டிஸிடிஸ்' என்ற வியாதியைப் போக்கிக் கொண்ட நண்பரைச் சமீபத்தில் சந்தித்தேன். அவர் சில காலமாகப் பக்தி மார்க்கத்தில் அதிகம் ஈடுபட்டிருக்கிறார். புதிதாய் அன்று கழுத்தில் துளசி மணி மாலை விளங்கிற்று. "பக்தியில் மனதை அதி தீவிரமாய்ச் செலுத்துகிறீர்கள் போல் இருக்கிறது" என்றேன். பல கலைகளைக் கற்ற மேதாவி துளசி மாலையை இக்காலத்தில் அணிவதென்றால் ஆச்சரியமல்லவா! அதனால் அப்படிக் கேட்டேன். அவர் புன்முறுவலுடன் "இந்தத் துளசி மாலை ஒரு அன்புப் பரிசு. இது தங்களுக்குக் கிடைத்திருக்க வேண்டியது. அவ்வளவு தூரம் சிரமம் கொடுப்பானேன் என்று நானே இதை ஏற்றுக் கொண்டேன்" என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அன்புப் பரிசாவது! எனக்குக் கிடைப்பதாவது! அப்படி எனக்குக் கிடைக்க வேண்டியது, எனக்குத் தெரியாமல் இவருக்கு எப்படி வந்தது? ஒருகால் சுயநலம் அதிகமாய் விட்டதா! பொன் மாலையாய் இருந்தால் அப்படி நினைக்க இடமிருக்கிறது. துளசி மணி மாலையை அப்படி நினைக்க முடியவில்லையே! இதில் ஏதோ மர்மமிருக்கிறது என்று என் மனம் மேலும் விஷயமறிய ஆவல் கொண்டது.

அவர் கதையைச் சொன்னார்:

ஒரு பணக்காரர் எனக்கு மிக வேண்டியவர். வயது நாற்பது இருக்கும். அவருக்குப் பல வருடங்களாகவே பல நோய்கள் வந்து, பல மருந்துகளை அருந்தி வந்தார். ஆனால் சுகமென்னவோ கண்டபாடில்லை. ஒன்று போனால் ஒன்று மாறி வந்து கொண்டிருந்தது. கடைசியில் உடம்பிலுள்ள நல்ல ரத்தமே போய் நீர் கோத்துக் கொண்டது. கை, கால்களில் நீர் கோத்து வீக்கம் கொண்டது. அந்த ஊரில் இருந்தால் சரியான சிகிச்சை செய்துகொள்ள முடியாது என்று எண்ணிச் சென்னைக்குத் தன் மனைவியுடன் வந்தார். பல பிரபல டாக்டர்களிடம் சிகிச்சை பெற்றார். பெரிய ஆஸ்பத்திரிகளில் தங்கினார். குணம் ஏதும் காணவில்லை. உடம்பெல்லாம் ஊசியினால் சல்லடைக் கண்களாகத் துளைத்ததுதான் மிச்சம். உடலில் சக்தியில்லாததுடன் ஊசிகள் குத்தின பாதை பொறுக்க முடியாமல் அவஸ்தைப்பட்டார். டாக்டர்கள் இனித் தேறாது என்று கை விட்டு விட்டனர்.

'சரி, இறப்பதென்னவோ நிச்சயம். சொந்த ஊருக்குச் சென்று, சுற்றத்தார்கள் இருக்குமிடத்தில் இறப்போம்' என்று அவர்கள் புறப்பட்டார்கள். ஊருக்குப் போவதற்கு முன் என்னைப் பார்த்துப் போக வந்தார்கள். நடந்த விருத்தாந்தத்தைச் சொன்னார்கள். அவர் மனைவியோ கண்ணீரும் கம்பலையுமாய் நின்றார். பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. "சரி, நீங்கள் இறப்பது நிச்சயமென்று தீர்மானித்து விட்டீர்கள். கடைசியில் நான் சொல்லுகிறபடி கொஞ்ச நாளைக்குச் செய்து விட்டு இறந்து விடுங்கள். ஒருகால் குணமானாலும் ஆகலாம்" என்றேன்.

அந்த அம்மாளின் முகம் மலர்ந்தது. நீங்கள் எதைச் செய்யச் சொன்னாலும் செய்கிறேன். எப்படியும் என் கணவர் பிழைத்தால் போதும் என்றார். வெள்ளத்தில் மூழ்கித் தத்தளிப்பவன் ஒரு துரும்பைக் கண்டாலும் அதைப் பிடித்துக் கரை ஏறிவிடலாம் என்று எண்ணுவானும். அதைப் போல ஏதனாலாவது தன் கணவர் பிழைக்க மாட்டாரா என்ற ஆவல். நண்பருக்கென்னவோ 'இனி என்ன செய்து என்ன ஆகப் போகிறது!' என்ற விரக்தி ஏற்பட்டிருந்தது. என் வற்புறுத்தலினாலும், மனைவியின் வேண்டுகோளினாலும் என் யோசனைக்கு இணங்கினார். அவரைச் சர்வாங்காசன நிலைக்குக் கால்களைத் தூக்கி, என் உடல்மேல் தாங்கியிருக்கும் வண்ணம் பிடித்துக் கொண்டேன். ஒரு நிமிஷம் கூட அவரால் இருக்க முடியவில்லை. அவ்வளவு வலி, உடம்பெல்லாம். இம்மாதிரி 3, 4 தடவைகள் செய்தேன். "இப்படியே தினசரி காலை, மாலை, வெறும் வயிற்றில் செய்து வாருங்கள். வலியில்லாமல், கஷ்டமில்லாமல் எவ்வளவு அதிக நேரம் நிற்க முடிகிறதோ, நிற்க வேண்டும். ஆனால் விடாமல் செய்து வர வேண்டும்" என்றேன். அப்படியே செய்வதாக வாக்களித்து, இருவரும் சொந்த ஊர் சென்றனர்.

ஆறு மாதங்கள் சென்றன. ஒருநாள் என் வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தேன். மேற்படி தம்பதிகள் எதிர்பாராவிதமாய் வந்தனர். பெரிய நோயாளியாய், எழுந்திருக்கவும் முடியாமல், ரத்தமே இல்லாமல் நீர் கோத்து விகாரமாய் இருந்தவர் அந்தக் குறிகள் ஏதுவுமில்லாமல் வேகமாய் நடந்து வந்தார். நான் ஆச்சரியத்தால் பேசவும் முடியாமல் தலையை மட்டும் ஆட்டி வரவேற்றேன். அவர் மனைவி என் முன் வந்து, தன் கழுத்தில் அணிந்திருந்த காசுமாலை, மாங்காய்மாலை, மற்றும் தங்கச்

சங்கலிகள் என்னென்ன உண்டோ, மாங்கல்யம் தவிர, மற்றெல்லா நகைகளையும் ஒவ்வொன்றாய்க் கழற்றிக் கோவிலில் உற்சவருக்குச் சாத்துவது போல் என் கழுத்தில் போட்டார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. "இது என்ன கூத்து? எதற்காக இப்படிச் செய்கிறீர்கள்!" என்று கேட்டேன்.

அந்த அம்மாள் "இவை யெல்லாம் உங்களுக்கே சொந்தம். எனக்கு நீங்கள் தான் மாங்கல்யப் பிச்சை அளித்தீர்கள். உங்களால்தான் என் கணவர் பிழைத்தார்" என்று கையெடுத்துக் கும்பிட்டார். எனக்கு ஒரே ஆனந்தம். நகைகள் கிடைத்ததற்கல்ல. என் நண்பர் பிழைத்து விட்டார்! பெரிய பெரிய டாக்டர்களாலும் இனிப் பிழைக்க மாட்டார் என்று கைவிடப் பட்டவர் பிழைத்து விட்டார்! என்னே ஆசனங்களின் மகிமை!

பிறகு என்னை நான் சமாளித்துக் கொண்டு, "இதற்கெல்லாம் நான் உரியவனல்ல. எனக்கு உயிர் தந்தவர் ஒருவர் இருக்கிறார். அவர் சொல்லித் தந்த ஆசனம்தான் உங்களுக்குச் சொல்லிக் கொடுத்தேன். இந்த மரியாதைகளெல்லாம் அவருக்குச் சேர வேண்டியது. ஆனால், "அவருக்கோ, மற்றவர்களுக்குக் கொடுக்கத் தெரியுமே தவிர வாங்கத் தெரியாது. எந்தப் பொருளையும் அவர் தொட மாட்டார்" என்றேன். அவர்கள் "நீங்கள் தான் எங்களுக்குக் கண்கண்ட தெய்வம். இவையெல்லாம் உங்களுடையது" என்றனர். நான் என்ன தடுத்தும் கேட்பதாய் இல்லை. எங்கள் ஞாபகார்த்தமாய் இருக்கட்டும் என்றனர். அப்படியானால் ஒரு துளசி மணிமாலையைக் கொடுத்தால் போதும். நான் எப்பொழுதும் உங்கள் ஞாபகார்த்தமாகவே அணிந்திருப்பேன். பொன் மாலைகளைக் கழற்றி விடுவேன். அணிய முடியாது என்றேன். அதன்பின் அவர்களுடைய ஆனந்த வெறி ஒருபடியாக அடங்கிற்று. ஒரு துளசி மணி மாலையை வாங்கித் தந்தனர். பொன் மாலைகளை அவர்களுக்குக் கொடுத்து விட்டேன். அந்த அன்புக் காணிக்கைதான் இது."

"இப்பொழுது சொல்லுங்கள் இது தங்களுக்குச் சேர வேண்டியதல்லவா!" என்று என்னையே கேள்வி கேட்டார். இவைகளைக் கேட்டதும் அந்த ஆபரணங்கள் எல்லாம் என் கழுத்தில் விழுந்தால் எவ்வளவு சந்தோஷமுண்டாகுமோ, அதைவிடப் பன் மடங்கு சந்தோஷமேற்பட்டது. அந்த அம்மையாரின் பதிபக்திக்குத் தலை வணங்கினேன்.

மருந்துகளினாலும், ஊசிகளினாலும் கண்டபடி சித்ரவதை செய்யப்பட்ட உடலை, சர்வாங்காசனம் சீர்திருத்தி விட்டது.

முதலில் சாதாரணமாய் ஜுரம் வருகிறது என்று வைத்துக் கொள்வோம். அதற்குக் கொடுக்கும் மருந்தின் வேகத்தால் ஜுரம் என்னவோ தணிகிறது. அம்மருந்தின் வேகம் உஷ்ணமாய் மாறுகிறது. இருமல் வருகிறது. பிறகு இருமலுக்கு மருந்து. இருமலுக்கு மருந்து சாப்பிட்டால் அது போய் வயிற்று வலி. பிறகு மருந்து; அதன் பின் சீத பேதி; அதற்காக மருந்து. குளிர்ந்த வஸ்துக்களாய்ச் சேர்ப்பது அதனால் மார்ச்சளி; ஜுரம். அதற்கும் மருந்து. இதற்குள் உடலில் உள்ள சுண்ணாம்புச் சத்து குறைந்து விடுகிறது. உடம்பெல்லாம் நமைச்சல்; மறுபடி அதற்கு மருந்துகள். மேல் பூச்சுகள்; ஊசிகள்; பிறகு கண் எரிச்சல். தலைவலி, அதற்கு மருந்துகள். இதற்குள் நரம்புகள் தளர்ந்து விடுகின்றன. கோளங்கள் கெட்டு விடுகின்றன. ரத்தத்திலுள்ள சிவப்பணுக்கள் குறைகின்றன. நீர் கோத்துக் கை கால் வீங்கிவிடுகிறது. இருதயம் பலவீனமாகிறது. இந்நிலைமையில் டாக்டர் தான் என்ன செய்வார்? ஊரில் பல வீடுகளில் நடைபெறும் வழக்கங்களையே சொல்லுகிறேன்.



"உங்கள் கடையில் வாங்கின சாமான் திருப்திகரமாக இல்லா விட்டால் பணத்தை வாபஸ் செய்து விடுவதாகச் சொன்னீர்களே, ஸார்!"
"ஆமாம், உங்களுக்கு இப்பொழுது என்ன திருப்திக் குறைச்சல் ஏற்பட்டு விட்டது?"
"நான் உங்களிடம் வாங்கின இந்த நாவல் முடிகிற விதம் எனக்குத் திருப்திகரமாயில்லை!"

இந்நிலைமையிலிருந்து தேற வேண்டுமானால், அடிப்படைக் காரணத்தை அறிந்து சிகிச்சை அளிக்க வேண்டும். அதுதான் தைராய்ட் சீர்திருத்தம். இந்த நிலைமையில் எந்தத் தைராய்ட் மருந்துகளும் குணமளிக்காது. குணத்திற்குப் பதில் ஆபத்துதான் உண்டாகும். ஆனால் சர்வாங்காசனத்தின் மூலம் இயற்கை முறையில் தைராய்டுக்கு சிகிச்சை அளிக்கப் படுகிறது. தைராய்ட் குணமாக ஆக நரம்புகள், தசைகள், இருதயம் மற்ற அவயவங்கள் புத்துயிர் பெறுகின்றன. இரத்த அறைகள் பலமடைகின்றன. நீர் குறைகிறது. வீக்கம் வடிகின்றது. பழைய நிலைமைக்கு உடல் மாறுகிறது. சர்வாங்காசனம் ஒன்றைத் தவிர வேறு எந்த விதமான சிகிச்சைகளும் இதற்குப் பிரயோஜனமில்லை. (தொடரும்)

கோதையின் கீதம்

ஜி. ரா. கோபாலன்

நான் எட்டு வயதுச் சிறுமியாக இருந்தபோது என் வயதிற்குச் சமமான சிறுவர் சிறுமியருடன் கூடிக் குதித்து விளையாட வேண்டுமென்ற ஆவல் ஏற்படுவதுண்டு. ஆனால் வயதான என்னுடைய பாட்டனும் பாட்டியும் என் சுதந்தரத்தைக் கட்டுப்படுத்தி விட்டோடு அடைத்து வைத்திருந்தனர்.

என்னுடைய பதினேழாவது வயதில் ஒரு அழகான வாலிபர் என் கரத்தைப் பற்றிக் கல்யாணம் செய்து கொண்டபோது ஒரு புதிய இன்ப உணர்ச்சியும் அளவு கடந்த ஆனந்தமும் ஏற்பட்டன. கல்யாணச் சந்தடியிடையே அவர் என்னைத் தனியிடத்தில் சந்தித்து, என் கன்னத்தில் மெதுவாகத் தட்டி 'அமிர்தம்! என்னை உன் மனதிற்குப் பிடித்திருக்கிறதா!" என்று அன்பொழுகக் கேட்டபொழுது என்னை இன்பமயமான ஏதோவொரு உலகத்திற்கு அழைத்துச் சென்று விட்டது போல் தானிருந்தது. நான் அவருடன் தனியாகக் குடித்தனம் செய்ய சென்னைக்குச் சென்றபோது நான் என்னுடைய அதிர்ஷ்டத்தையோ, பெருமையையோ, குதூகலத்தையோ நினைத்துப் பார்க்கக்கூட முடியாத மெய்மறந்த நிலையில்தான் இருந்தேன்.

பெண்புத்தி! இந்தப் பரம்பரைக்கே விடாத ஒரு அக்ஞானம்! அப்பொழுதெல்லாம் என் நினைவில் ஒரு ஆசை. எனக்கு ஒரே ஒரு அழகான பெண் குழந்தை பிறக்க வேண்டும். அதை அருமையும் பெருமையுமாக வளர்த்து ஒரு அழகான வாலிபனுக்கு மணம் செய்து கொடுத்து, நானும் என் கணவரும் எப்படி மனமொத்து இன்பமாக இல்வாழ்க்கை நடத்துகிறோமோ, அப்படி அவர்கள் மனமொத்துக் கூடி வாழ்வதைக் கண்களால் பார்த்து ஆனந்தப்பட வேண்டுமென்ற ஆசை. இது பெண்ணாகப் பிறந்தவர்களுக்கு ஏற்படும் இயற்கையான அக்ஞானம் என்று சொல்லுவதுதானே பொருந்தும்!

இரண்டு வருடங்கள் ஆனந்த நிழலோட்டத்தில் ஓடின. ஒருநாள் பிரேமா எனக்குப் பெண்ணாகப் பிறந்தாள். அவள் என் ரத்தத்தின் ரத்தம். சதையின் சதை. உயிரின் உயிர். நான் அவளை எடுத்து அணைத்துக் கொள்ளும் போதெல்லாம் ஒரு புதுவித உணர்ச்சியினால் மிகவும் அனுபவமடைந்தவள் போலாகி விடுவேன். என்னுடைய எல்லாக் கனவுகளும் அப்பொழுதே உண்மையாகி விட்டதாக எண்ணுவேன்.

நாட்கள் ஓடிக்கொண்டு இருந்தன. பிரேமா சீரும் சிறப்புமாக வளர்ந்து வந்தாள்.

மூன்றாவது வயதில் பிரேமா செல்லக் குழந்தையாக இருந்தாள். நான்காவது வயதில் அவள் என்னையும் என் கணவரையும் ஆட்டி வைக்கும் சர்வாதிகாரியாகி விட்டாள். அவளுக்கு ஐந்து வயது நிரம்பியபொழுது நான் இன்னொரு குழந்தைக்குத் தாயாகி விட்டேன்.

பிறப்பு - இறப்பு, சந்தோஷம் - துயரம் இந்தக் கலப்படந்தானே வாழ்க்கை! எல்லை மீறிய சந்தோஷத்திற்குப் பின்னால் அதை அடித்து விழுங்கப் பயங்கரமான துக்கம் பேய்போல் பதுங்கி வந்து கொண்டிருந்தது. கோதை பிறந்த ஒரு மாதத்திற்கெல்லாம் என்னுடைய கணவர் ஒரு கார் விபத்தில் இறந்து விட்டார். அதிலிருந்து அவளை நான் ஒரு துரதிர்ஷ்டம் பிடித்த பெண்ணாய்த்தான் நினைக்கவேண்டி யிருந்தது.

பிரேமா இந்த உலகில் பெண்ணாய்ப் பிறந்த பொழுது அவளுக்காகச் சந்தோஷமும் சாந்தியும் காத்திருந்தது. ஆனால் கோதை பிறந்த பொழுதோ குடும்பமே சிதறித் தத்தளிக்கக் கூடிய சோக இடி எங்கள் தலையில் விழுந்தது.

கோதை உருவத்தில் மிகவும் சிறு குழந்தை. சிறிய உருண்டையான முகம். பிரேமாவுக்கு இருந்ததுபோல் அவளுக்கு அவ்வளவு அழகான கண்களும் கேசமும் இல்லை. பிரேமா எப்பொழுதும் சந்தோஷத்தில் திளைக்கும் குழந்தைபோ லிருந்தாள். கோதையின் முகத்தைப் பார்த்தவர்களுக்கு அவள் எப்பொழுதுமே சோகத்தையும் துயரத்தையும் பின் தொடருகிறவள் என்றுதான் நினைக்கத் தோன்றும்.

என் கணவருக்குப் பூர்வீகமாக இருந்த சொத்தில் இரண்டு குழந்தைகளையும் வளர்த்து வாழ்க்கையை நடத்த ஆரம்பித்தேன். தினமும் கடைக்குச் சென்று வீட்டு சாமான்கள் வாங்கி வருவதும், வீட்டு வேலைகளைச் செய்வது போக மற்ற நேரங்களில் குழந்தைகளைக் கவனிப்பதும் தான் எனக்குச் சரியாக இருந்தது. அதிலும் பிரேமாவின் பிடிவாதத்திற்குச் சமாதானம் செய்வதில்தான் என்னுடைய முக்கால்வாசிப் பொழுதும் போய்விடும்.

"பாவம்! கோதைதான் துரதிர்ஷ்டசாலி! அவள் தன் தகப்பனாரை நினைவு தெரிந்து பார்த்ததில்லை. அவரும் அவளைத் தூக்கி எடுத்து வைத்துக் கொண்டு கொஞ்சியதில்லை. எப்படி இருப்பினும் என்னுடைய குழந்தைகள் இரண்டையும் நான் ஒற்றுமையாக வளர்க்கத்தான் பிரியப்பட்டேன். பிரேமா எப்படி நடந்து கொண்டாலும் கோதை தன் அடக்கத்தின் காரணமாக எவ்வித சச்சரவுக்கும் இடம் கொடுப்பதில்லை.

நான் கோதைக்காக ஒன்றுமே செய்யவில்லை. பிரேமா விளையாடி உடைத்த பொம்மைகளையும், அவள் உடுத்திக் கிழித்த உடைகளையும் அவள் மனதிற்குப் பிடிக்காமல் எறிந்த ஆபரணங்களையும் தனக்கு இருக்கும் சிறிய பரிவாலும் உரிமையாலும் கோதை தனதாக்கிக் கொண்டு திருப்தியடைந்தாள். சில சமயம் கோதையை எண்ணும் போது என் மனது குழையும். அவள் கடவுளால் எனக்கு அளிக்கப்பட்ட தெய்வீகக் குழந்தை என்று தான் எண்ணுவேன். கோதை எப்பொழுதுமே கூச்சமும் பயந்த சுபாவமும் உள்ளவள். அவ

ளுடைய விளையாட்டுக்களெல்லாம் மிகவும் சாதாரணமானவை. அவள் ஒரு பொழுதும் தன்னடக்கத்தையும் பொறுமையையும் இழந்ததில்லை. அவளுக்கு ஐந்து வயதாக இருந்த பொழுது பிரேமாவுக்கு வயது பத்து. வயதில் சிறியவளாக இருந்த பொழுதிலும் கோதை பிரேமாவின் பிடிவாதங்களுக்கெல்லாம் பெருந்தன்மையாக விட்டுக் கொடுத்தாள். பிரேமாவிற்குப் பதினைந்து வயதான போது கோதைக்கு வயது பத்து. அப்பொழுதெல்லாம் பிரேமாவிற்கும் குடும்பத்திற்கும் ஊழியக்காரி போலாகி விட்டாள் கோதை.

என் கவலையெல்லாம் முக்கியமாகப் பிரேமாவின் பேரிலேயே இருந்தது. ஏனென்றால் அவள் பதினெட்டு வயது நிறைந்த கன்னிப் பெண்ணாய் அழகு நிறைந்து வளர்ந்து நின்றாள். அவள் அழகிற்கும், ஆசைக்கும், குணத்திற்கும் தக்க கணவனைத் தேடிப் பிடிப்பது மிகவும் சிரமமான காரியம் என்று தோன்றியது. அவளுக்குக் கணவனாக வரக் கூடியவன் செல்வச் சீமானின் புதல்வனாக இருக்க வேண்டும். அழகும் யௌவனமும் பொருந்தியவனாக இருக்க வேண்டும் என்பதுதான் என் கவலை.

பிரேமா செடிக்குச் செடி தாவிப் பறக்கும் அழகிய வண்ணாத்திப் பூச்சி போலிருந்தாள். வாழ்வின் கனவுப் பாதையில் அவளுடைய ஒவ்வொரு காலடியும் இன்பமயமான திட்டங்களிலேயே பதிந்து சென்றது. ஒரு நாள் நான் அவளிடம் விளையாட்டாக, "பிரேமா! உன்னுடைய ஆசையெல்லாம் பெரிதாகத் தான் இருக்கிறது. கடைசியில் உனக்குப் புருஷனாக வரப் போகிறவன் எப்படி இருப்பானோ!" என்றேன்.

"நான் அப்படியெல்லாம் ஏமாந்து போய் விட மாட்டேன். எனக்குத் தகுந்தவரைத் தான் நான் தேடிப் பிடிப்பேன்" என்றாள்.

கோதையும் அவளை ஆதரிப்பவள் போல் "அக்கா என்ன சாமான்யமா! அவளுக்கென்ன குறைவு! அவள் அழகிற்குத் தகுந்தாற் போலவே அகமுடையானும் அமைவான்" என்றாள்.

இந்த இரண்டு வார்த்தைகளில் பிரேமாவிடம் கோதைக்குள்ள அபிமானம் நன்கு விளங்கியது.

பிரேமாவுக்குத் தன்னை அழகு செய்து கொள்ளத்தான் இன்னும் நேரம் சரியாக இருக்கும். கோதைக்கு இரவு தூங்கப் போகும் வரையில் வீட்டுக் காரியங்கள் ஏதாவது இருந்துகொண்டேயிருக்கும். இதை நினைக்கும் போதெல்லாம் கோதைதான் உண்மையாக ஒரு நல்ல வாலிபனுக்கு வாழ்க்கைப்பட்டு அதிர்ஷ்டம் நிறைந்த மனைவியாகப் போகிறாள் என்று தோன்றும். ஆனால் அப்படிப்பட்ட ஆசைக் கனவுகளுக்கு அவள் தன் உள்ளத்தில் இடங் கொடுத்தவளாகவே எனக்குத் தோன்றவில்லை. நான் ஒருநாள் அவளைப் பார்த்து, "ஏன் கோதை! உன் அக்கா எப்பொழுதும் ஆடம்பரமாகவும் மினுக்காகவும் இருக்க வேண்டுமென்று நினைப்பதுபோல் நீ ஏன் நினைப்பதில்லை!" என்று கேட்டேன்.

அப்பொழுது அவளுடைய களங்கமற்ற முகத்தில் ஒரு புன்முறுவல் ஓடியது. அந்தச் சிரிப்பிலேயே அவளுக்கு இருக்கும் தன்னம்பிக்கை தெளிவாக விளங்கியது. அவள் அந்தச் சிரிப்பினிடையே மெதுவாகச் சொன்னாள்: "அம்மா! பிரேமா என்னை விட ரொம்ப அழகில்லையா! அவள் அழகிற்குத் தகுந்தாற்போல் உலகில் புருஷன் கிடைப்பது ரொம்பக் கடினம். அதனால் சதா அவளுக்கு அந்த கவலை. எனக்கு அப்படியில்லை. நான் சாதாரணப் பெண். என்னைக் கல்யாணம் செய்துகொள்ள உலகில் என்னைப்போல் எத்தனையோ சாதாரண வாலிபர்களெல்லாம் இருக்கிறார்கள். அதைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்!"

கோதை தன்னை ஒரு சாதாரணப் பெண் என்று சொன்னாளே தவிர அவளை நான் ஒரு சாதாரணப் பெண் என்று நினைக்கவே இல்லை. பிரேமா இந்தப் பூமியில் பிறக்கும்போதே இங்குள்ள ஒவ்வொன்றையும் அநுபவித்துத் தீர வேண்டுமென்ற ஆசையோடு பிறந்திருப்பதாகத் தோன்றியது. ஆனால் கோதையோ இந்த உலக இன்பத்தை எல்லாம் பூர்வ ஜன்மங்களிலேயே அநுபவித்து விட்டுத் தன் பிறவிக் கடனைத் தொலைத்துவிட்டுப் போவதற்காகவே பிறந்திருப்பவள் போல் தோன்றினாள். ஆனால் கதியற்ற தாயாகிய நான் என்னுடைய இரண்டாவது குழந்தை கோதைக்கு எதிலும் ஆர்வத்தை ஏற்படுத்தாமலிருந்ததுதான் அதற்குக் காரணமாயிருக்கலாமோ, என்னவோ!

காலம் ஓடிக் கொண்டிருந்தது. பிரேமாவிற்கும் வயது இருபதாகி விட்டது. இன்னும் ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் செய்யாமல் எப்படி இருக்க முடியும்! எனக்கு அதைப் பற்றிய கவலையே பெரிதாக இருந்தது.


* * *

நான்கு வருடமாகச் சென்னையில் படித்துக் கொண்டிருந்த சந்திர சேகரன் தன் படிப்பை முடித்துக் கொண்டு ஊருக்கு வந்திருந்தான். எங்கள் வீட்டிற்கு எதிர்வீட்டிலுள்ள அந்தக் குடும்பத்தினரோடு எங்களுக்கு நெடுநாளையப் பழக்கம் உண்டு. சந்திரசேகரனும் எங்கள் குடும்பத்தோடு நெருங்கிப் பழகி வந்தான். அவனுக்கும் வயது இருபத்தெட்டாகி விட்டது. எனக்கு அவனைப் பார்த்தவுடன் பிரேமாவின் ஞாபகம்தான் ஏற்பட்டது. ஆனால் இந்த ஆசை நிறைவேறுமா என்ற சந்தேகம் மனதில் எழுந்தது. ஒரு ஏழை விதவையின் பெண்ணை ஒரு பணக்கார வீட்டு வாலிபன் விவாகம் செய்து கொள்ளுவான் என்று நினைப்பது சாத்தியமற்றதாய் இருப்பினும் சந்திரசேகரனைப் பொறுத்த வரையில் அப்படி நான் நினைக்கவில்லை. பிரேமாவின் அழகு அவனை வசீகரித்துவிடும். தவிரவும் குழந்தைப் பருவத்திலிருந்து அவர்கள் ஒன்று சேர்ந்து விளையாடியவர்கள். இயற்கையாக அவர்களிருவருக்கும் உள்ள அன்பு இப்பொழுது இன்னும் அதிகமாகி அவர்களுக்குள் ஒரு பிரிக்க முடியாத பந்தத்தை ஏற்படுத்திவிடும் என்று நம்பினேன்.

நான் அவனோடு கோதையை நினைத்துப் பார்த்ததே இல்லை. கோதைக்கு அவன்மீது ஆசை இருப்பதாகவும் தெரியவில்லை. அவனுக்கும் கோதைமீது பிரியம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் பிரேமா அப்படியில்லை.

அவன் சந்திரசேகரன் மீது காதல் கொண்டிருக்கிறான் என்பது மிகவும் தெளிவாகத் தெரிந்தது. அவன் சென்னையிலிருந்து வந்ததிலிருந்து பிரேமாவின் போக்கிலேயே ஒரு மாறுதல் ஏற்பட்டு விட்டதை நான் கவனித்தேன். அவள் இன்பமயமான ஆகாயத்தில் திசையை லட்சியம் செய்யாது ஆனந்தமாய் மிதக்கும் மேகத் தோணிபோல் இருந்தாள். அவளுடைய அலங்காரங்களி லெல்லாம் ஒரு புது மலர்ச்சி ஏற்பட்டிருந்தது. ஒவ்வொன்றையும் சந்திரசேகரனுக்காக விசேஷ முறையில் செய்து கொள்வது போல்தான் எனக்குப் பட்டது. சந்திரசேகரனைக் கண்டதும் அவள் முகத்தில் ஒரு மலர்ச்சி ஏற்படும். அவனோடு பேசும்போது அவள் குரலில் ஒரு குழைவும் கொஞ்சுதலும் இருக்கும். அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருப்பதைப் பார்ப்பதில் எனக்கு ஒரு மன நிம்மதியும் பூரிப்பும் ஏற்படும்.

ஒருநாள் கோதை தெருவிலிருக்கும் குழாயிலிருந்து ஒரு குடத்தில் தண்ணீர் கொண்டு வந்து கொண்டிருந்தாள். சந்திரசேகரன் தாழ்வாரத்தில் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். பிரேமா கண்ணாடி எதிரில் நின்று தலைக்கேசத்தை சீர் செய்து கொண்டிருந்தாள். நான் நடுத் தாழ்வாரத்தில் உட்கார்ந்து அரிசியிலிருந்த கற்களை கண்களுக்குத் தென்பட்ட வரையில் பொறுக்கிக் கொண்டிருந்தேன். கோதை பெரிய குடத்தை இடையில் சுமந்து வருவதைப் பார்த்ததும் சந்திரசேகரன் சிரித்துக் கொண்டே அவளைப் பார்த்து, "கோதை! நீதான் சரியான பெண். உனக்குச் சரியான புருஷன் கிடைக்கப் போகிறான். உனக்குப் புருஷனாய் வரப் போகிறவன் ரொம்ப அதிர்ஷ்டசாலியாய்த்தான் இருக்கணும்" என்றான்.



இந்த வார்த்தைகளை எப்படிப் பட்ட அநுதாபத்தோடு அவன் சொன்னான் என்று எனக்குத் தெரியவில்லை. அவனுக்குக் கோதையின் மீது ஏற்பட்டிருந்த சிரத்தை என்னைத் திகைக்க வைத்தது. சட்டென்று அவன் முகத்தைப் பார்த்தேன். கோதையையே உற்று நோக்கும் அவன் கண்களில் ஒரு ஆர்வமும் குறும்பும் தொனித்தன. கோதை வெட்கத்தால் தலை குனிந்து கொண்டாள். அவள் முகத்தில் இத்தனை நாளும் தோன்றாத ஒரு புதிய உணர்ச்சியின் பிரகாசம் ஏற்பட்டது.

பிரேமா கண்ணாடியைப் பார்த்துக் கொண்டே 'களுக்' கென்று சிரித்தாள். இந்தச் சிரிப்பு எதற்காகச் சிரித்தாள்! இதில் ஏதாவது அர்த்த முண்டா! கோதைக்கு வரப் போகும் கணவன் அதிர்ஷ்டசாலி என்று சந்திரசேகரன் சொன்னது நம்பக்கூடாத விஷயமாக அவளுக்குப் பட்டதா! எதற்காகச் சிரித்தாள்! அவள் ஏதோ சிரித்து விட்டாள். ஆனால் பிரேமாவை நினைக்கும்போது எனக்குப் பரிதாபமாக இருந்தது. தன்னுடைய அழகாலும் அலங்காரத்தாலும் உலகையே மயக்கிவிடலாம் என்ற அகங்காரத்தாலும், மூட நம்பிக்கையாலும் அதிலேயே கவனத்தைச் செலுத்தி மெய் மறந்திருந்தாள். அந்த மெய்மறந்த நிலையில் பிறருடைய இஷ்டமும் எங்கெங்கே பதிந்திருக்கிற தென்பதை அந்தப் பேதைப் பெண்ணால் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவளுடைய ஆசைகளிலும் முயற்சிகளிலும் நம்பிக்கை கொண்டிருந்த எனக்குக் கூடச் சிறிது அவநம்பிக்கை ஏற்படத்தான் செய்தது.

ஒருநாள் பிரேமா சரியான நிலைமையி லேயே இல்லை. அவள் முகம் வெறுத்துச் சோகம் படர்ந்திருந்தது. எப்பொழுதும்போல் அவள் கலகலப்பாகப் பேசவில்லை. அலங்காரம் செய்துகொள்வதிலும் சிரத்தை செலுத்த வில்லை. சரியாகச் சாப்பிடவுமில்லை. பிரேமா விடம் ஏற்பட்ட இந்த மாறுதல் எனக்குத் திகிலை உண்டாக்கியது. நான் கேட்டதற்கும் அவள் சரியானபடி பதிலளிக்கவில்லை. அன்று கோதையின் முகத்திலும் ஏதோ கவலைக் குறி தென்பட்டது. ஆனால் அவள் எதையும் வெளிக் குக் காட்டிக் கொள்ளாதவள் போல் வீட்டுக் காரியங்களிலேயே கவனமாக இருந்தாள். அவர்கள் இருவர் மனத்திலும் புகைச்சலை ஏற் படுத்தக்கூடிய ஏதோ ஒரு காரியம் அன்று நடந் திருக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றி யது. தினமும் வருவதுபோல் சந்திரசேகரன் வருவான். அவன் வந்தால் எல்லாம் நிரந்தெளி யத் தெரிந்து விடும் என்று காத்திருந்தேன். ஆனால் அன்று சந்திரசேகரன் வரவே இல்லை. எனக்கு இது வியப்பிற்கு மேல் வியப்பாக இருந் தது. "இன்று ஏன் சந்துரு வரவில்லை!" என்று பிரேமாவிடம் கேட்டேன். இதைக் கேட்டதும் அவள் முகம் சுருங்கியது. "எனக்கென்ன தெரியும்! அவன் வராததைப் பற்றி நானும் நீயும் ஏன் கவலைப் பட்டுச் சாகணும்! கவலைப் படுகிறவர்கள் கவலைப்படட்டும்!" என்று நெருப்புப் பொறி போல் வார்த்தைகளை உதிர்த்து விட்டு அந்த இடத்தை விட்டுப் போய் விட்டாள்.

அந்த சமயம் கோதை சமையலறை வாசற் படியில் நின்று கொண்டிருந்தாள். பிரேமாவின் வார்த்தைச் சரங்கள் அவள் இருதயத்தைத் துளைத்துப் புண்ணாக்கி விட்டன என் பதை அவளுடைய சோகமும் பச்சாத்தாபமும் நிறைந்த முகம் தெரிவித்தது.

அன்றிரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. பிரேமாவும் கோதையும் என்னைப் போலத் தான் தூங்காமல் இருந்திருக்க வேண்டும்.

இரவு நெடுநேரங் கழித்த பிறகு ஏதோ அர வம் கேட்கவே மெதுவாகக் கண்ணை விழித்துப் பார்த்தேன். கோதை படுக்கையிலிருந்து மெது வாக எழுந்து மாடிப் படியை நோக்கி பூனை போல் நடந்து சென்றாள். எனக்கு ஏற்பட்ட வியப்பில் அப்பொழுது துள்ளிக் குதித்து எழுந்து விடுவேன். ஆனால் என்னையே நான் அடக்கிக் கொள்ளும் சக்தி ஒன்று எனக்கு அப்பொழுது ஏற்பட்டது.

மாடிப் படியில் சத்தம் ஏற்படாமல் அவள் மிகவும் ஜாக்கிரதையாகத்தான் நடந்து போனாள். இந்த வேளையில் மாடிக்குப் போகக் காரணம் என்னவென்றுதான் எனக்கு விளங்கவில்லை. இரவு தூக்கம் வராததினால் மாடியறையில் சென்று ஏதேனும் புத்தகங்கள் படிப்பாள் என்று நினைத்தேன். ஆனால் வியப் பிற்கு மேல் இன்னொரு வியப்பு! பிரேமாவும் படுக்கையை விட்டு எழுந்து நான்கு புறமும் பார்த்துக் கொண்டே மெதுவாக மாடியை நோக்கி நடந்தாள். அதற்கு மேல் என்னால் படுக்கையில் படுத்திருக்க முடியவில்லை. என் பதட்டத்தை அடக்கிக் கொண்டு நானும் மெதுவாக மாடியை நோக்கி நடந்தேன்.



மாடி அறைக் கதவு உட்புறமாகத் தாளிடப் பட்டிருந்தது. பிரேமா வெளியே நின்று கொண்டு அறைக் கதவின் இடுக்கு வழியாக உள்ளே கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தாள். எனக்கு அது வியப்பாக மாத்திரம் இல்லை. பெரிய விபரீதமாகவும் பட்டது. "பிரேமா! இந்த நடுநிசியில் மாடியில் உனக்கு என்ன வேலை!" என்றேன் படபடப்போடு.

பிரேமா என்னைக் கண்டதும் மிரண்டு விட்டாள். ஏதோ தவறான காரியத்தைச் செய்து விட்டவள்போல் பயந்து நடுங்கிக் கொண்டு பதில் பேசாமல் நின்றாள். "கோதை எங்கே!" என்றேன் நான் படபடப்புத் தவி யாமலேயே.

"அவள் என்ன செய்கிறாள் என்று பார்க்கத் தான் வந்தேன். கதவைத் தாளிட்டுக்கொண்டு அவள் உள்ளே இருக்கிறாள்."

"கோதை கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே இருக்கிறாளா! உள்ளே என்ன செய் கிறாள்! ஏதாவது புத்தகம் படிக்கிறாளா!"

"புத்தகம் படிக்கவில்லை. கடிதம் எழுது கிறாள்" என்றாள் பிரேமா புன்சிரிப்போடும் ஆத்திரத்தோடும்.

"கடிதம் எழுதுகிறாளா! யாருக்கு!" என்றேன் நான்.

"யாரிடமிருந்து அவளுக்குக் கடிதம் வந்தி ருக்கிறதோ, அந்த மகா புருஷருக்குத்தான்!" என்றாள் கேலியாகவும் குத்தலாகவும்.

"யாரிடமிருந்து அவளுக்குக் கடிதம் வந் திருக்கிறது!"

"உனக்குத் தெரியாது அம்மா, அந்தரங்கத் தில் நடக்கும் நாடகமெல்லாம்! எனக்குக் கூட இப்பொழுதுதான் தெரியும். சமையலறையி லேயே பதுங்கிப் பதுங்கிக் கொண்டிருந்தாலும் உன் சின்னப் பெண் படுகெட்டிக்காரி. எப் படியோ எதிர் வீட்டுச் சந்துரு இவளிடம் மயங்கி விட்டானே!" என்றாள்.

இதற்குமேல் பிரேமாவின் வாயைக் கிளறித் தெரிந்து கொள்ள நான் விரும்ப வில்லை. பட படப்போடு அறைக் கதவைத் தட்டிக் கோதை யைக் கூப்பிட்டேன். அவள் கதவைத் திறந் தாள். அவளை ஏற இறங்க ஒரு தடவை பார்த் தேன். அவள் தன் கண்களிலிருந்து வழிந்த நீர்த் துளியை மெதுவாகப் புடவைத் தலைப் பால் துடைத்துக் கொண்டாள். இதைப் பார்த் ததும் என் இருதயமே சில்லிட்டு விட்டது.

"சீ! அழுது ஜயிக்கப் பார்க்கிறாள்!" என்று முணு முணுத்தாள் பிரேமா.

"பிரேமா! நீ வாயை மூடிக்கொண்டிரு. எல்லாம் எனக்குத் தெரியும்" என்று அவளைக் கண்டித்துவிட்டு "இந்த சின்ன வேளையில் மாடி அறைக்கு வந்து நீ என்ன செய்து கொண் டிருக்கிறாய்!" என்று கோதையைக் கேட்டேன்.

"ஒருவருக்குக் கடிதம் எழுதவேண்டி யிருந் தது. எழுதிக் கொண்டிருந்தேன்" என்றாள் தழுதழுத்த குரலில் கோதை.

"என்ன துணிச்சலாகத் தாயாருக்கே பதில் சொல்லுகிறாள்! துரோகி, இந்த சமயத்தில் அப்பா மாத்திரம் இருந்திருந்தால்......" என்று உறுமினாள் பிரேமா.

பிரேமாவின் வார்த்தைகள் என் காதில் விழாமலில்லை. ஆனால் கோதையின் நிலைதான் என் மனதை உருக்கி விட்டது. "யாருக்கு நீ கடிதம் எழுதுகிறாய்" என்றேன் நான்.

அவள் சிறிது தயங்கினாள். "சந்திரசேகர னுக்கு......" என்றாள் பயத்தோடு.

"சந்திரசேகரனுக்கா! எதற்காக நீ அவ னுக்குக் கடிதம் எழுதவேண்டும்!" என்றேன் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டே.

"அவர் எனக்குக் கடிதம் எழுதினார். அதற்குப் பதில் எழுதுகிறேன்" என்றாள் சிறிதும் தயங்காது.

"அவன் உனக்கு எழுதினானா! என்ன எழுதி னான்......!" என்றேன் துடிப்புடன்.

அவள் மேஜைமீதிருந்த கடிதத்தை எடுத்து என்னிடம் நீட்டி "இதுதான்......" என்றாள்.

நான் அதை வாங்கிப் பார்த்தேன். என் னுடைய மங்கிய கண்களுக்கு அந்த இரவு வேளையில் அந்தக் கடிதத்தைப் படிப்பது சிறிது சிரமமாக இருந்தது. அதை பிரேமா விடம் காட்டி, "இதைக் கொஞ்சம் படி!" என்றேன்.

"அவளுக்கு வந்த கடிதத்தை நான் ஏன் தொடவேண்டும்! அதை நான் படிக்கமாட் டேன். அந்தத் தலைவேதனையை யெல்லாம் படிக்கணும் என்று என் தலையிலே ஒன்றும் எழுதவில்லை" என்றாள் ஆத்திரத்தோடு.

"நானே வேண்டுமானாலும் படித்துச் சொல்லுகிறேன் அம்மா..." என்று சொல்லிக் கோதையே என் கையிலிருந்த கடிதத்தை வாங்கிப் படிக்கலானாள். சிறிதுகூடத் தயக்கம் காட்டாமல், நான் கற்சிலைபோல் நின்றுகொண் டிருந்தேன். அவள் அந்தக் கடிதத்தைப் படிக் கும்போது ஒவ்வொரு வார்த்தையும் என் காதில் பளிச்சுப் பளிச்சென்று விழுந்தது.

"அன்புமிக்க கோதைக்கு,

உன்னிடம் நான் வைத்திருக்கும் எல்லையற்ற அன்பின் தூண்டுதலினால் இந்தக் கடிதத்தை எழுதி நேரிலேயே உன்னிடம் கொடுக்கத் துணிந்தேன். உன் மீது நான் வைத்திருக்கும் அன்பை நீ தெரிந்து கொண்டிருப்பாயோ, மாட்டாயோ! ஆனால் என் இருதயத்தைத் தெரிந்து கொண்டால் நீ என்னிடம் அன்பு செலுத்தத் தவறமாட்டாய். பிறரும் இயற்கை யாக எழுந்த நம்முடைய அன்பிற்கு இடை யூறாக இருக்க மாட்டார்கள்.

நான் உன் வீட்டிற்கு வருவதற்குக் காரணம் உன் சகோதரி பிரேமாவின் அன்பைப் பெறு வதற்காகத் தான் என்று உன் தாயாரும், பிரேமாவும், நீயுங்கூட நினைத்திருக்கலாம். அப்படித்தான் ஒவ்வொருவருக்கும் நினைக்கத் தோன்றும். ஆனால் அது தவறு என்று இப் பொழுது தெளிவாக்க வேண்டிய சந்தர்ப்பம் நெருங்கி விட்டது.

சிறு குழந்தைப் பருவத்திலிருந்து உங்கள் குடும்பத்தோடு நான் நெருங்கிப் பழகி இருக் கிறேன். உன் தாயார் பிரேமாவை எவ்வளவு அருமையாக வளர்த்தாளென்பதும், நீ எவ் வளவு உதாசீனமாக வளர்க்கப்பட்டாய் என்பதும் உலகறிந்த விஷயம். உன் தாயார் மீது நான் பழி சுமத்துவதாக நினைத்து விடாதே. உன்னிடமும் உன் தாயாருக்கு அன்பு இருக்கலாம். சோதனையும் துயரும் நிறைந்த சமயத்தில் நீ பிறந்ததால் அவள் அன்பையும் ஆர்வத்தையும் வெளியே காட்டிக் கொள்ளக் கூசியிருக்கலாம்.

நான் இன்னும் எழுத வேண்டுமா! நான் உன்னை விரும்புகிறேன். உன் குணத்தை விரும்புகிறேன். நீ எனக்கு மனைவியாக வந்தால் நான் என்னை உலகிலேயே பெரிய அதிர்ஷ்ட சாலி என்று எண்ணுவேன்.

பிரேமா என்னை விரும்புகிறாள்! உன்னோடு பழகியதைவிட அவளோடு பழகி இருக்கிறேன். அவளுடைய மண ஆவல் வெட்கத்தைக் கூட விழுங்கி விட்டது. பேச்சுப் போக்கில் தன் விருப்பத்தை நேற்று என்னிடம் சொல்லி விட்டாள். நான் உன்னை விரும்புவதாக அவ ளிடம் சொல்லிவிட்டேன். அவள் இதைக் கேட்டுத் திடுக்கிட்டு சோகத்தில் ஆழ்ந்துவிட் டாள். அவளுக்காக நான் பச்சாத்தாபப் படுவ தைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்! என் மனதிலுள்ளதை நீயும் அறிந்து கொண்டு

விடவேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கடிதத்தை உனக்கு எழுதினேன்.

உன் அன்புள்ள,

சந்திரசேகரன்.

கோதை ஒரு விதமாகக் கடிதத்தை படித்து முடித்தாள். அந்தக் கடிதத்தைப் படிக்கும் போது அவள் குரலில் எவ்வளவு தடங்கல் ஏற்பட்டுத் தழுதழுத்து விம்மியது என்று எனக்குத் தெரியும். அவள் முகத்தை நான் பார்த்த பொழுது அவள் தன் கண்களில் துளிர்த்த நீரைத் துடைத்துக் கொண்டாள். நான் ஒரு பெருமூச்சு விட்டேன். பிரேமாவின் கண்கள் கோவைப் பழம் போல் சிவந்திருந்தன. அவள் வெறியால் துடிக்கும் சிங்கம் போல் உறுமிக் கொண்டிருந்தாள். அவளுக்கு அப்பொழுது ஏற்பட்டிருந்த ஆத்திரமும் பொறாமையும் அவளுடைய அழகான முகத்தை விகாரப்படுத்தி இருந்தன. கோதையிடம் எனக்கு அனுதாபம் இருந்தாலும் அப்பொழுதும் எனக்குப் பிரேமாவிடம் பரிவும் பாசமும் இருந்தன. கோதை தன் ஆயுளில் ஒன்றையுமே விரும்பவில்லை. ஆனால் இப்பொழுது அவள் ஒன்றை மட்டும் விரும்புகிறாள் என்பது எனக்கு நன்றாகத் தெரிந்தது. அந்த விருப்பத்திற்குத் தடங்கலாக இல்லாமல் என் வயிற்றில் பிறந்த பெண்ணாகிய அவளுக்கு நான் சிறிது பரிவு காட்டியிருக்கலாம். அதுதான் என் கடமையும் கூட. ஆனால் பிரேமாவிடம் வைத்துள்ள பரிவும் பாசமும் என் மனச் சாட்சிக்கு விரோதமான முடிவைத்தான் செய்யத் தூண்டின. பிரேமாவின் ஆசைக் கனவு அழிந்தால் என்ன ஆகும் என்ற எண்ணம் என்னை மெய்சிலிர்க்கச் செய்தது.

ஆகவே, நான் கோதையைப் பார்த்து, "நீ அவனுக்கு என்ன பதில் எழுதப் போகிறாய்!" என்று கேட்டேன்.

அவள் சிறிது தயங்கினாள்.

"என்ன பதில் எழுதுவாள்...! நானும் உங்கள் பேரில் அன்பு வைத்து இரவு பகலாய் உருகுகிறேன். அம்மா, அக்கா இருவரையும் லட்சியம் செய்யாமல் நாம் கல்யாணம் செய்து கொண்டு விடலாம் என்று எழுதுவாள்" என்றாள் பிரேமா குத்தலாக.

பிரேமாவின் வாய்த் துடுக்கான வார்த்தைகளை சகித்துக் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. ஆனால் அவ்வளவு இடம் கொடுத்து வளர்த்துவிட்ட பிறகு அவளை அடக்கும் சக்தியும் கண்டிக்கும் உரிமையும் எனக்கு ஏது!

கோதை தன் நெஞ்சில் குமுறும் துயரை அடக்கிக் கொண்டு, "நான் அப்படி எழுதப் போவதில்லை. 'பூரண அபிமானம் வைத்திருக்கும் என் அக்காளின் அன்பை லட்சியம் செய்யாமல் தாங்கள் என் மீது அன்பு வைப்பதை நான் அங்கீகரிக்க முடியாது. அது நான் என் சகோதரிக்குச் செய்யும் துரோகமாகும். என்னை மறந்து விடுங்கள்' என்றுதான் எழுதப் போகிறேன்" என்றாள்.

"அதுதான் சரி. அப்படித்தான் எழுத வேண்டும்" என்றேன் நான். இந்த வார்த்தை என் வாயிலிருந்துதான் வெளி வந்தது. ஆனால் இருதய அந்தரங்கத்தில் என் மனச்சாட்சி குட்டுக் கொண்டிருந்தது. நான் மெதுவாக மாடியிலிருந்து இறங்கிக் கீழே வந்தேன். என்னைப் பிரேமாவும் பின் தொடர்ந்தாள்.

கோதை எவ்வளவு நேரம் உட்கார்ந்து கடிதம் எழுதினாளோ, தெரியாது! எனக்கு இருந்த களைப்பில் படுக்கையில் படுத்தவுடனேயே அயர்ந்து தூங்கி விட்டேன்.

* * *

மறுநாள் காலையில் நான் எழுந்த போது நெடுநேர மாகிவிட்டது. எல்லோருக்கும் முன்னால் எழுந்து வீட்டுக் காரியங்களைக் கவனிக்கும் கோதை அன்று என் கண்ணில் தென்படவேயில்லை. அப்பொழுதுதான் முதல் நாள் இரவு அவள் சந்திரசேகரனுக்குக் கடிதம் எழுதுவதற்காக மாடி அறையிலேயே தங்கியது ஞாபகத்திற்கு வந்தது. இரவு நெடுநேரம் கண் விழித்த களைப்பினால் அங்கேயே படுத்து இன்னும் தூங்குகிறாளோ என்று நினைத்து மாடி அறைக்குச் சென்றேன்.

கோதை நாற்காலியில் உட்கார்ந்த வண்ணமே மேஜை மீது சாய்ந்து படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். முதல் நாள் எரிந்த விளக்கு இன்னும் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. மேஜை மீது எழுதுகோலும் காகிதமும் சிதறிக் கிடந்தன. நான் அவள் முதுகில் கை வைத்து "கோதை எழுந்திரு" என்றேன். அவள் எழுந்திருக்கவில்லை. மறுபடியும் தீவிரமாக அவளை எழுப்பும் முயற்சியில் ஈடுபட்டேன். ஆனால் அவள் எழுந்திருக்கவேயில்லை. அவள் எழுந்திருக்காத தூக்கத்தில் ஆழ்ந்து விட்டாள். திடீரென்று என்னை நெருப்புக் குழியில் தள்ளிவிட்டது போன்ற உணர்ச்சி அப்பொழுது ஏற்பட்டது. என் உயிர் உடலெல்லாம் வெலவெலத்துப் போய் விட்டன. தடுமாற்றத்துடன் மேஜையைப் பார்த்தேன். ஒரு துண்டுக் காகிதத்தில் ஏதோ எழுதி வைக்கப்பட்டிருந்தது.


"நான் பிறந்ததிலிருந்து எதையும் விரும்பவில்லை. எனக்கு எதிலும் விருப்பம் உண்டாகும்படி எவரும் தூண்டி விட்டதுமில்லை. உலகில் ஒன்றையுமே விரும்பாத என்னை ஒருவர் விரும்பினார். அவரை நானும் விரும்பினேன். இந்த உலகத்தில் நான் விரும்பியது ஒன்றே ஒன்று அதுதான். நான் உயிர் வாழவேண்டுமென்றால் அதற்காகத்தான் உயிர் வாழ வேண்டும். ஆனால் என் விருப்பத்துக்கு இடையூறாக உன்னைவிட என்னால் நீக்க முடியாது. ஆகையால் நான் சாவை விரும்புவதுதான் மேல் என்று நினைக்கிறேன். "கோதை"

அதைப் படித்த நான் அழுதேன். அலறினேன். என்ன புண்ணியம்! நானும் ஒரு பெண்தான். நானும் ஒரு தாய்தான். இரண்டு பெண்களைப் பெற்றேன். ஒருத்தி அழகில் சிறந்திருந்தாள். ஒருத்தி குணத்தில் சிறந்திருந்தாள். ஒருத்தியை மிகவும் செல்வமாக வளர்த்தேன்; ஒருத்தியை மிகவும் அலட்சியம் செய்தேன், என் பேதமைப் புத்தியால். அதனுடைய பலாபலன் என்ன வென்பதைப் பூரணமாக உணர்ந்துவிட்டேன். என்னை மெய்மறந்து ஆனந்தத்தில் திளைக்கும்படி எந்தத் தாயுணர்ச்சி தூண்டியதோ, அதே தாயுணர்ச்சி இப்பொழுது ஆழ்ந்த துயரக் கடலுள் என்னை அமிழ்த்தி யிருக்கிறது.

அஜீர்ணத்தின் வேதனையா?

இவ்விதம் தீர்த்துக் கொள்ளவும்...





சாப்பிட்ட பின் அஜீர்ணத்தால் வருந்த வேண்டிவரும் என்று வசீகரமான ருசியுள்ள ஆகாரத்தை சாப்பிட பயப்படுகிறீரா? அப்படியானால், நிச்சயமும் நம்பிக்கையுள்ளதுவும் கட்டாயம் பயன் தரும் சுலப வழி இதோ இருக்கிறது. சாப்பிட்டவுடன் ஒரு தேக்கரண்டி அளவு பிஸ்மாக் (4 அல்லது 5 மாத்திரை) யை கொஞ்சம் ஜலத்துடன் எடுத்துக் கொள்ளவும்.

பிஸ்மாக்கிலுள்ள மருந்து உடனே வேலைசெய்ய தொடங்கி வயிற்றிலுள்ள அதிக புளிப்பை சமனப்படுத்தி மிருதுவான குடல் ஓரங்களை சாந்தப்படுத்தி சாப்பாடு கெடாமல் பாதுகாக்கிறது. இனி நாட்கள் ஒவ்வொரு சாப்பாட்டிற்கு பிறகு பிஸ்மாக்-மருந்து அளவை திரும்பத் திரும்ப சாப்பிடவும், அதன் குணப்படுத்தும் வேலையை தொடர்ந்து செய்யும்.

"பிஸ்மாக்" எவ்வாறு வயிறு விரைந்து குணமளிக்கிறது.

வயிற்றுக் கோளாறுகளுக்கெல்லாம் முக்கிய காரணமான, வயிற்றிலுள்ள அதிகப்படியான புளிப்பை முறித்துப்பயனற்றதாகச் செய்கிறது. "பிஸ்மாக்" புளிப்பை முறிக்கும் பொருள் அதிதுரிதமாக வலியைக் குறைத்தவுடன் மற்றப் பொருள்கள் வேலையைத் துவக்குகின்றன. ஒன்று புளிப்பு வயிற்றிலுள் மேலும் சேருவதைத் தடுப்பது. மற்றொன்று வயிற்றின் உள்தோலின் எரிச்சலைக் குறைத்துக் குணப்படுத்துவது.



மாத்திரைகளாகவும் பவுடராகவும் கிடைக்கும்

'பிஸ்மாக்'

க்ஷணமே அஜீர்ணத்தைப் போக்குகிறது

இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:

ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிட்., பம்பாய்-1

பிராஞ்சுகள்: கல்கத்தா – மதராஸ் – டில்லி

கீல்வாதத்தினால் சித்திரவதைக்கு உள்ளானார்;

"க்ரூஷன்" சிகிச்சைக்குப் பிறகு

பூரணகுணம் அடைந்தார்





சமூக வாழ்வில் இவருக்குத் தோல்விதான். இவரது வியாபாரமும் மந்தமுற்றது. ஆனால் ஒரு முறை க்ருஷன் சிகிச்சைக்குப் பின்னர் பூரண குணம் அடைந்தார். அவரது கடிதமே அதை விளக்குகிறது:—


"பத்து மாதங்களுக்கு முன்னர் கீல்வாதத்தினாலும், நரம்பு வலிகளாலும் மிகுந்த அவஸ்தைப் பட்டேன். உடம்பெங்கும் வலியும், சில நாட்களில் படுக்கையினின்று எழுந்து வேலைக்குப் போக முடியாத படியும் இருந்தது. என்னை விசாரிக்க வந்த ஒரு நண்பன் "க்ருஷன்" உபயோகிக்குமாறு ஆலோசனை கூறினான். அவ்வாறே செய்ததில் வலிகள் நாளுக்கு நாள் குறைந்து வருவதை உணர்ந்தேன். அன்று முதல் தவறாமல் நாள்தோறும் வேலைக்குப் போய் வருகிறேன். "க்ருஷனு"க்கு மெத்த வந்தனம்; நான் இப்பொழுது ஒரு புது மனிதனாகி விட்டேன். மிக்க சந்தோஷத்துடன் இதை ஒவ்வொருவருக்கும் சிபாரிசு செய்வேன்."—A.R.

குடல்கள் அடைபடாமலும், மூத்திர கோசங்கள் நன்கு இயங்குமாறு வைத்திருப்பதுமே, கீல்வாத சிகிச்சைக்கு முதற்படி. மூத்திரம் நன்கு வெளிச் செல்லுமாறு செய்வதும், மலமிளக்கியாயும் ஆன இருவிதத் தொழிலால் "க்ருஷன்" மேற்சொன்ன வேலைகளைச் சுலபமாகவும், அபாயமின்றியும் செய்கிறது. தேகத்திற்குக் கெடுதி விளைவிக்கும் விஷப் பொருள்கள், மூத்திர கோசங்கள் வழியாக அறவே வெளித் தள்ளப் படுகின்றன. இயற்கையாகவும் ஒழுங்காகவும் இயங்குமாறு குடல்கள் மெல்லத் தூண்டப்படுகின்றன. இவற்றின் பலனாக கீல்வாத வலிகளின் மறைவும், புத்துயிர் பெற்ற பலமும், இளமையும் உண்டாகின்றன.

இன்றே "க்ருஷன்" உட்கொள்ள ஆரம்பியுங்கள். சில நாட்களுக்குள்ளாகவே ஆச்சரியகரமான மாறுதல்களை உணர்வீர்கள். எல்லா கெமிஸ்டுகளிடமும் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.




AD. No. KS1D. 17



ஷாலிமார் தயாரிப்புகளை ஆர்டர் செய்யும்போது எந்த வேலைக்காக என்பதை தெரிவிக்கவும்.
நீண்டகாலம் உழைக்கக்கூடிய
பளபளப்பான வர்ணப்பூச்சு
அடித்தாற்போல் சொல்லுங்கள்...
ஷாலிமார்
ட்யூரோலாக்
மிகச்சிறந்த எனமல்
33 அழகிய வர்ணங்களில் கிடைக்கும் ஷாலிமார் ட்யூரோலாக் எனமல் பிரகாசமும், மிக பளபளப்பும், பீங்கான் போன்ற மழமழப்பும் உளை; இரவுக்கிரவே காய்ந்து விடும். வீட்டு உட்புற வேலைகளுக்கும், மேஜை, நாற்காலி, கதவுகளுக்கும் ஏற்றவை.
பூரண பயன்பெற ட்யூரோலாக்கை இரு பூச்சு கொடுக்கவும்.
SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., LTD.,
Post Box 136, Madras 1. Importers & Distributors for Ceylon :
Lewis Brown & Co., Ltd., Post Box 85, Colombo

வெகுநாள் நீடித்து இருப்பதற்காக

ஏஸிஸி சிமெண்டால் கட்டப்பட்டது



தி அஸோஸியேடட் சிமெண்டு கம்பெனீஸ் லிமிடெட்

இவர்களின் வியாபார மானேஜர்கள்

தி சிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்

Edited, Printed and Published by R. Krishnamurthy at "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

REGD. No. M. 4392

